உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை (28.12.2010)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 032

# 3 தமிழ் எம்.பிக்கள் உட்பட மேலும் 8 பேருக்கு பிரதி அமைச்சுப் பதவி

## ஜனவரி 6 ஆம் திகதி சத்தியப்பிரமாணம்

கொழும்பு, டிசெ.28

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசுப் பக்கம் தாவிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எட்டுப்பேர் ஜனவரி மாதம் பிரதியமைச்சர்களாகப் பதவியேற்கின்றனர்.

ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் அரசுப் பக்கம் தாவினர். இவர்களில் லக்ஷ்மன் செனவிரத்ன, ஏர்ள் குணசேகர ஆகியோருக்கு மாத்திரம் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டன.

இதனால் ஏனைய நால்வரும் அதிருப்தியடைந்திருந்தனர். இதனால், இவர்கள் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பிவிடாமல் தடுக்க, அவர்களுக்கு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி இந்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில்(28 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய பாதுகாப்புச் செயலாளர் முப்படை அதிகாரிகளுடன் வருகை

## பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதே நோக்கம்

கொழும்பு, டிசெம்பர் 28

விடுதலைப் புலிகள் இயக்கம் முடக்கப்பட்டதன் பின்னர் இலங்கை - இந்தியா இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது குறித்து ஆராய்வதற்காக இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் நேற்று கொழும்பை வந்தடைந்தார். தனது மூன்று நாள் பயணத்தில் இலங்கையின் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் அவர், பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி இருதரப்பு உறவுகளை மேம்படுத்த உழைப்பார் என்று புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

ஏழுபேர் கொண்ட குழுவுடன் பிரதீப் குமார் நேற்றுக் காலை கொழும்பை வந்தடைந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை அவர் தனது இந்தப் பயணத்தில் சந்தித்துப் பேச உள்ளார். பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை அவரது அலுவலகத்தில் நேற்று மாலை சந்தித்துப்பேசினார்.

இலங்கையில் பணியாற்றிய வேளையில் உயிரிழந்த இந்திய அமைதிப் படையினரின் நினைவிடத்திற்குச் சென்று அவர் அஞ்சலியும் செலுத்துவார். அவருடன் வந்துள்ள குழுவில் இந்திய முப்படைகளையும் சேர்ந்த மூத்த அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் எதிர்காலத்தில் எத்தகைய ஆயுத, பயிற்சி உதவிகள் இலங்கைக்கு வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற விடயங்கள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் பிரதீப் குமாருக்கும் இடையிலான சந்திப்பின் போது (28 ஆம் பக்கம் பார்க்க)

### நடுக் கடலில் தத்தளித்த தமிழக மீனவர்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை இயந்திரக் கோளாறு காரணமாகக் கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் நால்வர் சுழிபுரம் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் மல்லிப்பட்டினத்தைச் சேர்ந்த இவர்கள் அனைவரும் கடற்படையினரின் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்(28 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளத்தால் 2 லட்சம் பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 28

ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் 24 மணி நேரமாக தெற்கில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக இதுவரை 2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் நேற்றுத் (28 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்கள் பகுதிகளில் தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடவைத்துப் பயனில்லை

## தேசிய பாதுகாப்பு தினம் ஒரு மனித உரிமை மீறல் என்கிறார் சங்கரி

யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ்ப் பகுதிகளிலே தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் பாட வைத்து நாட்டுப்பற்றுப் பற்றியும் இன ஒற்றுமை பற்றியும் பிரதமர் யாழ்ப்பாணத்தில் பேசுவதால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை என்று காட்டமாகத் தெரிவித்திருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு குறித்து ஆனந்தசங்கரி நேற்று அறிக்கை ஒன்றை (28 ஆம் பக்கம் பார்க்க)

# உரும்பிராயில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொலை

## நேற்று முன்தினம் இரவு பயங்கரம்

யாழ்ப்பாணம், டிசெ. 28

உரும்பிராய் மூன்று கோயிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிறு இரவு இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரான மா.சிவலிங்கம் பலியாகியுள்ளார்.

அவரது வீட்டில் வைத்து இரவு 10.30 மணியளவில் ஆயுததாரி ஒருவரால் இவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைச்சம்பவம் போன்ற பாணியில் ஆயுததாரி பிரதிக் கல்விப் பணிப்பாளரை கொலை செய்யும் நோக்குடனேயே வந்திருக்க வேண்டும் என்று ஊர் மக்கள் பலரும் கருத்துத் வெளியிட்டுள்ளனர்.

(28 ஆம் பக்கம் பார்க்க)

### விடுதலை கோரி தமிழ்க் கைதிகள் நல்லிணக்க குழுவுக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ. 28

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்கு உதவுமாறு கோரி நல்லிணக்க ஆணைக்குழுவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

சிறைச்சாலைகளில் பல வருடங்களாகப் பிணை இன்றியும் துரித விசாரணைகள் இன்றியும் வாடிக்கொண்டிருக்கும் அர சியல் கைதிகளாகிய நாங்கள் தங்களிடம் மனமுவந்து கோருவது, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல் லிணக்க ஆணைக் குழுவாகிய தங்களின் செயற் பாடுகள்(28 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற் போனோர் தொடர்பான ஐ.நாவின் அறிக்கை ஜனவரியில்

கொழும்பு, டிசெ.28

இலங்கையில் இந்த வருடத்தில் இடம்பெற்ற ஆள்கடத்தல்கள் மற்றும் காணாமற் போதல் சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை எதிர்வரும் மாதத்தில் வெளியிடவுள்ளது என்று ஆள் கடத்தல் மற்றும் காணாமற் போதல் சம்பவங்கள் தொடர்பான ஐ.நாவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

ஆள்கடத்தல் மற்றும் காணாமற் போதல் போன்ற சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் சர்வதேச பிரகடனத்தில் இதுவரை 21 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன எனவும், இப்பிரகடனம் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆள்கடத்தல்கள், காணாமற் போதல் சம்பவங்கள் தொடர்பிலான சர்வதேச பிரகடனத்தில் இலங்கையும் கைச்சாத்திட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கையில் ஆள்கடத்தல், காணாமற் போதல் சம்பவங்கள் தொடர்பான 100 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவித்துள்ள ஐ.நா. சபை, இது குறித்து இலங்கை அரசுக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

குறிப்பிட்ட பிரகடனத்துக்கு இலங்கை(28 ஆம் பக்கம் பார்க்க)

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....

சொல்பெக் EW 050




Hayleys
ஹேலீஸ் காட்சியறை
47, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 2221292

NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்
A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



NIBM இன் கணினிக் கற்கைநெறிகள்

கணினிதொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கைநெறி (Certification in Computer Science)

அலுவலகர்களுக்கான கணினி கற்கைநெறி (certification on computers for officers)

அனுமதி பரீட்சை ஆரம்பமாகியுள்ளது

ஆகக் குறைந்த கல்வி தகைமை
க.பொ.த சாதாரண தரம் (G.C.E (O/L))

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மீண்டும் படுகொலைகள்...



கடந்த முப்பது வருட காலமாக இடம்பெற்று வந்த யுத்தத்தினை முடிவு செய்து தமிழ் மக்கள் குறிப்பாக குடாநாட்டு மக்கள் தற்போது சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்கும் அமைதியை நேசிப்பதற்கும் வழியமைத்துக் கொடுத்த அதியுத்தம ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பாராட்டுகின்றோம் என்று யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி வருகை தருகின்ற அமைச்சர்கள் வாயார புகழ்ந்து நெஞ்சார வாழ்த்துத் தெரிவித்துச் செல்கிறார்கள்.

''யுத்தம் முடிவடைந்துள்ளது இனி மேல் எந்தத் தமிழ் மகனும் துப்பாக்கியால் சாகமாட்டான்'' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்ததும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரப்பட வேண்டும்.

ஆனால் கள நிலைமைகள் அப்படியில்லை. தற்போது குடாநாட்டில் மீண்டும் துப்பாக்கி முனைகள் நீட்டப்பட்டு உயிர் களைத் துவம்சம் செய்யும் படலம் தொடங்கி விட்டது. மக்களின் முகங்களில் அச்ச உணர்வுகள் ஊறிப்போய் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்கிற பயப் பீதியுடன் உறைந்துள்ளனர்.

கொள்ளையடிப்பு என்ற போர்வையில் உன்னதமான உயிர்களைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள் முகமூடி அணிந்த சிலர். சங்கானையில் அண்மையில் அந்தணர்களைக் குறிவைத்து கொள்ளையர்கள் மேற்கொண்ட கொடூர மூர்க்கத்தனமான சூட்டுச் சம்பவத்தில் பிரதம குருக்கள் ஒருவரின் உயிர் பறி போனது. அத்தோடு நின்றுவிடாது. அப்பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கி முனையில் பல வீடுகளில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

அளவெட்டிப்பகுதியில் உள்ள வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கு நின்ற காவல் நாயினைச் சுட்டுக் கொன்று அங்கிருந்தவர்களை அச்சத்துக்குள் ஆழ்த்திவிட்டு பெருமளவான நகைகளைச் சூறையாடிச்சென்றுள்ளனர்.

இது இவ்வாறிருக்கையில் உரும்பிராயில் மூன்று கோயிலடிப்பகுதியில் நேற்றுமுன்தினமிரவு 10.30 மணியளவில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா. சிவலிங்கம் அவரது வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சூட்டுச்சம்பவம் கொலையா? கொள்ளையா? என்பதை ஆராயும் பொருட்டு சம்பவம் நடந்த வீட்டுக்குச் சென்றோம்.

இங்கு நடந்தவற்றை அலசி விசாரித்தோம். அப்போது கிடைத்த தகவல்கள்.

''மரணமான பிரதிக் கல்விப் பணிப்பாளரின் மனைவி ஓர் ஆசிரியை, இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர். இவரது தாயார் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.



தடயங்களைத் தேடும் பொலிஸார்..

அவரது தாயாரின் வீடு இவரது வீட்டுக்கருகில் சுமார் 200 மீற்றர்தூரத்தில் தான் அமைந்துள்ளது. சம்பவதினம் இரவு மனைவியும் இரண்டு ஆண்மகன்மாரும் அந்த தான் வீட்டில் தங்கியிருந்தனர்.

## கொள்ளை என்ற போர்வையில்....

பிரதிக் கல்விப் பணிப்பாளர் தனது 13 வயதுடைய மகளுடன் வீட்டில் இருந்துள்ளார்.

தகப்பனும் மகளும் தமது வழமையான பணிகளை நிறைவு செய்துவிட்டு நித்திரைக்குச் செல்லமுற்பட்டபோது,

''முகமூடி எதுவும் அணியாது கையில் துப்பாக்கியுடன் வீட்டு விறாந்தையில் ஒருவன் நிற்கிறான். இதைக் கண்டு அச்சமடைந்த மகள் தகப்பனின் கழுத்தினைக் கட்டிப் பிடித்துக் கதறினாள் என்கின்றனர் உறவினர்கள்.

''சத்தம் போடக்கூடாது உன்ர காதிலிருக்கும் தோட்டைக் கழற்றித் தா..'' என்று அந்த ஆயுததாரி அதட்டுகின்றான். பிள்ளை தோட்டைக் கழற்றிக் கொண்டிருந்தது. அந்த ஆயுததாரி தகப்பனின் நெஞ்சில் படபடவென துப்பாக்கியால் சுடுகின்றான்.

அவள் திகைத்துப் போய் மௌனித்துப் போகிறாள்...

ஆயுததாரி வீட்டின் கதவினைத் திறந்து கழற்றிக் கொடுத்த தோட்டினையும் பெற்றுக்கொண்டு தன்பாட்டில் செல்கிறான்.

அதிர்ச்சியில் அடிபட்டுப் பீதியில் உறைந்திருந்த அந்தச் சிறுமி தந்தை குற்றுயிராய்க் கிடக்கும் அவலக் காட்சியைக் கண்டு அலறுகிறாள்.

அப்போதுதான் அவரது மனைவியும் இரண்டு மகன்மாரும் அயலில் உள்ளவர்களும் அங்கு ஓடிப் போகிறார்கள்.

உடனடியாகக் கோப்பாய்ப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்கள். அங்கு இரவு 11 மணிக்கு விரைந்த பொலிஸார் சுடுபட்டுக் கிடந்த பிரதிக் கல்விப் பணிப்பாளரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

அவரைக் கொண்டு செல்லும் போதே அவரது உயிர் பிரிந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

குறித்த ஆயுததாரி வீட்டுக்குள் எவ்வாறு சென்றான்? புதிர் விடுபடவில்லை. கதவு உடைக்கப்பட வில்லை. யன்னல்களும் அவ்வாறு தான். கூரைப் பகுதியால் சென்றதற்கான சான்றுகளையும் காணமுடியவில்லை.

அப்படியிருக்கையில் உள்ளே எப்படிச் சென்றிருக்க முடியும் என்கின்ற கேள்வி எழுகிறது. தன்னந் தனியாக முகமூடியில்லாமல் ஆயுதத்துடன் என்ன துணிவோடு அங்கு சென்றுள்ளான்.

வீட்டில் ஏராளமான பெறுமதி மிக்க பொருள்கள் உள்ளதாகவும் அவை எதுவு கொள்ளையிடப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. ஆக ஒரு சோடித் தோட்டுக்காகவா அங்கு சென்றான்? அல்லது அவரைக் கொலை செய்யத் தான் போனானோ என்ற பலத்த சந்தேகங்கள் அப்பகுதி மக்கள் மத்தியில் எழுந்ததுள்ளன.

அங்கு வந்து வெறியாட்டம் நடத்திய ஆயுததாரி எவ்வாறு திரும்பிச் சென்றுள்ளான் என்பது மர்மமாகவே உள்ளது. ஏனென்றால் அப்பகுதியில் வாகன இரைச்சல் எதுவும் கேட்கவில்லை என்றும் அப்பகுதியில் உள்ள அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், வீட்டின் வளாகத்தில் சிகரட் பிடித்ததற்கான பெட்டியொன்று உள்ளதாக இறந்தவரின் மகன் சொன்னார்.

மரணமான பிரதிக் கல்விப் பணிப்பாளர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார் என்றும் அவர் எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் செல்லாதவர். தான் உண்டு தன்பாடுண்டு என்ற மென்மையான சுபாவம் நிறைந்தவர் என்றும் வலிகாம் வலயத்தில் கடமைபுரியும் இவரது சக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

**கவிநேசன்**

அங்கு நடந்த சம்பவங்களையும், பிற காரணிகளையும் ஆராய்ந்து பார்க்கும் போது அங்கு நடந்தது கொள்ளையல்ல கொலை என்பதை ஓரளவு ஊகிக்க முடிகின்றது.

கொள்ளையடிப்பு என்ற போர்வையில் - தோரணையில் மீண்டும் படுகொலைகள் யாழில் நடக்கப் போகின்றனவா? என்ற அச்சம் எல்லோருடைய மனங்களிலும் ஆழப் பதியத் தொடங்கியுள்ளது.

எல்லாவற்றையும் இழந்து என்ன செய்வது, ஏது செய்வது என்ற நிலை தடுமாறி நிற்கும் குடாநாட்டு மக்களுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழல் ஓரளவு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது என்று எல்லோரும் மனதைத் தேற்றிக் கொண்டிருக்கும் போது மீண்டும் துப்பாக்கி முனைகள் தமிழ் மக்களை நோக்கி நீள்வதைக் கண்டு அவர்கள் அச்சம், பீதியால் உறைந்து போய் உள்ளார்கள்.

ஆயுதம் கொண்டு நடமாடும் சூழ்நிலையை உருவாக்கும்போது அது இன்னும் கொலைகள் நடக்க ஏதுவாக அமையப் பெறும்.

ஆகையால் இத்தகைய வேண்டத்தகாத சம்பவங்கள் மேன்மேலும் நடக்க விடாமல் உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ''ஏனெனில் எல்லாப் பொறுப்பும் அவர்களுக்கே''. ★

---

## தரம் ஐந்து புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளி வெளியீடு

கொழும்பு, டிசெ. 28

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் தமிழ்ப் பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று வெளியிடப்பட்டன.

றோயல் கல்லூரி, கொழும்பு - 177, டி.எஸ்.சேனாநாயக்க ம.வி., கொழும்பு -167, யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் - 149, சாஹிரா கல்லூரி, கல்முனை-146, ஸ்ரீ கோணேஸ்வரா இந்து ம.வி., திருகோணமலை-144, இந்துக் கல்லூரி, கொழும்பு - 04 -141, முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 04 -164, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு - 04 -157, பதியுதீன் மகளிர் ம.வி., கண்டி - 156, மஹ்மூத் மகளிர் கல்லூரி , கல்முனை-154,புனித கிளெயார் மகளிர் கல்லூரி,கொழும்பு - 06 -153, வின்சன்ட் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு -151, வேம் படி மகளிர் கல்லூரி , யாழ்ப்பாணம்-147, ஹைலன்ட் ம.ம.வி.,அட்டன் -157, சாஹிரா கல்லூரி,மாவனல்லை -152, அல்.மின்ஹாஜ் ம.ம.வி. , ஹப்புகஸ்தலாவ -150, மதினா முஸ்லிம் ம.ம.வி., மடவளை - 149,பதுரியா முஸ்லிம் ம.ம.வி., மாவனல்ல-148, கெக்குணகொல்ல முஸ்லிம் ம.வி., கெக்குணகொல்ல-147, கொக்குவில் இந்து வித்தியாலயம், கொக்குவில்-146, [illegible] ம.வி., நுவரெலியா-145, கேம்பிரிட்ஜ் தமிழ் வித்தியாலயம் [illegible] 14[illegible] [illegible] இருக்கின்றது.

(த-250)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர் தங்க நகை அணிவதைத் தவிருங்கள்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் தங்க நகைகள் அணிந்து வருவதை இயன்றவரை தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் தங்கள் உடைமைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வைத்தியசாலைக்குள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதால் தங்க நகைகளை அணிந்து வருவதை இயன்றவரை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அண்மையில் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவந்த வயோதிபமாது ஒரு [illegible] நகை களவாடப்பட்டுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப மாது வெளிநோயாளர் பகுதிக்கு வந்திருந்த வேளை அவரிடம் தன்னை வைத்தியசாலை ஊழியர் என்று அறிமுகப்படுத்திய நபர் ஒருவர் வைத்தியசாலைக்கு தங்கநகை போடக் கூடாது எனக் கூறி ''நகையைக் கழற்றித் தாருங்கள், நாங்கள் பாதுகாத்து தருகின்றோம்'' என்று தெரிவித்துள்ளார்.

அப்பாவியான அந்த வயோதிப மாது தங்க நகையைக் கழற்றிக் கொடுத்துள்ளார். அதனைப் பெற்றுக்கொண்ட அந்த நபர் தலைமறைவாகிவிட்டார்.

எனவே நோயாளிகள் தமது நகைகளை மட்டுமன்றி கைத்தொலைபேசி மற்றும் உடைமைகளைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் காங்கிரஸ் கட்சியுடன் பேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம்

கொழும்பு, டிசெ. 28

ஈழத்தமிழர்கள் விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் தற்போதைய நிலைப்பாடு குறித்து கலந்துரையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம் வெளியிட்டுள்ளது.

அண்மையில் சென்னையில் துறைசார் வல்லுநர்களை சந்தித்த போது காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ராகுல் காந்தி தமிழர்களுக்கு இலங்கை அரசாங்கம் போதிய உதவிகளை வழங்கவில்லை என்று கூறியிருந்தார்.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில்,

ஈழத்தமிழர்கள் தொடர்பாக ஆளும் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ராகுல்காந்தி அண்மையில் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக விளக்கங்கள் தேவைப்படுகின்றன.

. தேசியப் பிரச்சினை தொடர்பான இந்திய மத்திய அரசின் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது தொடர்பாகக் காங்கிரஸ் கட்சியுடனும் இந்திய அரசுடனும் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராகவே உள்ளது. இந்தியாவை ஆளும் காங்கிரஸ் மூத்த தலைவர் ஒருவர் இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆனாலும் இந்தியாவின் மத்திய அரசின் அதிகாரபூர்வமான நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு விரும்புகிறோம் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# தனியார் பல்கலைக்கழகம்; சட்டமூலம் பெப்ரவரியில்

கொழும்பு, டிசெ. 28

தனியார் பல்கலைக் கழகங்களை அமைப்பது தொடர்பான சட்டமூலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண, கருத்துத் தெரிவிக்கையில், இது தொடர் பான சட்டமூலங்களை அமைப் பதற்கு சட்டத் திணைக்களம் விரைவான நடவடிக்ககளைமேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்த சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைக்க அனுமதிகிடைக்கப்பெறும்.

இந்த நிலையில் இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு இதுவரை 5 இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்களில் 20 சதவீதமானோர், அமைக்கப்படவுள்ள தனியார் பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டிருப்பதாகவும் உயர் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (த)

# யானை தாக்கி தம்பதி பலி மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 28

மட்டக்களப்பில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான தம்பதியொன்று ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பின் புனானைப் பிரதேசத்தில் இச்சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.

குடும்பத்தினர் அனைவரும் வயலில் காவலுக்கு இருந்த வேளை திடீரெனக் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். அதன் போது மகன், மருமகள் தப்பியோட வயதான தம்பதி மட்டும் யானையிடம் வசமாகச் சிக்கிக் கொண்டுள்ளனர்.

இறந்தவர்கள் பட்டியடி, கல்குடாவைச் சேர்ந்த செல்லையா முருகுப்பிள்ளை மற்றும் அவரது மனைவியான அரசம்மா ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாகப் பெய்து வரும் அடைமழை காரணமாகக் காட்டு யானைகளின் தாக்குதல் புனானை, வாகனேரி, ஒடியாமடு, கிரிமிச்சை, தோணிதாண்டமடு, கட்டுமுறிவு போன்ற இடங்களில் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# தெங்குச் செய்கையாளருடன் அமைச்சர் பஸில் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 28

தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் தெங்கு உற்பத்தியாளர்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கும் இடையில் அலரி மாளிகையில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

நாட்டில் தேங்காய் பற்றாக் குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து அதற்கான பதிலீட்டு முறைகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. தெங்கு உற்பத்தியாளர்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

எதிர்காலத்தில் பற்றாக் குறை ஏற்படாதவாறு முன்னேற்பாட்டுடன் செயற்படுதல் மற்றும் உர மானியம் வழங்குதல் போன்ற விடயங்களும் இதன் போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (த)

# புதிய சிறுவர் இல்லங்கள் அமைப்பது வடக்கு கிழக்கில் கைவிடப்பட்டது

கொழும்பு, டிசெ. 28

வடக்கு மற்றும் கிழக்கில் சிறுவர் இல்லங்களைப் புதிதாக நிர்மாணித்தல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

தன்னார்வ நிறுவனங்கள் இப்பகுதிகளில் அளவுக்கதிகமாகச் சிறுவர் இல்லங்களை நிர்மாணித்தமையே இதற்குக் காரணமென நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தனகுறிப்பிட்டார்.

அத்துடன் இதுவரை பதிவு செய்யப்படாதுள்ள சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார். சிறுவர்களை இல்லங்களில் சேர்ப்பதைக் குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சிறுவர் இல்லங்களை நிர்மாணிக்க ஆர்வமுள்ள தன்னார்வ அமைப்புகளிடம் வலியுறுத்துவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (த)

# முன்னணிப் பாடசாலை அதிபர்கள் மீது கல்வியமைச்சர் பந்துல குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 28

சில முன்னணிப் பாடசாலைகளின் அதிபர்கள் கல்வி அமைச்சுக்குத் தவறான தகவல்களை வழங்கிவிட்டு, தேவைக்கதிகமான ஆளணி மற்றும் பௌதிக வளங்களைப் பெற்றுக்கொள்வதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

இத்தகைய அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்றைதான் நியமிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிபர்கள் அமைச்சை தவறாக வழிநடத்துகின்றனர். யதார்த்த ரீதியாக தேவை இல்லாத போதிலும் நேரசூசிகளை காண்பித்து கூடுதலான ஆசிரியர்களை கோருகின்றனர்.

இக்கோரிக்கைகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொறிமுறையொன்று இல்லாத நிலையில் அதை உண்மையென அமைச்சு கருதுகிறது. ஆனால் தமது பாடசாலையிலிருந்து ஆசிரியர்கள் இடமாற்றப்படாமல் இருப்பதற்காக மேற்படி அதிபர்கள் வேண்டுமென்றே இதைச் செய்கின்றனர்' என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சில அதிபர்கள் சரியான காரணம் எதுவும் இல்லாமல் வகுப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றனர். ஒரு வகுப்பில் மாணவர்களை உள்ளடக்க முடியுமாக இருந்தபோதிலும் இரு வகுப்புகளாகப் பிரிக்கின்றனர். இத்தகைய அதிபர்கள் குறித்து நாம் விசாரிக்க விரும்புகிறோம்.

இதற்கான விசாரணைப் பிரிவுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் சேர்க்கப்படுவர். அவர்களுக்கு குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் இருக்க வேண்டும். இத்தகைய அனுபவம் கொண்ட ஆசிரியர்களும் கருத்திற்கொள்ளப்படுவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரும் தமது பாடசாலைகளிலுள்ள வசதிகள் மற்றும் தேவைகள் குறித்த விவரங்களை டிசெம்பர் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டுமெனவம் கல்வியமைச்சர் கோரியுள்ளார். (த)

# பருத்தித்துறையில் வெட்டப்பட்ட டொல்பின் மீனுடன் ஐவர் கைது

வடமராட்சி, டிசெ. 28

பருத்தித்துறை கற்கோவலம் பகுதியில் வெட்டப்பட்ட டொல்பின் மீனுடன் 5 பேர் நேற்று பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் பருத்தித்துறை நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

அவர்கள் ஐவரையும் தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்த நீதிவான் வெட்டப்பட்ட டொல்பின் மீனை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஓ-23-236)

# காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகத்தை நேற்று மகாண ஆளுநர் திறந்து வைத்தார்




காரைநகர், டிசெ. 28

காரைநகர் கோட்டக் கல்வி அலுவலகம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியினால் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அலுவலகத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழா இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அரச நடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக வலந்தலைச் சந்தியில் இருந்து விருந்தினர்கள் மங்கள வாத்தியம், மாணவர்களின் 'பாண்ட்' அணிவகுப்புடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். கல்லூரி மாணவிகள் தமிழில் தேசிய கீதம் இசைக்க ஆளுநரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

வட மாகாணத்தின் 34 ஆவது கல்விக் கோட்டமாக அமைக்கப்பட்ட காரைநகர் கல்விக் கோட்டப் பணிப்பாளராக பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய ப.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். (த-250)

# சரியான திட்டமின்றி அமைச்சர்கள் நியமனம் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி கவலை

கொழும்பு, டிசெ. 28

அமைச்சரவை அமைச்சர்கள் சரியான திட்டம் எதுவும் இன்றி நியமிக்கப்பட்டுள்ளதாக மூத்த அமைச்சரும் முன்னாள் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இங்கிரியவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது, குறிப்பிட்ட சில அமைச்சர்களுக்கு பணியாற்ற கட்டடங்கள் இல்லை. செயலாளர்களோ, வாகனங்களோ, அதிகாரிகளோ கூட வழங்கப்படவில்லை.

சிறந்த அரசாட்சிக்கும், தேசிய அபிவிருத்திக்கும் பொருத்தமான திட்டங்கள் தேவை.

விலைவாசி உயர்வு மோசமாக உள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க குறுகிய கால, நீண்டகாலத் தீர்வுத் திட்டங்கள் அவசியம்.

இதற்கெல்லாம் சரியான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் .என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இந்தக் கருத்து கொழும்பு அரசியலில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

பிரதமர் பதவி அவரிடம் இருந்து பிடுங்கப்பட்டதால் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகி இருந்துள்ளார்.

தற்போது மூத்த அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதும் அவருக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை என்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



நாதஸ்வர இசை அருவி

## வி.கே. பஞ்சமூர்த்தி

அவர்களுக்கு கலாபூஷணம் விருது வழங்கப் பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அவர் மேலும் பல விருதுகள் பெற்று இசைத்துறையில் வளர்த்தோங்க எமது குலதெய்வமாகிய மூத்தநயினார் ஆலய முருகப் பெருமானை இறைஞ்சுவோமாக.

*பிரம்மஸ்ரீ இராமலிங்க ஐயர் வாகீஸ்வரன் ஐயர், மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை. (குட்டான் ஐயர்)*

(108091)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபர்

கி. கிறிஸ்தோப்பர் அவர்களின் அன்புத் தந்தை

## வரப்பிரகாசம் கிளமென்ற் புஸ்பநாயகம்

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.*

# உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி **வாசனா சம்பத**

சீட்டிழுப்பு இலக்கம் 581

திகதி 2010/12/25

சுப்பர் இலக்கம்: **08**

வெல்லப்பட்ட இலக்கங்கள்: **08 11 24 57**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றியீட்டியவர் தொகை |
|---|---|---|---|
| [illegible] | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 34,953,773.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 12 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 286 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 559 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 13,424 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதாவது 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 7,785 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 194,235 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 30,949 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,888,480.00

சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

[illegible]

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 35,246,854.40

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

# மரண அறிவித்தல்கள்

## சிவஞானம் நல்லைநாதன் (ஆசாரி)

சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் நல்லைநாதன் (நடுவில்) நேற்று (27.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

## கந்தையா இராசரத்தினம்



கரணவாய் தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று (27.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாருவதி தம்பதியரின் அன்பு மகனும் தெய்வசேனாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராஜா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக் கொழுந்தின் அன்புச் சகோதரனும் கமலேஸ்வரன் (சுவிஸ்), கண்ணதாசன் (ஜேர்மனி), கருணாகரன் (கனடா), கௌரதன் (கனடா), வனிதா (ஆசிரியை, யா/கரணவாய் மகா வித்தியாலயம்), விஜிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வனஜா (சுவிஸ்), தனுஜா (ஜேர்மனி), சுதாகினி (கனடா), பிரமிளா (கனடா), லோகேஸ்வரன் (ஆசிரியர், யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனும் மதுமிதா, ஹரனி, கேசினி, பிருந்திகா, குருபரன், விதுஜா, கிரேஜனன், சஞ்ஜித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவரசந்திட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மனைவி - தெய்வசேனா,

மருமகன் - லோகேஸ்வரன்

T.P : 0213210317

(ஒ/573747)

# தேர்த்திருவிழா நிகழ்வு இன்று தொலைக்காட்சியில்

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவர் சுவாமி கோயிலில் கடந்த ஆனி மாதம் நடைபெற்ற தேர்த்திருவிழா நிகழ்ச்சி இன்று மாலை 5.30 மணி முதல் 6 மணி வரை 'ஐ' சனல் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-236)

# விளையாட்டுத்துறை உத்தியோகத்தருக்கான நேர்முகப் பரீட்சை

திருகோணமலை, டிசெ. 28

வடமாகாண பொதுச் சேவையில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வகுப்பு IV தரம் II இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் வியாழக்கிழமை திருகோணமலையில் வரோதயநகரில் அமைந்துள்ள வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

எம்.ஆர்.எம்.அஸ்ஹர் (மன்னார்), யே.ஜெரமி (மன்னார்), த.லக்ஸ்மன் (நெல்லியடி), தி.கௌசிகன் (கந்தர்மடம்), சோ.நிஷாந்தன் (நெல்லியடி), சு.சதீஸ்கண்ணா (சண்டிலிப்பாய்)-

சா.யசிதரன் (கைதடி), ஈ.அலஸ்யா (அல்வாய்), ந.நாகராஜா (பருத்தித் துறை), சு.பிரசன்னா (வண்ணார்பண்ணை), க.மயூரன் (திருநெல்வேலி), சி.வல்லவக்குமரன் (கொக்குவில்) -

செ.அருட்குமரன் (வவுனியா), பே.சத்திவேல் (வவுனியா), ஏ.எம்.ஏ.டி. சத்சரகுண சேகர (வவுனியா), அ.பிரபாகரன் (பரந்தன்), ஈ.போல்ராஜ் (கிளிநொச்சி), தி.ஜெயந்தன் (துணுக்காய்), ஜே.சுதாகர் (புதுக்குடியிருப்பு)-

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடிதம் வந்து சேராவிடினும் சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பிட்ட ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிறப்பத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, கிராம அலுவலரின் நற்சான்றிதழ், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், விளையாட்டுத்துறை சான்றிதழ்கள் ஆகிய வற்றுடன் வருகை தருமாறு வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (ஒ-15-23)

**SHAMROCK**

A/L-2013- புதிய வகுப்புகள்

English & GIT.

ஆரம்பம் : 03.01.2011 Mon 4 P.m

புதிய கல்வி ஆண்டு - 2011

★ Gr 1 முதல் O/L வரை

★ English MED. 6 to 11

★ Spoken English

★ English Lit., ICT.

★ புலமைப் பரிசில் Gr 5

★ சிங்களம்

# மரண அறிவித்தல்

## யோகரட்ணம் லைமன்

**(ஓய்வுபெற்ற முன்னாள் கணக்காளர், மின்சார சபை - கொழும்பு, சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம். மானிப்பாய் CACM திருச்சபையின் நீண்டகால பொருளாளராகவும் மானிப்பாய் YMCA இன் நீண்டகால பொருளாளராகவும் பணியாற்றியவர்)**

நவாலியைப் பிறப்பிட மாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட யோகரட்ணம் லைமன் நேற்று (27.12.2010) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் கிறிஸ்டீனா ஜெயராணியின் அன்புக் கணவரும் யேசையா ஜெயமோகன் (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), யோ.அனிற்றா சுவர்ணயோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாமின் அனுஷா, றெஜி, யுவராஜ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜேசனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் நாளை (29.12.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] மானிப்பாய்.

தகவல்: மனைவி.

(1081[illegible])

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் சிங்கராசா

(வட்டுக்கோட்டை வீதி, அரசடிச்சந்தி, நவாலிசி வசந்தி மல்ரி சென்ரர் உரிமையாளரின் தகப்பனார்)



நவாலியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிங்கராசா (27.12.2010) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சந்தானலக்சுமியின் அன்புக் கணவரும் விஜயானந்த், றொக்சானந்த், சர்வானந்த், ரணிச்சாந்த், நிரோஜனா, சதீஸ்ஆனந்த், டில்குவா ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, பிருந்தா, சுரேஸ்குமார் (சுரேஸ் பல்பொருள் வாணிப நிலையம், சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனும், மகாலிங்கம், தர்மராசா, ரத்தினராசா (ரஞ்சன்), சந்திரலேகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிறின்சிலா, வியான்சி, வினோ விஸ், தசானந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

72/6, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (108106)

தகவல்: குடும்பத்தினர்.

## கதிரவேலு கனகரத்தினம்

காரைநகர், தங்கோடையையும் வலந்தலைமடத்துக்கரையையும் வதிவிடமாக கொண்ட கதிரவேலு கனகரத்தினம் நேற்று (27.12.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சூராசி- கதிரவேலு தம்பதியரின் மகனும், ஆறுமுகம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற வேதமங்கையின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.12.2010) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. தர்மகுலசிங்கம் (மருமகன்).

## திருமதி ஆறுமுகம் செல்வதி



வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் செல்வதி 24.12.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணாம்பிகை, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் வனிதாம்பிகை, நாகரட்ணம் (ஹொலண்ட), காலஞ்சென்ற சிவமணி மற்றும் செல்வநாயகம் (சுவிஸ்), சரோஜா, கலா, குமுதா ஆகியோரின் அன்புத் தாயும் செல்வரத்தினம், சித்திரவடிவேல் (பிரான்ஸ்), குமுதினி, சிவராசா (ஹொலண்ட்), விஜயரட்ணம் (நீர்கொழும்பு), சிவனேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு சாட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை கிழக்கு, 4 ஆம் வட்டாரம், வேலணை.

தகவல்: மக்கள், மருமக்கள்.

## வரப்பிரகாசம் கிளமென்ற் புஸ்பநாயகம்



குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரப்பிரகாசம் கிளமென்ற் புஸ்பநாயகம் நேற்று (27.12.2010) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மனவல் - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் வவா, மரியநாயகம், கிறிஸ்தோப்பர் (பிரதி அதிபர், யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்), ரவி, அல்போன்சா (முன்பள்ளி ஆசிரியை), தனீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சூசை றெஜிஸ், செல்லா, கமலா, செல்லவவா (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்றவர்களான அன்ரனி நோபேட் ஆகியோரின் மாமனும் ஜெனிற்றா, ஜெகன், காலஞ்சென்றவர்களான சுரேஸ் மற்றும் றூபன், சுதாகினி, ஜெயபாலினி (முகிழ்நிலை ஆசிரியை, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), ஜெயதீபன், பிரதீப் ஆகியோரின் பேரனும் பிரவீந்தன், ஆகாஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புதுமை மாதா ஆலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.30, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்: மகன் - கி.கிறிஸ்தோப்பர். (பிரதி அதிபர், யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

(108012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பிரதமரின் யாழ்ப்பாணப் பேச்சின் பின்னால் எழுந்து நிற்கும் பெரிய கேள்வி!

இந்த நாட்டில் கடந்த முப்பது வருடங்களாகத் தொடர்ந்த பிரச்சினை, காற்றாலோ நீராலோ ஏற்படவில்லை. இங்கு வாழும் இரண்டு இனங்களைச் சேர்ந்த மக்களிடையே ஏற்பட்ட கசப்புணர்வே பிரச்சினையாக நீடித்து வந்தது.

எதிர்காலத்தில் அத்தகைய பிரச்சினைகள் ஏற்படாத வகையில் சகல இன, மத, சமூகங்களைச் சேர்ந்த மக்களும், இலங்கையர் என்ற நோக்கோடு இணைந்து செயற்படவேண்டும்.

இலங்கையில் நிலவும் இந்தப் பிரச்சினையும் சுனாமி போன்றதே. காற்றால், நீரால் வருவது சுனாமி மட்டும் அல்ல. நாட்டில் வாழும் பல்வேறு இன மக்களிடையே எழும் பிரச்சினையும் சுனாமிதான். நீடித்து வந்த பிரச்சினையால், அதனால் உண்டான போரினால், பெரும் எண்ணிக்கையான மக்களை நாடு இழந்துள்ளது. மீண்டும் அத்தகைய நிலை ஏற்படக் கூடாது.

65,000 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கொண்ட இலங்கையில் ஒவ்வொருவருக்கும் தமது இனத்தை, மொழியை, மதத்தை நேசித்து வாழும் உரிமை உண்டு. இலங்கையர் என்ற ரீதியில் சகலரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.

ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் (வீரசிங்கம் மண்டபத்தில்) நடைபெற்ற தேசிய பாதுகாப்புத் தின விழாவில் உரையாற்றிய பிரதமர் டி.எம்.ஜயரத்னா மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

54 வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டு மக்கள் எல்லோருமே - சகல இன மக்களுமே - தாம் இலங்கையர் என்ற எண்ணத்துடனேயே, மனத்துடனேயே - ஒற்றுமையுடனேயே வாழ்ந்தார்கள். பிரிட்டிஷ்காரரிடம் இருந்து கிடைத்த சுதந்திரம் எல்லோருக்கும் உரித்தானது; சகல இனத்தவரும் ஐக்கியமாக ஒன்று பட்டு வாழ்வோம் என்ற மன உணர்வே நாட்டின் சகல இன மக்களிடமும் மலர்ந்திருந்தது.

ஆனால், 1956ஆம் ஆண்டில் சிங்களப் பெருமக்களின் பேராதரவுடன் தெரிவுசெய்யப்பட்ட எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டார நாயக்கா அரசாங்கத்தினால், தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து தமிழ் பேசும் மக்கள் ஓரங்கட்டப்பட்டனர். அதனைத் தொடர்ந்து வந்த அரசுகளும் சிறுபான்மை இனங்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட துவேசமான, பாரபட்சமான சட்டங்களாலும், நிர்வாக முறைகளினாலும் இரண்டு இனங்களிடம் தாம் இலங்கையர் என்ற உணர்வு மெல்ல, மெல்லக் கருகிப்போனது. அதனை மீள்விக்கக் கோரி தமிழர்கள் விடுத்த கோரிக்கைகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகின. எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் - மக்கள் - என்ற உரிமைகளுடன் வாழமுடியாது என்ற அரசியல் விரக்தி தமிழர்களிடம் உண்டானது.

அதன் விளைவு: தமது மொழியையும் நிலத்தையும் காப்பாற்றுவதன் பொருட்டு தமிழ்மக்கள் சாத்வீகப் போராட்டங்களை நடத்தினர். ஜனநாயக வரம்புக்கு உட்பட்டு, தமக்குரிய, தம்மில் இருந்து பிரிக்க முடியாத, உரிமைகளைக் கேட்டு பல அஹிம்சைப் போராட்டங்களை நடத்தினர். அவ்வப்போது தெற்கின் அரசுத் தலைவர்களுடன் சமரசப் பேச்சுக்களை, சமாதானப் பேச்சுக்களையும் நடத்தினர்.

ஆட்சித் தலைவர்கள் அவை எவற்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை. ஒரு சில சமயங்களில், அவர்கள் சில சிறு உரிமைகளைத் தமிழர்களுக்கு வழங்க அரைமனத்துடன் முன் வந்த போதிலும், அவ்வப்போதைய எதிர்த்தரப்பு சிங்கள மக்களைத் தூண்டி - விட்டுக்கொட்டிக் குழப்பியது. அரசாங்கங்கள், ஆளும் தரப்புகள் மாறினாலும் அதே கதைதான் தொடர்ந்தது.

தமிழ் மக்களின் சமஷ்டி ஆட்சி முறைக் கோரிக்கைக்கு சிங்கள ஆட்சியாளர்கள் அன்று இணங்கி இருப்பின், பிரதமர் ஜய ரத்னா கூறும் ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற நிலையை உரு வாக்கி இருக்கலாம்.

அகன்று விரிந்து கிடக்கும் இந்தியாவில் சமஷ்டி முறை கைக்கொள்ளப்பட்டதால் அது பிரிந்து விடவில்லையே. அங்கு வாழும் பலப்பல இனங்கள் ஒரே நாட்டவர்களாக வாழ்கிறார்களே.

அத்தகைய ஒரு நிலைமையை உருவாக்குவதற்குத் தடையாக, அதிதீவிர எதிர்ப்புக் கொள்கையை இறுக்கிப் பிடித்து, இனக்கலவரங்கள் இடம்பெறுவதற்குத் தூண்டுதலாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இருந்தவரும் இருப்பவருமான இப்போதைய பிரதமரே டி.எம்.ஜயரத்னா. அவரும் சகபாடிகளும் அப்போது இனக் கசப்புணர்வை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருந்திருந்தால், ஒரே நாடு, எல்லோரும் இந்நாட்டு மக்களே என்ற நிலைமை எப்போதோ மலர்ந்திருக்கும். அவர் இப்போது விரும்பும் சகல இன, மத, சமூக மக்க ளும் இலங்கையர் என்ற நிலையும், அதற்கான உணர்வும் மலர்ந்திருக்கும். இப்போது ஓடி ஓடி உச்சரிக்கும் அபிவிருத்தியையும் கண்டிருக்கலாம். இந்த நாட்டை ஆசியாவின் சிங்கப்பூராகக் கூட மாற்றியிருக்கலாம்.

தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடமும் மக்களிடமும் காணப்படும் நாட்டுப்பற்று யாழ்ப்பாண மக்களிடமும் பிறந்திருக்கும். இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் ஒரே நாடு, ஒரே மக்களாகப் பிள்ளைகளை வளர்க்குமாறு இப்பிரதேச பெற்றோர்களுக்கு அழைப்பு விடும் தேவையும் ஏற்பட்டிருக்காது.

ஒவ்வொருவரும் தமது இனத்தையும் மொழியையும் மதத்தையும் நேசித்து வாழும் உரிமை உள்ளவர்கள் என்ற பிரதமரின் கொள்கையும் பார்வையும் வரவேற்கத்தக்கவை.

அந்த உரிமைகள் நாட்டு மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவும், எல்லோரும் இந்நாட்டு மக்களே என்ற உணர்வு சகல தரப்பினரிடமும் வளர்வதற்கும் வகை செய்ய அவரது இன்றைய அரசு நினைத்தால் இயலும். போர் முடிவுற்று சமாதானம் பிறந்துள்ள இக்காலத்தை உரிய வழியில் பயன்படுத்தி, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சேர வேண்டிய உரிமைகளை வழங்கக்கூடிய ஆட்சிப் பலமும் அதிகாரப் பலமும் முன்னர் எந்த ஆளும் தரப்புக்கும் கிடைத்திராத அளவுக்குப் பிரதமர் ஜய ரத்னாவின் அரசுக்குண்டு ஆனால்-

தனித் தமிழ் மாவட்டங்கள் என எதுவும் நாட்டில் இருக்கக் கூடாது என்ற சித்தாந்தத்துடனும், நாட்டின் இராணுவப் பலத்தை, குறிப்பாக தமிழ்ப் பகுதிகளை இராணுவ மயமாக்க வேண்டும் என்ற சூக்குமத்துடனும் செயற்படும் தாம் அங்கம் வகிக்கும் அரசு -

தமது கருத்து உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வாய்ப்புண்டா என்பதனை ஆராய்ந்துதான், பிரதமர் யாழ்ப்பாண மக்களுக்கு முன்னர் கூறிப்பிட்ட கருத்தை முன்வைத்தாரா என்பது தெளிவாக்கப்பட வேண்டும். பிரத மரின் உரையும் கருத்தும் அரச தலைவரின் சம்மதத்துடன் தான் வெளியிடப்பட்டதா என்பதும் ஒரு பென்னம்பெரிய கேள்வி!

# முல்லைத்தீவு வலய ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பு முடிவுறுகிறது

## வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றிவரும் முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரதும் தற்காலிக இணைப்புகள் யாவும் இந்த மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்கள் அனைவரும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இயங்கும் பாடசாலைகளில் கடமையேற்பதன் மூலமே எதிர்வரும் காலங்களில் தமது சம்பளக் கொடுப்பனவுகளை அந்தப் பாடசாலைகள் ஊடாகவே பெற்றுக் கொள்ளமுடியும்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு சமுகமளித்துச் சேவையாற்ற வேண்டிய பாட சாலைகள் தொடர்பான கடிதத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

துரித கல்விச் செயற்திட்ட அமுலாக்கத்தில் மீள ஆரம்பிக்கப்படாத பாடசாலை ஆசிரியர்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கற்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த கால அனர்த்தங்களின் மூலம் தமது கல்வியை இழந்த மாணவர்களுக்கு இந்த செயற்திட்டம் வகுப்பு ரீதியாக அமுல்படுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, ஜனவரி மூன்றாம் திகதிக்கு முன்னர் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்துக்கு சமுகமளிக்கும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்து வசதிகளுடன் கூடிய பாடசாலை வழங்கப்படும் எனவும், தவறும் பட்சத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள மிக கஷ்ட பிரதேசப் பாடசாலைகளுக்கு வழங்கப்படுவது தவிர்க்க முடியாது எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ம-14)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 30ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணி எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும். 2ஆம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி 20ஆம் திகதி ஆரம்பமாகும்.

ஒவ்வொரு கட்டப் பணிகளும் தலா 10 தினங்கள் கொண்டதாக 20 தினங்களுக்கு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நாடளாவிய ரீதியில் 51 இடங்களில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இரு இடங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன.

யாழ்.நகரத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், யாழ். மத்திய கல்லூரி ஆகிய இரண்டு நிலையங்களிலும் நடைபெறவுள்ளன. வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மதிப்பீட்டுப்பணிகள் நடைபெறவுள் ளன.

இந்த வருடம் இரண்டு கட்டங்களாக நடைபெறும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் முதலாம் கட்டப் பணிகள் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஜனவரி 08ஆம் திகதி வரை நடைபெறும்.

இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி 20ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 29ஆம் திகதி சனிக்கிழமை வரை 10 தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் தமிழ்மொழியும் இலக்கியமும், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம், சமூகக் கல்வி உள்ளிட்ட பிரதான பாடங்களின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

2ஆம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் பிரதான பாடங்கள் தவிர்ந்த மூன்று தொகுதிப் பாடங்களில் உள்ளடங்கிய தெரிவுப் பாட விடைத்தாளின் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறவுள்ளன.

முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடவுள்ள பிரதம பரீட்சகர்கள் உதவிப் பரீட்சைகள் மற்றும் எண்கணிதப் பரிசோதகர்களுக்கான நியமனக் கடிதங்கள் தனித்தனியாக சம்பந்தப்பட்டவர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், 2ஆம் கட்டப் பணியில் ஈடுபடவிருப்பவர்களுக்கு நியமனக் கடிதங்கள் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் பரீட்சை ஆணையாளர் ஏ.சொலமன் தெரிவித்துள்ளார். (ம-11)

# யாழ். பிராந்திய மரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலகங்கள் யாழ்., கிளிநொச்சியில் திறப்பு

## விழாவுக்கு வருகிறார் சுற்றாடல் அமைச்சர்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ் பிராந்திய மரக்கூட்டுத்தாபனத்துக்கு குருநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிரதேச முகாமையாளர் அலுவலகம், அலுவலர் சுற்றுலா விடுதி, தளபாடக் காட்சி நிலையம் என்பன இன்று பிற்பகல் 2.45 மணிக்கு 25, கடற்கரை வீதி, குருநகரில் சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவினால் திறந்துவைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்திற்கும் ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்துக்கும் அமைவாக, புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உதவிப் பிரதேச முகாமையாளர் காரியாலயமும், சுற்றுலா விடுதியும் தளபாடக் காட்சி நிலையமும் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இன்று திறக்கப்பட வுள்ளன.

கிளிநொச்சி உதவிப் பிரதேச முகாமையாளர் அலுவலகமும் மரச் சாலையும் இன்று மு.ப. 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் அரச மரக்கூட்டுத் தாபனத்தின் தலைவர் எஸ்.அமரசிங்க, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுற்றாடல் பிரதி அமைச்சர் அப்துல்காதர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை யாழ்.தளபாடக் காட்சி நிலையத்தில் இரண்டு அரச ஊழியர்களின் பிணையுடன் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தள பாடங்களை நியாயவிலையில் கடனடிப் படையில் கொள்வனவு செய்யமுடியும் என்று கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்தியத் தலைவர் எஸ்.சிறீஸ் கந்தராஜா தெரிவித்துள்ளார். (ம-15)

# கல்வியியற் கல்லூரியில் சனியன்று நியமனக்கடிதம்

யாழ்ப்பாணம். டிசெ 28

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து உள்ளகப் பயிற்சிக்கான பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல ஆசிரிய மாணவர்களையும் கல்வியியலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார் (ம)

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 14 | 29.12.2010 புதன்கிழமை | |
| திதி: | : | நவமி மு.இ .09.11 வரை |
| நட்சத்திரம் | : | சித்திரை பி.இ.05.40 வரை |
| சுபநேரம் | : | 4.58 - 06.28 வரை |
| ராகுகாலம் | : | 12.28 - 01.58 வரை |

# வதிவிடச் செயலமர்வுகள்

கோப்பாய். டிசெ 28

வெளிக்கள வேலைக்கான செயற் பாட்டில் 'யாவருக்கும் விஞ்ஞானம்' என்னும் தொனிப் பொருளில் இருநாள் வதிவிடச் செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை புதன்கிழமையும் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் கொட்டகம தலைமையில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 12 பாடசாலைகளைச் சேர்ந்த 24 ஆசிரியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள்


# நினைவஞ்சலியும் நன்றி நவில்லலும்.

## அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் (றீகன்)

(கரித்தாஸ் - கியூடெக் பணியாளர்)

மண்ணில்
22.06.1982

விண்ணில்
14.11.2010



ஆலமரம் ஒன்று அடியோடு சாய்ந்ததுவோ
தீபம் அணைந்ததுவோ திசைகள் இருண்டதுவோ
கண் மூடித்திறக்குமுன்பே காலன் உன்னைக் கவர்ந்தது ஏன்?
கனிவான உங்கள் பேச்சும் கண் கொள்ளாப் புன்னகையும்
உறுதியான புத்திமதிகளும் இனியெப்போ கேட்போம்- நாம்
யாவும் முடிந்ததுவோ எமக்கு யாருமற்றுப் போனதுவோ
நாள்கள் பலஆனாலும் உங்கள் ஞாபகங்கள் மறையாது

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கரித்தாஸ் - கியூடெக் இயக்குநர், பணியாளர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், தொலைத் தொடர்பு மூலம் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச்சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி செய்தவாகளுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து சிறப்பான பிரார்த்தனை செய்த அருட்தந்தையர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆன்ம இளைப்பாற்றுப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(108088)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வயாவிளானில் மக்கள் மீள்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வலி.வடக்கு, டிசெ.28

உயர்பாதுகாப்பு வலயமான வசாவிளான் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கையெடுக்கவேண்டும் என வயாவிளான் மக்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் அமைந்துள்ள காங்கேசன்துறை தொகுதிக்கிளையில் வயாவிளான் மக்களின் பிரதிநிதிகள் குழுவொன்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடியது .

இதன்போது வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் தனது சொந்த இடத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களையும் குடியமர்த்த அனுமதிக்கவேண்டும்.

கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். முகாம்களுக்கு வெளியில் இருப்பவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும்கூட கிடைப்பதில்லை.

யுத்தம் முடிவடைந்த நிலையிலும் எமது பிள்ளைகள் சொந்தப்பாடசாலையில் கற்கும் நிலையில் எம்மை மீளக்குடியேற அனுமதிப்பதன் மூலம் எமது பிள்ளைகள் கல்விக்காக அலையும் நிலையைத் தவிர்க்க முடியும்.

இந்த நினைவில் எமது மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்தி குடியமர அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்கள் என்று கோரிக்கைவிடுத்தனர். மீள்குடியேற்ற அமைச்சருடன் தொடர்புகொண்டு இதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த மக்களிடம் தெரிவித்தார். (ம-86)

# பேருந்துகளில் பெயர்ப்பலகைகள் தெளிவின்மையால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் உள்ள வழிப் பெயர்ப்பலகைகளில் இடங்களின் பெயர்களும், வழி இலக்கங்களும் தெளிவாக இல்லாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெயர்ப் பலகைகளில் இடங்களின் பெயரையும் வழி இலக்கங்களையும் சிறிதாக எழுதுவதாலும், வெண்கட்டியால் எழுதுவதாலும் அவை தெளிவில்லாது இருப்பதாகக் கூறப்படுகிறது.

மிக அருகில் வந்ததன் பின்னரே பேருந்துகளில் இலக்க, பெயர்களைப் பயணிகள் பார்க்க முடிகிறது. அதன் பின்னர் பேருந்தை மறிக்க முற்படும் போது அது பயணிகளை ஏற்றாது செல்வதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

(ம-311)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# விபத்தில் மூவர் காயம்

அரியாலை யூதா கோயிலுக்கு அண்மையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற ஹன்ரர்- மோட்டார் சைக்கிள் விபத்தில் குழந்தை உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரத்தில் இருந்து நாவற்குழி நோக்கிச் சென்று கொண்டிருந்த 49 சிசி மோட்டார் சைக்கிளும், யாழ்.நகர் நோக்கி வந்து கொண்டிருந்த ஹன்ரர் வாகனமும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த நாவற்குழியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பொனிபஸ் தங்கராஜா (வயது-57), அவரது மனைவியான பொனிபஸ் சாந்தமதி (வயது-45), மற்றும் அவர்களது பேர்த்தியான எஸ்.ஜெரினா (வயது 2½) ஆகிய மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-319)

## உண்மை வெளிப்பாடு.....



நிலவரம்: தேசிய பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன், 'சொண்ட்' மற்றும் 'ரி.ஆர்.ஆர்.ஓ.' நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட 'அனர்த்தத்தால் அழுந்தும் மனிதகுலம்' என்னும் தொனிப்பொருளில் அமைந்த ஊர்திக்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது. அனர்த்தத்தால் அழுந்தும் மனிதகுல ஊர்தி பெற்ற பரிசுடன் 'சொண்ட்' மற்றும் 'ரி.ஆர்.ஆர்.ஓ' பணியாளர்கள்.

# கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

கைதடி, டிசெ.28

கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் வளர்ச்சிக் குழுத் தலைவர் திருமதி சொ.ஸ்ரீரஞ்சனாதேவி தலைமையில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி சி.சிவகரன் கலந்துகொள்வார். (ம-288)

# யாழ்.மாவட்டத்தில் நிதிச் சேவை ஏனைய துறைகளை விட வளர்ச்சி

## மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். மாவட்டத்தில் நிதிச் சேவை ஏனைய துறைகளை விட வளர்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி யின் வட பிராந்திய முகாமை யாளர் இ.சிறீதரன் தெரிவித் துள்ளார்.

நிதிச் சேவை நேரடியாக பொருளாதார அபிவிருத்தியில் தாக்கம் செலுத்துவதால் நிதிச் சேவையின் அதிகரிப்பு பொருளாதார அபிவிருத்தியிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வங்கிகள், நிதிக் கம்பனிகள், 'லீசிங்' கம்பனிகள் என்பன சேவைகளாலேயே நிதிச்சேவை அதிகரிப்பினைக் கண்டுள்ளது.

நிதிச் சேவையின் அதிகரிப்பானது ஏனைய துறைகளின் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்ய உதவும் என்று தான் எதிர் பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயம், சேவைகள் துறை என்பனவற்றை விட யாழ்ப்பாணத்தில் நிதிச்சேவை துறைகள் கடந்த வருடத்தை விட அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-15)

# அரியாலையில் தொடர் திருட்டு; சந்தேகநபர்கள் மூவர் கைது

கொழும்புத்துறை,டிசெ.28

அரியாலைப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய திருட்டுக் குழுவொன்று அப்பகுதி இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையால் கைதுசெய்யப்பட்டது.


நத்தார் தினத்தன்று அதிகாலையில் இலந்தைக் குளம் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

இலந்தைக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் அண்மையில் 'காஸ் சிலிண்டர்' களவு போயுள்ளதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து இராணுவத்தினர் நடத்திய விசாரணையில் கால் தடங்களை வைத்து குறிப்பிட்ட திருடர்களின் வீடு இனங்காணப்பட்டது.

நாயன்மார்கட்டுப் பகுதியில் இருந்து அண்மையில் அந்த வீட்டில் சிலர் குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சந்தேகம் கொண்ட படையினர் அன்றிரவு குறித்த வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டு மறைந்திருந்தனர். அதிகாலை 3 மணிக்குச் சிலர் அந்த வீட்டை நோக்கி வந்தபோது மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

குறித்த வீட்டைச் சோதனை யிட்ட போது குறித்த 'காஸ் சிலிண்டர்' வீட்டினுள்ளே காணப்பட்டுள்ளது. யாழ். பல.நோ.கூ.சங்க புங்கங்குளக் கிளை உடைக்கப்பட்டமை, தையல் நிலையமொன்றை உடைத்து தையல் மிசின் திருடியமை, பலசரக்குக் கடை உடைப்புப் போன்ற பல திருட்டு சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புபட்டிருக்கலாம் எனத் தெரிவித்த படையினர் சந்தேக நபர்கள் மூவரையும் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ம-135)

## உயிர்காப்பு......



மனிதாபிமானம்: அண்மையில் வேலணைத் துறையூர் கடற்கரையில் உயிருடன் வந்த டொல்பின்களை அப் தொழிலாளர் ஆழ் கடலுக்குத் திருப்பிவிட்டனர். (7)

# குடாநாட்டில் தொடரும் கொள்ளை,கொலை வன்மையாகக் கண்டிக்கிறது சிறீரெலோ

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.குடாநாட்டில் தொடரும் கொள்ளைகள் மற்றும் கொலைச் சம்பவங்களைச் சிறீ தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த இயக்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற கொள்ளை, கொலை போன்ற நடவடிக்கைகள் குடாநாட்டு மக்களை மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளன.

கடந்த 30 வருட கொடூர யுத்தத்திற்குள் சிக்குண்டு, துன்பப்பட்டு, துயரப்பட்டு, உறவுகளை இழந்து, நாதியற்று இருந்த எம் மக்கள் ஓரளவு நிம்மதிப்பெருமூச்சுடன் வாழ்ந்து வருகின்ற இக் [illegible] [illegible] தது போல'' மீண்டும் எம் மக்கள் மீது எம்மவர்களாலேயே வேண்டப்படாத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை எம் மக்களுக்கு பேரிடியாக இருக்கின்றது.

எமது இனத்தின் கலை, கலாசார கல்வி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றினை அடியோடு அழிப்பதற்கும் எம் இனத்தின் இருப்பிற்கான சுவடுகளை இல்லாது ஒழிப்பதற்கும் ஒரு சில புல்லுருவிகள் தலைதூக்கி இருப்பது வருத்தத்திற்குரியதே.

கடந்தகாலங்களில்தம்மையே எம் இனத்தின் வேலிகள் என்றும் காவலர்கள் என்றும் கூறியோர் இன்று "வேலியே பயிரை மேய்வதனைப்போல்'' செயற்படுகின்றார்கள்.

கொள்ளை,கொலை இன்னும் என்னவெல்லாம் இருக்கின்றதோ, அவை அனைத்தினையும் யாழ். குடாநாட்டு மக்களுக்குத் திணிப்பதற்கு எம்மவர்களே உடந்தையாக இருப்பது அவமானத்துக்கு உரியதாகும்.

இதுபோன்ற கீழ்த்தரமான செயற்பாடுகளைத் தமிழ் மக்களின் நலன் பேணும் கட்சி என்ற வகையில் சிறீ ரெலோ கட்சி எதிர்ப்பதோடு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளில்ஈடுபடுவோர் மற்றும் இவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ உதவி புரிகின்றவர்கள் தாம் தங்கி வாழ்கின்ற சமூகத்துக்குக் கேடு விளைவிக்காது இருக்க வலியுறுத்துகிறோம். நல்லதோர் சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவர் முன்னாலும் உள்ளது.

மேற்படி குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய அடையாளங்கள் மற்றும் அவர்கள் பற்றிய இரகசியத் தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறியத்தாருங்கள். உங்கள் ஒவ்வொருவருடைய பாதுகாப்பையும் நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்- என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி இந்துவில் குரங்கு அட்டகாசம்

தென்மராட்சி, டிசெ.28

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆறாம் தர அனுமதிக்காக வந்திருந்த பெற்றோரை பிரதான மண்டபத்தினுள் நுழைந்த குரங்கு பயமுறுத்திச் சென்றது.

ஆறாம்தர அனுமதிக்காக வந்திருந்த பெற்றோர் மத்தியில் கல்லூரி அதிபர் உரையாற்றிக்கொண்டிருந்த வேளையில் மண்டபத்தின் அருகில் உள்ள உயரமரத்தை முறித்து விட்டுப் பாய்ந்த குரங்கு மண்டபத்தில் இருந்த பெற்றோர்களுக்கு ஊடாக பாய்ந்து சென்றது.

இதனால் அங்கிருந்த பெற்றோர்கள் அச்சமடைந்து ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம- 207)

## தவறவிடப்பட்ட பயணப்பை வங்கியில்

தென்மராட்சி, டிசெ.28

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கடந்தவாரம் கண்டெடுக்கப்பட்ட பொருள்களுடன் கூடிய பயணப்பை சாவகச்சேரி கிராமிய வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பயணப் பையினை தவறவிட்டவர் வங்கியுடன் தொடர்பு கொண்டு ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204-207)


### ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 189 சீட்டிழுப்புத் திகதி 26.12.2010

வெற்றி இலக்கங்கள்: 09 15 59 62 சுப்பர் இலக்கம்: 12

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 11,059,730/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 89203 | ரூ. 20/= | ரூ. 1,784,060/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 8025 | ரூ. 40/= | ரூ. 321,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 6906 | ரூ. 100/= | ரூ. 690,600/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 635 | ரூ. 200/= | ரூ. 127,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 157 | ரூ. 1,500/= | ரூ. 235,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 18 | ரூ. 3,000/= | ரூ. 54,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 11,059,730/= | |
| மொத்த எண்ணிக்கை | 104945 | | ரூ. 4,212,160/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,330,300/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, சுதந்திர சொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 338 545

Website: www.dlb.lk


## கைதடி கிழக்கில் பரபரப்பு

கைதடி, டிசெ.28

கைதடி கிழக்கில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வீடு ஒன்றுக்குள் திருட்டுத் தனமாக சிலர் புகுந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

வீட்டுக்காரர் கூக்குரலிட அயலில் உள்ளவர்கள் எல்லோரும் அந்தப்பகுதியைச் சுற்றிவளைத்தனர். எனினும் குறிப்பிட்ட நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர்.

பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் குழு நள்ளிரவு வரை அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது.

(ஒ-ஜ-288)


### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் சேச் அருகாமையில் ஆறு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. [தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது].

தொடர்பு: 0777112076, 0770723998.

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. தனிப்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும். முழுவிபரம், தொடர்பு டெலிபோன் நம்பருடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 4102, C/o. உதயன்,

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (108076)

### தவறவிடப்பட்ட பணம்

24.12.2010 ஆம் திகதி ஒரு தொகைப் பணம் தவறவிடப்பட்டுள்ளது. அண்ணா விவசாயப் பண்ணையில் பொருள் வாங்க வந்தோரால் தவறவிடப்பட்டது. இப்பணத்தை தவறவிட்டவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

உரிமையாளர்,

அண்ணா விவசாயப் பண்ணை, இணுவில். (108078)

### கணினி விற்பனைக்கு

P-IV, 2.4GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 18,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive, I-3 LapTop, I-3 Desktop, Dualcore கணினிகள் என்பனவும் மலிவு விலையில் 3 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Sky Computer System

162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(டேவிட் பீரிஸ் முன்பாக) 021 222 1417.

### German Swiss மொழிகள்

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. Germanயல் இருந்து வந்த ஆசிரியரால் புத்தகம் மற்றும் CD விளக்கத்துடன் நடைபெறுகின்றது. German Institute, 10, Palaly Road, Jaffna, T.P. 0771604823

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2185 திகதி 25-12-2010

ஆங்கில எழுத்திற்கும்: G

வெற்றி எண்கள்: 46 50 52 54 போனஸ் இல: 62

ஜக்பொட் பரிசு ரூ. 28,200,250/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 155629 | 20/- | 3,112,580/- |
| 2 இல | 11041 | 100/- | 1,104,100/- |
| 3 இல | 248 | 1,000/- | 248,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6056 | 40/- | 242,240/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 481 | 1,000/- | 481,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 02 | 10,000/- | 20,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 28,200,250/- | - |
| 1 இல + போனஸ் இல | 7375 | 100/- | 737,500/- |
| 2 இல + போனஸ் இல | 342 | 500/- | 171,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 334 | 200/- | 66,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 6,607,220/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 181538 | | 7,207,220/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 302672582-9-04 |
| கொழும்பு | 302672789-3-36 |
| களுத்துறை | 302673711-6-33 |
| அம்பாறை | 302673304-1-21 |
| பதுளை | 302675055-9-24 |
| கம்பஹா | 302672751-5-48 |
| கம்பஹா | 302672762-3-08 |
| குருணாகல் | 302668419-7-26 |
| மொணராகலை | 302670368-2-07 |
| புத்தளம் | 302669000-3-16 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 28,624,500/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### நாகலிங்கம் புவதீஸ்வரி

(வவுனியா) B.F.Acc. (Hons)





அன்னை மடியில் 12.07.1970

ஆண்டவன் மடியில் 28.11.2010

கடந்த 28.11.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடிவந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் பல புரிந்தவர்களுக்கும், கடிதம், தொலைபேசி மூலம் உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வைத்தியசாலையில் இருந்தபோது மருத்துவம் அளித்த வைத்தியர்கள், தாதிமார்கள், உதவியாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.11. மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தாய், தந்தை, அண்ணாமார், அண்ணிமார், அக்காமார், அத்தான்மார், பெறாமக்கள், மருமக்கள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
தொ.பே:07791840[illegible] (108053)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 1969.11.13

மறைவு 2010.11.27

### அமரர் குணரத்தினம் குணசிங்கம்

கடந்த 27.11.2010 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியை இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை காலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் பங்குகொண்டு ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கம்பர்மலை பாடசாலை வீதி,
[illegible],
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்,
மங்கையர்திலகம் (மனைவி),
அபிர்ணா (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றக் கொடுப்பனவைக் கூட விட்டுவைக்காத வன்னித் திருடர்கள்

கிளிநொச்சி, டிசெ.28

வன்னிப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவுகளைக் கூடத் திருடர்கள் விட்டு வைக்கவில்லையெனப் பாதிக்கப்பட்ட மக்க்ள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த தியாகராசா அன்னலட்சுமி என்ற பெண் தமது மீள்குடியமர்ந்தமைக்கான கொடுப்பனவாக வழங்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா பணத்தைக் கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் பெற்று அதனைத் தாம் வைத்திருந்த பையினுள் வைத்துள்ளார்.

பின்னர் கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்திற்குச் சென்று பார்த்தபோது பையில் வைக்கப்பட்ட பணம் மாயமாய் மறைந்திருந்தது. அந்தப் பெண் அடைந்த வேதனை சொல்லில் அடங்காதது.

இடம்பெயர்ந்து பல இன்னல்களைச் சந்தித்து மீள்குடியமர்ந்த மக்களுக்கு மீள்குடியமர்ந்து பல மாதங்களின் பின்னரே மீள்குடியேற்றக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. அதனைப் பெறுவதற்குக் கிராம அலுவலகம், பிரதேச செயலகம் எனப் பல இடங்களுக்கும் இந்த மக்கள் பலமுறை அலைந்து திரிந்து, நீண்ட வரிசையில் கால் கடுக்கப் பல மணிநேரம் காத்திருந்து கொடுப்பனவுச் சீட்டுக்களைப் பெறுகின்றனர்.

பின்னர் வங்கிகளிலும் வரிசையில் மணித்தியாலக் கணக்கில் காத்திருந்து பணத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு பல நாள்கள் அலைந்து திரிந்து அவதிப்பட்டுப் பெற்ற பணத்தை நெஞ்சிலே ஈரமென்பதே இல்லாத திருடர்கள் ஒரு நொடிப் பொழுதில் அபகரித்துச் செல்கின்றனர்.

குடும்பத் தலைவர்களாக உள்ளவர்களே இந்தக் கொடுப்பனவைப் பெறவேண்டும் என்பதால் வயது முதிர்ந்தவர்களும், பெண்களும் இதனைப் பெறுவதற்கு அலைந்து திரிய வேண்டிய அவல நிலையில் உள்ளனர். இதனைப் பறிப்பதற்குத் திருடர்கள் காத்திருப்பதால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க-405)

# பூநகரி வாடியடியில் சந்தையில்லாததால் சிரமங்களை எதிர்கொள்ளும் பொதுமக்கள்

பூநகரி, டிசெ.28

பூநகரி வாடியடிப் பகுதியில் சந்தையொன்று அமைக்கப்படாததால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பூநகரியின் மையப்பகுதியாக விளங்குவது வாடியடி. ஆனால் இந்தப் பகுதியில் இதுவரை சந்தை எதுவும் அமைக்கப்படவில்லை. இதனால் தனியார் கடைகளில் அதிக விலைகளைக்கொடுத்து மக்கள் பொருள்களை வாங்கிச் செல்கின்றனர்.மீள்குடியமர்ந்து ஒரு வருடம் கழிந்தநிலையிலும் இந்த நிலைதான் தொடர்கின்றது.

வாடியடியில் சந்தை அமைக்கப்பட்டால் பரமன்கிராமம், வாடியடி நாலாம் கட்டை, வில்லடி, நெற்புலவு, செம்மன்குண்று, தம்பிராய், செல்விபுரம், ஆலங்கேணி, நல்லூர், சாமிப்புலம், அத்தாய், காவிக்குளம், பள்ளிக்குடா போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அதிக பயன்பெறுவார்கள்.

மேலும் இந்தச் சந்தை அமைவதால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் விவசாயிகள் தமது சந்தைப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்பதற்கு வசதியேற்படும். அதைப்போன்று பொதுமக்களும் நியாயமான விலைக்குத் தமக்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும்.ஆகவே உரிய தரப்பினர் வாடியடிச் சந்தியில் சந்தையொன்றை அமைக்க முன்வர வேண்டுமென்பதே இந்தப் பிரதேச மக்களின் வேண்டுகோளாகும். (க- 406)

# பெயர்ப்பலகை இல்லாத நிலையில் முரசுமோட்டை உப தபால் நிலையம்

கிளிநொச்சி, டிசெ.28

முரசுமோட்டை உப தபால் நிலையம் பெயர்ப்பலகையின்றி இயங்கி வருவதால் தபாலகத்தைத் தேடி மக்கள் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

பரந்தன் பிரதான தபாலகத்துக்கு உட்பட்ட முரசுமோட்டை உப தபாலகம் முரசுமோட்டை சங்கர நாராயணர் கோயிலுக்கு அண்மையில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது. ஆனால் நீண்ட காலமாகப் பெயர்ப்பலகையின்றியே காணப்படுகின்றது. இதனால் பல்வேறு தபாலகத் தேவைகளுக்காகவும் செல்லும் மக்கள் தபாலகத்தைத் தேடியலைவதைக் காணக் கூடியதாக உள்ளது. தபால் திணைக்களத்தினர் மக்களின் நன்மை கருதி பெயர்ப்பலகையைப் பொருத்த வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.(க-11)

## குழந்தைகளுக்குப் பாதுகாப்பு...



மலரும் புன்னகை: 'குழந்தைகளைப் பாதுகாப்போம்' நிறுவன அதிகாரி கலிஸ்ரஸ் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கென ஒரு தொகுதி உபகரணங்களைப் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் இடம் வழங்குகிறார் (405)

# முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் ஐந்து ஆசிரிய ஆலோசகர்கள்

கிளிநொச்சி, டிசெ.28

திருமதி சாந்தகுமாரி கமலகாந்தன் - சங்கீதம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், சிவாணந்தம் ஏகாம்பரம்- முறைசாரக் கல்வி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கனகரத்தினம் நவநீலன்- ஆலோசனையும் வழிகாட்டலும், வலயக் கல்வி அலுவலகம் , முல்லைத்தீவு.

**துணுக்காய் வலயம்**

திருமதி சுகந்தினி சர்வேஸ்வரன்- விசேட கல்வி, வலயக் கல்வி அலுவலகம், துணுக்காய், திருப்பரங்கிரிநாதன் செந்தில்நாதன் - தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம். (க-405)

# நல்லின விதைகளை வழங்குமாறு ஒட்டுசுட்டான் விவசாயிகள் கோரிக்கை

நல்லின விதைகளைத் தருவித்துத் தமக்கு வழங்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச மேட்டுப் பயிர்ச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உப உணவுச் செய்கையினைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு நல்லின விதைகள் முக்கியமானவை. இவற்றை விவசாயத் திணைக்களத்திலிருந்து பெற்றுத் தமது விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்கு அனுப்பி வைத்தால் தமக்கு மிகவும் உபயோகமானதாக இருக்குமென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மிளகாய்,வெண்டி, புடோல், கத்தரி, தக்காளி, கறி மிளகாய், கீரை, பயிற்றை மற்றும் ஏனைய விதையினங்களைப் பெற்றுத் தந்தால் தம்மால் சிறந்த உற்பத்தியைப் மேற்கொள்ள முடியுமென்றும் இந்த விவசாயிகள் கூறுகின்றனர்.

தற்போது முத்துஐயன் கட்டுக்குளத்தில் தேவையான அளவு நீர் உள்ளதால் தமது விவசாய நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்க முடியுமெனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# முல்லைத்தீவு பாண்டியன்குளம் மக்கள் மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.28

முல்லைத்தீவு பாண்டியன் குளத்தில் மீள்குடியமர்ந்து வசித்து வரும் மக்கள் தமக்கு மின்சார இணைப்பினை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாண்டியன் குளத்தில் முக்கிய அரச திணைக்களங்களுக்கு 'தேசத்திற்கு ஒளியூட்டுவோம்' திட்டத்தின் கீழ் மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுமக்களின் பாவனைக்கென இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் கிராம மக்கள் மண்ணெண்ணெய் விளக்கையே நம்பியிருக்கின்றனர். இதனால் பாடசாலை மாணவர்கள் தமது பாடங்களைக் கற்க முடியாது அவதியுறுகின்றனர். அத்துடன் இரவு வேளைகளில் போதிய வெளிச்சமின்மையால் இவர்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(க-11)

# நெற்பயிர்களில் நோய்த்தாக்கம்

கிளிநொச்சி, டிசெ.28

கிளிநொச்சிப் பிரதேசத்தில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்பயிர்களில் நோய்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன.

நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி, எரிபந்தம், காவோலை போன்ற நோய்களின் தாக்கமே அதிகமாகக் காணப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு அதிகளவான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்த நோய்களின் தாக்கத்தினால் தமது நெல் விளைச்சல் பாதிக்கப்படுமென விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-11)

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி,டிசெ.28

**கிளிநொச்சி மகாவித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

சத்திவேல் அனுஷா 3ஏ(2), சிவராசா கிருபாகரன் 2 ஏ சீ (5), யோகராசா பிரதீபன் 2 ஏ சீ(7), குணசீலன் தர்சிகா 3 பி(8), யோகராசா சுஜிதா ஏ பி சீ(13), மனோகரன் திருநாயினி ஏபிசீ (16).

**கலைப்பிரிவு**

இராசமூர்த்தி சுரேகா 2ஏ பி(6), செபமாலை பிறைசில் ராஜநாயகம் 2ஏ பி(7), இராசேந்திரன் விஜிதா ஏ 2பி(23), இராசேந்திரம் சியாமினி 2ஏ சீ(31).

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

**கணிதப் பிரிவு**

பஞ்சாட்சரம் கௌசிகன் பி 2சீ(5).

**விஞ்ஞானப் பிரிவு**

அருள்தாஸ் ரேணுகா 3 சீ(14), மதிவண்ணன் கௌசிகா 3எஸ்.

**வர்த்தகப்பிரிவு**

திருக்கேதீஸ்வரன் வினோத் 2பி சீ (23), துரைராஜா அஜந்தினி ஏ 2சீ, யோகராசா கோசலா பி 2சீ, தியாகராசா ல்வன் பி 2சீ, கணேசலிங்கம் அலைக்சனா பி 2சீ, பரமகுரு மிரேஸ் பி சீஎஸ்

**கலைப் பிரிவு**

அழகராசா யோகேஸ்வரன் 2ஏ சீ (19), சுசீலன் நிலானி 3பி, சாகாயராசா ஜெசிப் ஏ பி சீ, தங்கராசா அனுசன் பி 2 சீ, இராஜேந்திரம் சுபாசினி 2 பி எஸ் , சிவலிங்கம் சுரேஸ் பி 2 சீ.

**ஜெயபுரம் மகாவித்தியாலயம்**

**வர்த்தகப்பிரிவு**

மரியதாஸ் அன்ரனி சதீஸ்குமார் பி 2 சீ.

**கலைப் பிரிவு**

கணபதிப்பிள்ளை சயந்தன் 2 பி சீ, இராமநாதன் [illegible] பி2சீ, பெருமாள் சிவசா[illegible] சீ ,மணிசேகரன் நீருஜா பி சீஎஸ், இராசேந்திரன் ஜனார்த்தனி பி சீ எஸ் , செல்வராசா நிரோசன் பி 2 எஸ்.

**பரந்தன் இந்து மகாவித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

தியாகராசா கமலினி 2 ஏ பி(16),

**வர்த்தகப்பிரிவு**

செல்வரட்ணம் துளசி சீ 2 எஸ் ,

**வேரவில் இந்து மகாவித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

மகாராசா மயூரன் ஏ 2 பி , குழந்தைவேலு துஷ்பநாதன் 3 பி , திருநாவுக்கரசு கஜன் ஏ 2சீ, உதயராசா ரன்சிதா 2 பி சீ, அந்தோனிதாஸ் மரியா ஜெனிஸ்ரலா ஏ 2எஸ்.

**கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம்.**

**கலைப்பிரிவு**

[illegible]

(தொடரும்...)




# இராமநாதபுரத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு போரூட் நிறுவனத்தின் செயலமர்வுகள்

கிளிநொச்சி, டிசெ.28

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வொன்று கிளிநொச்சி இராமநாதபுரத்தில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி, கரைச்சி , கண்டாவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களை ஒன்றிணைத்து இராமநாதபுரத்தில் போரூட் நிறுவனம் இச் செயலமர்வினை நடத்தியுள்ளது.

கடந்த 20 ஆம் திகதிமுதல் 24 ஆம் திகதிவரை ஐந்து நாள்கள் நடைபெற்ற இச்செயலமர்வில் புதிய கல்வியாண்டில் முன்பள்ளிச் சிறார்களை இணைத்துக் கொள்ளல், சிறுவர் உரிமைகளை மதித்தல், மகிழ்வான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவுரைகள் வழங்கப்பட்டன.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கணேசலிங்கம், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வராஜா ஆகியோர் இந்த விரிவுரைகளை வழங்கினர்.

இதில் கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 200 ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (க-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 132 வருட அசைக்க முடியாத வர்த்தகப் பின்னணியுடன் யாழ்.குடாநாட்டில் கால் பதிக்கும் "ஹேலீஸ்" நிறுவனம்

மூன்று தசாப்தங்களாக நிலவி வந்த கோரயுத்தம் முடிவுக்கு வந்துள்ளது. விளைநிலங்கள் முழுவதிலும் விதைகளுக்குப் பதிலாக நிலக்கண்ணிகள் விதைக்கபட்டிருந்த நிலை மாறியுள்ளது. நிம்மதியான வாழ்கைக்கு இயற்கை கொடுத்த அத்தனை வரப்பிரசாதங்களும் அபரிதமாக நிறைந்திருந்த இந்தச் சின்னஞ்சிறிய தீவு பயங்கரவாதத்தின் கோரப் பிடியில் சிக்கிச் சின்னாபின்னமான அந்த இருண்ட காலங்கள் மறைந்து சுபீட்சம் தரும் ஒரு எதிர்காலம் இன்று உருவாகியுள்ளது.

சுமூகமானதொரு சூழ்நிலை இந்த நாட்டில் உருவானதைத் தொடர்ந்து வட பகுதியில் வர்த்தக நடவடிக்கைத் தொடர்ந்து வடபகுதியில் அளவு அபிவிருத்தி அடைந்து வந்துள்ளன. பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை ஒரு காலத்தில் யுத்த பூமியாகத் திகழ்ந்து வந்த வளமிக்க வடநாட்டில் ஆரம்பித்துள்ளன. அந்த ரீதியில் இலங்கையில் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு அதன்பின் இலங்கையர் ம்யமாக் கப்பட்டு இயன்றளவும் தனக்கெனத் தனியானதோர் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ள ஹேலீஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.ரிஸ்வி சசீட் உதயனுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணல்.

**கே:** ஹேலீஸ் என்று எவ்வாறு உங்கள் நிறுவனத்துக்குப் பெயர் வந்தது? இந் நிறுவனத்தின் நிறுவுனர் யார்? எப்போது ஸ்தாபிக்கபட்டது? ஆரம்ப வர்த்தகங்கள் என்ன?

ப: 1878 ஆம் ஆண்டிலிருந்து சார்ல்ஸ் பிக் கெரிஸ் ஹேலீன் என்பவரின் குடும்ப அங்கத்தவர் ஹேலீஸ் எனும் பெயரிலேயே இந்நிறுவனம் பல தலைமுறைகளாக நடத்தப்பட்டு வருகிறது. 1909 ஆம் ஆண்டு டபிள்யூ.டபிள்யூ. கென்னி என்பவருடன் இணைந்து இது பங்களார் நிறுவனமாக மாறியது.

ஹேலீஸ் நிறுவனத்தின் ஆரம்ப வர்த்தகமாக உள்நாட்டு உற்பத்திகளான தும்பு, இறப்பர் ஆகியவற்றை பதப்படுத்தி ஏற்றுமதி செய்தது. அதனைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில உணவுப் பொருள்களையும், வைன் மதுவையும் இந்நிறுவனம் இறக்குமதி செய்தது. 1954 ஆம் ஆண்டு ஹேலீஸ் அன்ட் கென்னி லிமிட்டெட் ஹேலீன் பி.எல்.சியாக ஒருங்கிணைக்கபட்டு பொது நிறுவனமாக மாற்றம் பெற்றது.

**கே:** காலணித்துவ நிர்வாகத்தின்கீழ் செயற்பட்ட ஹேலீஸ் நிறுவனம் எப்போது இலங்கை மயமானது?

ப: 1950 இல் இந்த நிறுவனம் இலங்கை மயமானதுடன் இலங்கையர்கள் நிறுவனத்தின் உடைமைகளை வாங்கினர்.

**கே:** இலங்கையில் 132 வருட வர்த்தகப் பின்னணியைக் கொண்ட உங்கள் நிறுவனம் ஏராளமான துறைகளில் ஏற்கனவே கால் பதித்துள்ளது. இலங்கையில் மேலும் நீங்கள் புதிய வியாபாரங்களை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளீர்களா?

ப: நிச்சயமாக எமக்கு உத்தேசம் உள்ளது.

**கே:** எத்தகைய துறைகளில் உங்களது புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படும்?

ப: போட்டிகள் நிறைந்த வியாபார உலகில் சவால்களை எதிர்கொள்ளவும் மூலப் பொருள்களை உள்நாட்டிலேயே தேடிக் கொள்ளவும்,தரமான பொருள்களை உற்பத்தி செய்யவும் நாம் அக்கறை செலுத்துகிறோம்.

**கே:** யுத்தம் முடிவுற்ற பின் இலங்கையில் புதிய வர்த்தக முதலீடுகளுக்கு வாய்ப்புள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா?

ப: நிச்சயமாக வாய்ப்புகள் உள்ளன. எனினும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இன்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும். பொருள்களைக் கொண்டு செல்ல பாதைகள் மேலும் அபிவிருத்தி செய்யப் படவேண்டும்.

**கே:** பாதைகளை அபிவிருத்தி செய்யும் பணியுடன் அரசு வடபகுதி ரயில் சேவைகளையும் சீராக்க வெளிநாடுகளில் உதவியுடன் அபிவிருத்திகளை மேற் கொண்டுள்ளது. ரயில் சேவை அபிவிருத்திகள் உங்களுக்கு உதவுமா?

ப: நிச்சயமாக தரைப் போக்குவரத்தில் மிகவும் எளியதும் இலாபகரமானதும் ரயில் போக்குவரத்தே.

**கே:** இலங்கையின் ஏனைய பாகங்களை விட யாழ்.குடாநாட்டில் உங்களது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்ததற்கு விசேட காரணங்கள் ஏதாவது உள்ளனவா?

ப: நிச்சயமாக உண்டு. இலங்கையைப் பொறுத்த மட்டில் விவசாயத்தில் முதலிடம் வகித்து வந்ததுடன் வெங்காயம், மிளகாய்,மாம்பழம் என்று பல்வேறு விவசாயம் உற்பத்திகளில் முதலிடம் வகித்து வந்தது யாழ்ப்பாணம். இடைநடுவில் பயங்கரவாதம் காரணமாக இந்த விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டது. விவசாயத்தை உயிராக மதித்து வந்த யாழ்.விவசாயிகள் உயிருக்கு அஞ்சி விளைநிலங்களைக் கைவிட்டுச் சென்றது. இந்த நாட்டுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய பின்னடைவு.

**கே:** யுத்தம் முடிவடைந்து யாழ்ப்பாணம் படிப்படியாக முன்னேறி வருகிறது. அரசாங்கமும் வெளிநாடுகளும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. விவசாயத்துறையில் பல தசாப்தங்களாக அக்கறை காட்டி வரும் ஹேலீஸ் நிறுவனம் யுத்தம் முடிவடைந்த பின் உடனடியாகத் தனது நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்ததற்கு விசேட காரணங்கள் உள்ளனவா?

ப: நிச்சயமாக உள்ளன. யாழ்ப்பாணத்து மண் விவசாயத்துக்கென்றே இயற்கையால் உருவாக்கப்பட்ட வளமான மண். எதை விதைத்தாலும் விதைத்தவனை ஏமாற்றாமல் அள்ளித்தந்த, தரப்போகின்ற வளம் மிக்க பூமி. அத்தகைய வளமான பூமியின் விவசாயத்தையே பிரதான நோக்காகக் கொண்டு செயற்படும் எமது நிறுவனம் கால் பதித்துத்துள்ளது சரியான முடிவு.

**கே:** சகல வசதிகளையும் நீங்கள் ஏற்பாடு செய்துள்ளீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு, விவசாயிகளின் எதிர்பார்ப்பு அனைத்துக்கும் மேலாக இயற்கை அழிவுகளுக்கு முகம் கொடுக்கும் போது உங்களது மூலதனத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் காப்புறுதி நடவடிக்கைகள ஏதாவது உண்டா?

ப: நல்லதொரு கேள்வி. உலகில் பல பாகங்களில் இந்த காப்புறுத்திட்டம் நடைமுறையில் உள்ளது. எனினும் குறுகிய கால சவால்களை சந்திக்கும் இந்தக் காப்புறுதி நம் நாட்டில் இல்லை காரணம் அதற்கான மிகப்பெரிய கட்டணங்கள்.

**நேர்காணல்: சுப்பர்**

**கே:** அப்படியானால் நீங்கள் முதலீடு செய்து ஊக்குவிக்கும் விவசாய நடவடிக்கைகள் எதர்பார்த்த அளவு பெறுபேறுகளைத் தராவிட்டால் அது உங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தாதா?

ப: நிச்சயமாக ஏற்படுத்தும். அத்தகைய அழிவுகள் ஏற்படாது என்ற நம்பிக்கையில் நாம் எமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறோம். எனினும் எதிர்பாராத விதத்தில் நஷ்டங்கள் ஏற்பட்டால் அதை நாங்களே எதிர்கொள்ளவேண்டும். மாற்று வழிகள் கிடையாது.

(18ஆம் பக்கம் பார்க்க)





உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த நாம் ஓராண்டிற்கு முன்னர் வாக்குறுதி அளித்தோம். இன்னும் பல்லாண்டு காலம் உங்களுக்குச் சேவையாற்ற அந்த வாக்குறுதியை இப்பொழுது புதுப்பிக்கிறோம்.

புதிய அனுபவத்தை பெற வாருங்கள் இல.47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்துள்ள "The World of. Hayleys".

The World Of
Hayleys
Since 1878

www.hayleys.com

ஹேலீஸ் அக்ரோ – பேயர் குறொப்சயன்ஸ் விவசாய இரசாயனங்கள், அக்ரோடெக் [illegible] தெளிகருவிகள், ஹேலீஸ் பசளைகள், விதை நெல், ஹெல்த்கெயார் விலங்குநல பொருள்கள்.
ஹேலீஸ் கொன்சியூமர் – பியூஜி பிலிம், ஜீ.பி. மின்கலங்கள், டைட், பன்ரீன், [illegible] விஸ்பர், பிரிங்கிள்ஸ், [illegible] ஓரல் பீ, பிலிப்ஸ் லைட்டிங், ஹேலீஸ் இன்டஸ்ரியல் – பவர் எஞ்ஜினியரிங்
ஹேலீஸ் அட்வான்டிஸ் – எயார் இந்தியா எக்ஸ்பிரஸ், லொஜிஸ்டிக்ஸ் மற்றும் [illegible] பியூரிட்டான்ஸ் – முகக் கவசங்கள், குளிரூட்டியுள் துர்மணம் அகற்றிகள், பின். பிறெஷ்
ரயிலீஸ் – தள விரிப்புகள் தலவாக்கலை பிளான்டேஷன்ஸ் – மடெல் தேயிலை டிட் புறடக்ட்ஸ் – வீட்டுப் பாவனை றபர் கையுறைகள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைரஸ் தொற்றுப்பரவலைத் தடுப்பதற்கு பண்டிகைக் காலத்தில் விசேட சோதனை

## கடைத் தொகுதிகள் இலக்கு; சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

ஏ.எச்.வன். என்.வன் வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் நடவடிக்கையாக பண்டிகைக் காலங்களில் மக்கள் நெரிசல் உள்ள பிரதேசங்களில் காணப்படும் கடைத் தொகுதிகள், உப அஞ்சலகங்கள் மற்றும் சன நெரிசல்மிக்க பகுதிகள் என்பவை சோதனை செய்யப்படவுள்ளன.

- இவ்வாறு சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, குறித்த நிறுவன உரிமையாளர்களுக்கு இந்த நோய்த் தொற்றுப் பரவல் தொடர்பில் தெளிவுப்படுத்துமாறும் சுகாதார அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

புதிய இன்ப்லுவன்சா ஏ. எச். வன்.என்.வன் தொற்றை அழிக்கும் வேலைத்திட்டம் தொடர்பில், அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

கடைத்தொகுதிகள், உப அஞ்சலகங்கள் மற்றும் பொது இடங்களில் உள்ள படிகளில் உள்ள கைப்பிடிகள், தொலைபேசிகள், கணினிகள் மற்றும் உள் செல்லும் கதவுகளில் இந்த வைரஸ் தொற்றியிருக்குமாயின் அதனூடாக இந்தத் தொற்று பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுகின்றன என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த இடங்களின் உரிமையாளர்கள் இவ்வாறான பரவும் ஆபத்துள்ள பகுதிகளை உரிய முறையில் துப்புரவு செய்வதில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனடிப்படையிலேயே இவ்வாறான இடங்களில் அமைச்சு பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

அதுபோல் பொதுமக்கள் நெரிசலாக உள்ள இடங்களில் புதிய இன்ப்லுவன்சா ஏ.எச்.வன். என்.வன் தொற்றைக் கட்டுப்படுத்தும் வழிவகைகள் தொடர்பான விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன எனவும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (சி)

# தனியார் பஸ்களில் பயணிப்போருக்கு இ.போ.சவில் பயணிக்க அனுமதியில்லை

## மன்னாரில் பயணிகள் நடுத்தெருவில் அந்தரிப்பு

மன்னார், டிசெ. 28

மன்னாரில் தனியார் பஸ்களில் பயணம் செய்பவர்களை இலங்கை போக்குவரத்து பஸ்களில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டாமென மன்னார் இ.போ.ச. டிப்போ முகாமையாளர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு காரணமாக கொழும்பு, அனுராதபுரம், கெக்கிராவ ஆகிய இடங்களுக்குச் சென்று விட்டுத் தனியார் பஸ்களில் மன்னார் வந்த நான்கு பயணிகள் தலை மன்னார் செல்வதற்காக இ.போ.ச. பஸ்ஸிலில் ஏறியிருந்தபோது பஸ்ஸிலிருந்து பலவந்தமாக இறக்கி விடப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம்காலை இடம்பெற்றுள்ளது.

நத்தார் தினத்தன்று இரவு 10.30 மணியளவில் தனியார் பஸ்ஸில் மன்னார் வந்த இந்த நான்கு பயணிகளும் தலைமன்னார் செல்லும் இ.போ.ச. பஸ்ஸில் அதிகாலை 3.30 மணியளவில் ஏறியுள்ளனர். உடனடியாக இ.போ.ச. பஸ்ஸின் நடத்துநர் நீங்கள் எந்த பஸ்ஸில் வந்தீர்கள் என கேள்வி எழுப்பினார். பயணிகள் தனியார் பஸ்ஸில் வந்ததாகத் தெரிவிக்கவே, பஸ் நடத்துநர் தனியார் பஸ்களில் வந்தவர்களை ஏற்ற வேண்டாம் என மன்னார் இ.போ.ச. டிப்போ முகாமையாளர் பணித்துள்ளார் எனத் தெரிவித்தபடி அவர்களைப் பலவந்தமாக இறக்கி விட்டுச் சென்றுள்ளார்.

இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

# மனோதத்துவ சிகிச்சை அளிக்காமையால் 60ஆயிரம் பேர் படையைவிட்டு ஓடினராம்

கொழும்பு, டிசெ. 28

60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் இதுவரை படையை விட்டு விலகிச் சென்றுள்ளனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன எனப் இணையத்தளமென்று சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அதில் பங்குபற்றிய இராணுவத்தினருக்குத் தேவையான மனோதத்துவ மற்றும் வைத்திய சிகிச்சைகள் அளிக்கப்படாமையே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் நடைபெற்ற முதலாவது பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இராணுவ வீரர்கள் மாறுபட்ட மனோநிலையில் உள்ளார்களெனவும் அவர்களை மீண்டும் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடச் செய்வதற்கு முறையான மனோதத்துவ மற்றும் ஆற்றுப்படுத்தல் செயற்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதியிடமும் பாதுகாப்புச் செயலாளரிடமும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இதனை அசட்டை செய்து வேறு விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமையால் இராணுவத்தினர் விலகிச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யுத்தம் ஒன்று இடம்பெற்றதன் பின்னர் அனேக இராணுவத்தினர் 'போஸட ட்ருமெட்டிக் ஸ்ட்ரெஸ் டிஸ்ஓடர் (பி.ரி.எஸ்.டி) எனப்படும் மன அழுத்தத்துக்கு உட்படுவார்களெனவும் அவர்களை மீண்டும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்த அல்லது சமூக மயப்படுத்துவதற்கு முன்னர் அவர்களை முறையான சிகிச்சைக்குட்படுத்த வேண்டுமெனவும் சர்வதேச நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அவ்வாறு செய்யப்படாத பட்சத்தில் அண்மையில் வரகாபொலயில் இடம்பெற்ற சம்பவங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. வரகாபொலச் சம்பவத்தில் காவல்படையின் முக்கிய பிரிவைச் சேர்ந்த மொமாண்டோப் படையிலிருந்து தப்பிச்சென்ற சிலர் சம்பந்தப்பட்டிருப்பதுடன் அவர்கள் அனைவரும் பின்னர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# நல்லிணக்கக்குழு முன் சாட்சியமளிக்க ரணிலுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு

கொழும்பு, டிசெ. 28

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோக பூர்வமாக எழுத்து மூலக் கோரிக்கை அடுத்த வாரமளவில் விடுக்கப்படவுள்ளது எனத் தெரியவருகிறது.

போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விளக்கம் கோரப்படவுள்ளது என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற சமாதான உடன்படிக்கையில் அரசின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்டிருந்தார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தோல்வியடைந்தமை முதல் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தமை வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த ஆணைக் குழுவை நியமித்தார்.

இதன்படி, யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பான சில முக்கிய விடயங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்கவிடம் விளக்கம் கோரப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.பி. அத்துகொட ஏற்கனவே உத்தியோகப்பற்றற்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தொலைபேசி ஊடாக அத்துகொட இந்த அழைப்பை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றிற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர் என்ற ரீதியில் சாட்சியமளிக்க வேண்டுமாயின் உத்தியோக பூர்வமான அழைப்பு விடுக்கப்பட வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதையடுத்து அடுத்த வாரமளவில் ஆணைக்குழு ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோக பூர்வமாக எழுத்து மூலக் கோரிக்கையை விடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## தமிழக அகதி முகாம்களில் விசேட சோதனை

# ஈழத் தமிழரை அவுஸிக்குக் கடத்தும் நபர்களுக்கு கியூப் பிரிவினர் வலை

சென்னை, டிசெ. 28

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கான முகாம்களில் விசேட சோதனைகளை மேற்கொள்ள கியூப் பிரிவுப் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து பெற்றுத் தருகிறோம் எனத் தெரிவித்து ஈழ அகதிகளை ஆஸ்திரேலியாவுக்குக் கடத்தும் நபர்களைச் கைதுச் செய்வதற்கே இந்த விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆள் கடத்தல் மோசடி தொடர்பில், முகாம்களில் இருக்கும் மக்களுக்கு தெளிவுபடுத்தல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன என கியூ பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் பெற்றுத்தருகிறோம் எனக் கூறி, இந்த முகாம்களில் உள்ள மக்களை மையப்படுத்தி பெருமளவான நிதிகளைப் பெற்றுவரும் இந்த முகவர்கள் தமிழ் நாட்டிலேயே அதிகம் இருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளன.

இவர்களைக் கைது செய்வதற்காக இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரம் இராமநாதபுரம் பிரதேசத்தில் இவ்வாறான நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர். இதனிடையே தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 113 முகாம்களில் 72 ஆயிரம் இலங்கை அகதிகள் உள்ளனர்.

ஆஸ்திரேலியா மற்றும் கனடாவுக்கு ஆள்களை கடத்தும் நோக்கில் இந்த முகவர்கள் இலங்கை அகதிகளுக்குப் போலியான ஆவணங்களைத் தயாரித்துக் கொடுப்பதற்கு ரூபா ஒரு லட்சம் தொடக்கம் 2 இலட்சம் வரையில் பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகத்தின் பேரில் பிக்கு கைது

கொழும்பு, டிசெ.28

அத்துறுவாகொட வவுலகல பகுதி விகாரையில் உள்ள பிக்கு ஒருவர் 8 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என அத்துறுவாகொடப் பொலிஸில் சனிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அறியவருகிறது.

இந்த முறைப்பாட்டை அடுத்து விசாரணைகளை நடத்திய அத்துறுவாகொட பொலிஸார் குறித்த பிக்குவை நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான பிக்கு சனிக்கிழமை ஹொரணை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். இதுதொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# இலஞ்ச ஊழல்களைக் கவனிக்க விசேட குழு

கொழும்பு, டிசெ.28

போக்குவரத்துப் பிரிவில் இடம்பெறும் இலஞ்ச ஊழல்களைக் கண்காணிக்கவென விசேட குழுவொன்று எதிர்வரும் ஜனவரி 15 ஆம்திகதிக்கு முன்னர் நியமிக்கப்படவேண்டும் என அகில இலங்கை பஸ் நடத்துனர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அகில இலங்கை பஸ் நடத்துனர் சங்க தலைவர் ஸ்டான்லி பெர்னாண்டோ இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், குழு நியமிக்கப்பட்டதும், குறித்த குழுவிடம் போக்குவரத்துப் பிரிவில் இடம்பெறும் ஊழல்மோசடி குறித்து சங்கம் அறிந்த விடயங்களை சாட்சியமாக அளிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# நத்தார் கொண்டாட்ட விபத்துக்களால் பாதிக்கப்பட்ட 500இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைகளில்

கொழும்பு, டிசெ.28

நத்தார் பண்டிகைக் கொண்டாட்டங்களால் ஏற்பட்ட திடீர் விபத்துகளில் காயமடைந்த 500இற்கும் மேற்பட்டோர் சனிக் கிழமை இரவுவரை நாட்டின் பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துப் பிரிவில் நண்பகல்வரை 300 இற்கும் மேற்பட்டோர் [illegible] அனுமதிக்கப்பட்டனர் என்றும், இவர்களில் 91 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் விபத்துச் சிகிச்சைப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கையானது கடந்த வருடம் இதேகாலப் பகுதியில் காயமடைந் தவர்களின் எண்ணிக்கையை விட அதிகமெனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

இத்தகைய திடீர் விபத்துகளால் களுபோவில தேசிய வைத்தியசாலையில் நேற்று முன்தினம் நண்பகல்வரை 130 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அதன் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

இதேபோன்று மாத்தளை வைத்தியசாலையிலும் திடீர் விபத்துகளில் காயமடைந்த 31 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என அவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் என்.ஏ. எஸ்.ஈ.சமரக்கோன் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

O/L, A/L மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

GATEWAY CfICT

- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking
- International Computer Driving Licence
- e-Citizen

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

FAST TRACK Training Programme



மற்றும்

| | |
|---|---|
| Fundamentals of IT | Computer Hardware |
| Windows XP | Adobe Pagemaker |
| Word Processing MS Word 2007 | Adobe Photoshop |
| Spreadsheet Ms Excel 2007 | Adobe Premiere |
| Database Ms Access 2007 | Corel Draw |
| Presentation Ms PowerPoint 2007 | Internet & e Mail |

e-Kids



ஆரம்பம் 01.01.2011

IT ISLAND GATEWAY CENTRE

347, Kasthuriyar Road, Jaffna
021 567 5555 / 222 7967

Luxsmee Theatre Lane, Nelliyady
021 226 2395

New Market Building, Chavakachcheri
021 227 0323


# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

## திதி: 28-12-2010



| மலராக | சருகாக |
|---|---|
| 05 | 12 |
| 03 | 23 |
| 1954 | 2005 |

அமரர்
**நல்லதம்பி தர்மலிங்கம்**

தாலாட்டும் மடி ஒன்று தரணி விட்டுப் போனதென்ன
தாயாகி தந்தையான தயாபரனே எந்தையே..
இன்னொரு முறை இன்முகம் காண்போமா
இல்லை உம் நினைவோடு வாழ்வோமோ?
காலன் கடத்தி வானில் தூவினனோ..
தாமரைகள் மதியென்று இன்னுயிர் எடுத்து
காற்றினில் கரைத்தனரோ...
ஈரம்...... மதியென்று மண்ணோடு எம்மனம்
அல்லாடி அலைகையில் தாளாத தவம் கொண்டு
துணைவியாள் இங்கு சுமைகொண்டு தவிக்கின்றார்.....
உமைமறவா செல்வங்கள்.....
காலங்கள் கரைந்திடினும் ஜென்மங்கள் விரைந்திடினும்...
காத்திருப்போம் உமைச்சேர...
பிரார்த்திப்போம் உம் சாந்திக்காக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

[illegible] வீதி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மைவெளிக்கு வெள்ள நிவாரணம்; பாரபட்சம் காட்டப்படுவதாக முறைப்பாடு

## அரச அதிபருக்கு முஸ்லிம் மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.28

பொம்மைவெளிப் பிரதேச முஸ்லிம் மக்களின் விடயத்தில் பிரதேச செயலாளர் பாரபட்சமாக நடந்துகொள்கிறார்.

எனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுத் தர அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய சோனகதெரு, மஸூஜிதுல் அபூபக்கர் பள்ளிவாசல் நிர்வாகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த மாதம் 26ஆம் திகதி தொடக்கம் பெய்த கடும்மழையினால் எமது முஸ்லிம் பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

குறிப்பாக பொம்மைவெளிப் பிரதேசம் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டது.

அங்கு 82 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. 41 குடும்பங்கள் இடம்பெயர்ந்து ஒஸ்மானியாக் கல்லூரியில் தஞ்சம் புகுந்து கொண்டன. இவ்வாறு இடம்பெயர்ந்த குடும்பங்களது பதிவுகள் கிராம அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பதிவுகள் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த 22 ஆம் திகதி வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் 12 குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் பாதிக்கப்படாத அதிக எண்ணிக்கையான குடும்பங்களுக்கு ஜே/88 கிராம அலுவலரினால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

எமது முஸ்லிம் மக்களின் விடயத்தில் பிரதேச செயலர் பாரபட்சமாகவே ஆரம்பம் முதல் நடந்துகொள்கிறார்.

எமது பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டபோது எமது அழைப்பின் பேரில் நேரடியாக அவர் பார்வையிட வந்தார்.

இது சிறிய வெள்ளம்தான் பெரிய வெள்ளத்தைப் பார்க்க வந்தேன் எனக் குறிப்பிட்டார்.

இனிமேல் இதுபோன்ற தவறைப் பிரதேச செயலர் மேற்கொள்வாராயின் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் செய்து அரச அதிபராகிய தங்களிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்க நேரிடும்.

எனவே, இந்த விடயம் தொடர்பாகத் தாங்கள் கிராம அலுவலர், பிரதேச செயலாளர் ஆகிய இருவரையும் அழைத்து விசாரணை செய்யவேண்டும். அதன் மூலம் எங்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத் தருவீர்கள் என நாம் முஸ்லிம் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ம-14)

# கரந்தன் - ஊரெழு வீதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் சிரமம்

கோப்பாய்,டிசெ.28

கரந்தன் - ஊரெழு வீதியில் பொது மக்கள் பல்வேறு கழிவுகளைக் கொட்டி வருவதால் வீதியை அண்டி இருக்கும் மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் அருகில் உள்ள விளைநிலங்களும் பாதிப்படைகின்றன.

பாவித்த புடைவை வகைகள், போத்தல், பீங்கான் வகைகள், தகரங்கள், முடிமயிர்கள் போன்றவையே இவ்வாறு அதிகளவில் கொட்டப்படுகின்றன.

இரவு வேளையில் தமது வாகனங்களில் கொண்டுவரும் பொதி செய்யப்பட்ட மூடைகளை இப்பகுதியில் போட்டுச் செல்வதாக அப்பிரதேச பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபைகள் கழிவுப் பொருள்களை கொட்டுவதற்கு உரிய இடம் ஒதுக்கியும் அதனைக் கருத்திற்கொள்ளாது தமது சுயநலம் கருதிய நோக்கில் சிலர் தொழிற்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ம-72)

# உடுவில் பிரதேச செயலக கிறிஸ்மஸ் விழா

கோப்பாய்,டிசெ.28

உடுவில் பிரதேச செயலக கிறிஸ்மஸ் விழாக் கொண்டாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக முன்றிலில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஈ.எஸ்.ரஞ்சித்ராஜும் ஆசியுரைகளை மல்வம் உடுவில் பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் யஸ்ரின், உடுவில், சத்தியபுரம் தூய பவுல் ஆலய போதகர் அருட்பணி சதீஸ் டானியேலும் வழங்கவுள்ளார்கள்.

ஒளி விழாச் செய்தியை மல்லாகம் குளமங்கால் பங்குத் தந்தை அருட்பணி எம்.றெக்ஸ் சவுத்தரா வழங்கவுள்ளார்.

தொடர்ந்து நடனம், குழுப் பாடல், சமூக நாடகம், நகைச்சுவை, தாளலயம் என்பனவும் இடம்பெறவுள்ளது. (ம-86)

# கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

கோப்பாய்,டிசெ.28

கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகப் பல்வேறு தரப்பினரும் முறையிடுகின்றனர்.

சுமார் 10-15 வரையான நாய்கள் இங்கு தங்கி இருக்கின்றன. இவை விடுதி நோயாளர்களின் உணவு மீதிகளையும் அயல் வீடுகளுக்குச் சென்று உண்டுவிட்டு வருவதுடன் வைத்தியசாலையிலேயே படுத்து உறங்குகின்றன.

இந்த நாய்கள் விடுதிகளில் சண்டையிடுவதுடன் அங்கு கடமைபுரியும் பணியாளர்கள் மற்றும் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கும் தொல்லை கொடுத்து வருகின்றன.

தற்போது மருத்துவமனை வளாகத்தை முழுமையாக எல்லைப்படுத்தி சுற்றுமதில் அமைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்படுத் தப்பட்ட போதிலும் இந்த நாய்கள் இங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டதால் அவற்றைத் துரத்த முடியவில்லை எனக் கூறப்படுகிறது.

இவற்றைத் தகுந்த முறையில் அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-72)

## திறமை...



வெளிப்பாடு: வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிதியம் நடத்திய இசை, நடனப் பெருவிழாவில் பாட்டுக் கச்சேரியும் நடனமும் இடம்பெறுகின்றன. (7)

# பொதுமக்களிடம் திருடப்பட்ட ஆறு சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்பு

வலி.வடக்கு,டிசெ.28

கடந்த காலங்களில் பொது மக்களிடம் களவாடி விற்பனை செய்யப்பட்ட ஆறு சைக்கிள்களை சுன்னாகம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சைக்கிள்களை வாங்கியோரிடம் இருந்தே அவற்றை மீட்டுள்ளனர்.

ஆண்கள் பாவிக்கும் மூன்று 'லுமாலா' சைக்கிள்கள் (இலக்கங்கள் 300366, 55577325, 55962595) மற்றும் பெண்களின் சைக்கிள் (69273678) உட்பட இரண்டு 'கீறோ' சைக்கிள்கள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

சைக்கிள்களைத திருட்டுக் கொடுத்தவர்கள் சுன்னாகம் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு அடையாளம் காட்டி ஆவணங்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றில் இருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளனர். (ம-86)

# இரண்டாம் மொழியறிவை வளர்க்கவே பட்டதாரிகளுக்கு இலவச மொழிப் பயிற்சி

## 'ஈ.யூ. போரம்' நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

வலி.வடக்கு,டிசெ.28

யாழ்.மாவட்டப் பட்டதாரிகளிடம் இரண்டாம் மொழி அறிவை வளர்க்கும் முகமாகவே சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளை 'ஈ.யூ.போரம்' நிறுவனம் இலவசமாகக்கற்பித்துவருகின்றது.

மேற்கண்டவாறு ஜேர்மனியைத்தலைமையகமாகக்கொண்டு யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதி, 29ஆம் இலக்கத்தில் இயங்கிவரும் ஈ.யூ.போரம் நிறுவனத்தின் தலைவர் எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்போது சுமார் 300 இற்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள் இலவசமாகச் சிங்களம், ஆங்கில மொழிகளைக் கற்று வருகின்றனர்.

இவர்களுடைய உரிய மொழிப் பயிற்சி நெறிகள் முடிவடைந்ததும் இரண்டாம் தொகுதியினர்களுக்கான சிங்கள, ஆங்கில மொழிப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன. இரண்டாவது தொகுதிக்கு நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் மாணவர்கள் இந்த மொழிப் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பினால் உரிய நிறுவனத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு பதிவுகள் செய்யலாம் எனவும் குறிப்பிட்டார்.

மொழி அறிவை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதனை நோக்கமாகக் கொண்டே இந்த இலவசப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் கூறினார். (ம-86)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மூடப்பட்டுள்ள ச.ச. நிலையங்களை இயங்க வைக்குமாறு அறிவுறுத்து

சண்டிலிப்பாய்,டிசெ.28

மக்களின் கல்வி வளர்ச்சிக்காகக் கிராமங்கள் தோறும் ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் இயங்காமல் இருப்பது அப்பகுதி மக்களுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

எனவே, மூடியிருக்கும் சனசமூக நிலையங்களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான முருகேசு சந்திரகுமார் வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்திடம் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக ஆராயப்பட்டபோது பல சனசமூக நிலையங்கள் இயங்காமல் இருப்பது தெரியவந்தது.

சனசமூக நிலையங்கள் இயங்குவதற்கான நிதியை அரசு வழங்கிவரும் இந்த நிலையில் சில நிலையங்கள் மூடப்பட்டிருப்பது மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகம் என்றும் இயங்காத நிலையங்களை தொடர்ந்து இயங்கவைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் சமாசத் தலைவரிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-115)

# காக்கைதீவு இந்து மயானத்தை இடம்மாற்றுமாறு கோரிக்கை

மக்கள் நெருக்கமாக வாழும் காக்கைதீவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயானத்தை அப்பகுதியில் வசிக்கும் மக்களின் நலன்கருதி கடற்கரை ஓரமாக மாற்றி அமைக்குமாறு சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் வலி. தென் மேற்கு பிரதேச சபை செயலாளரைக் கோரியுள்ளார்.

மயானம் அமைந்துள்ள பிரதேசம் கடந்த காலங்களில் குடிமனை இல்லாத பரந்த வெளியாகக் காணப்பட்டது. இதனால் மயானத்தில் சடலங்கள் தகனஞ் செய்யப்படும் போது மக்களுக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படவில்லை.

தற்பொழுது இப்பிரதேசத்தில் மக்கள் குடியமர்ந்து வருவதனால் நாளுக்கு நாள் மக்கள் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது. நெருக்கமாக மக்கள் வசித்து வரும் இடத்தில் அமைந்துள்ள இந்த மயானத்தில் சடலங்கள் எரிக்கப்படுவதனால் மக்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதுடன் சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்படுகின்றது.

எனவே இப்பகுதியில் வசிக்கும் மக்களின் நலன் கருதி இந்த மயானத்தை மக்கள் குடியிருப்பு இல்லாத கடற்கரை ஓரமாக மாற்றி அமைத்து உதவுமாறு அந்தக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடர்:**
உள்ளம் மகிழும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். விரயங்களைத் தவிர்க்க விழிப்புடன் செயற்பட வேண்டும். மனைவி வழி உறவுகள் மூலம் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். உறவினர் அல்லது நண்பர் ஒருவருடன் வெளியூர்ப் பயணம் செல்லலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம்.

**இடபர்:**
சில பிரச்சினைகளால் கோபம், வேகம் அடையலாம். சொத்துப் பரச்னைகளில் எச்சரிக்கை அவசியம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். கணவன் மனைவி உறவில் சிறு சலசலப்புகள் ஏற்படலாம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உதாசீனம் செய்யலாம். உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம்.

**மிதுனர்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். நல்ல காரியங்களை நடத்த மேற்கொண்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்தது மட்டுமின்றி, எதிர்பாராத சில காரியங்களும் நடக்கலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கைக் காட்டுவீர்கள். கணவன், மனைவியர் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

**கடகர்:**
வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்கலாம். கடன் மிகுதி ஒன்றைக் கொடுப்பீர்கள். பெண்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். எங்காவது புறப்படும் நேரத்தில் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். சிலரிடம் வீண் வம்பு பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். உங்களுக்கு எதிராகச் செயற்படும் சிலரை அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

**சிங்கர்:**
பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். முக்கியமான விடயம் ஒன்றில் ஏற்பட்ட குழப்பம் நீங்கித் தெளிவு பிறக்கும். கடந்த காலத்தில் உதவி செய்ய மறுத்த உறவினர் ஒருவர் தேடி வந்து உதவலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

**கன்னி:**
சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். வாய்ப்புகளை நழுவ விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பெண்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகத் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை இன்று நேரில் சந்திக்கலாம். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலார்:**
எடுத்த காரியங்களை இடையூறின்றி செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். நிதியுதவி, கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. விருப்பமான உணவு வகைகளைச் சாப்படுவதில் நாட்டம் செல்லும். பொறுப்பாகச் சில வேலைகளைச் செய்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள்.

**விருச்சிகர்:**
தொலைபேசி வழியில் இனிப்பான செய்திகளைக் கேட்கலாம். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். பல நாள்களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்குச் செல்வீர்கள். தவறு எனத் தெரிந்தும் சில காரியங்களைத் துணிச்சலாகச் செய்வீர்கள்.

**தனுசு:**
திடீர்ப் பயணங்கள் செல்லலாம். மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்க நேரிடலாம். கையிருப்பு குறைந்து பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். சாமர்த்தியமாகப் பேசி சிலரை உங்கள் வழிக்கு கொண்டுவர முற்படுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம்.

**மகரர்:**
எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். திட்டமிட்ட காரியம் ஒன்றில் மாற்றங்களைச் செய்யலாம். நீங்கள் எதிர்பார்த்த ஒருவர் உங்களைக் கடைசி நேரத்தில் கைவிடலாம். சகோதரர்கள் விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்லவும். அதிக விலை கொடுத்து சில பொருள்களை வாங்கியும் திருப்தி இல்லாமல் போகலாம்.

**கும்பர்:**
பணச்செலவு அதிகரிக்கும். பிரியமான சிலருடன் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கும் வாய்ப்பு உருவாகும். நோய் உபாதைகளில் இருந்து விடுபட்டு தெம்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் எதிர்பார்த்தது போல நடக்கும்.

**மீனர்:**
நினைத்த காரியங்கள் நினைத்த நேரத்தில் முடிவுக்கு வரும். வீட்டில் சில மாற்றங்களைச் செய்வீர்கள். சிலர் உங்களிடம் கோபமாக நடந்து கொண்டாலும், நீங்கள் அமைதியாக இருப்பீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். உறவினர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம்.

# அரிசிமாவைக் கொண்டு பேக்கரி உணவுகள்; விசேட ஆலைகளை அமைப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு,டிசெ.28

பேக்கரி உணவு வகைகளை தயாரிப்பதற்கு பொருத்தமான மென்மையான அரிசிமாவை உற்பத்தி செய்வதற்காக, சுமார் 50 சிறிய, நடுத்தர ஆலைகளை அமைக்கும் முயற்சிக்கு மத்தியவங்கி ஆதரவளிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் ஆறு ஆலைகள் அடுத்த வருடம் முதல் ஆறு மாதங்களுக்குள் அமைக்கப்படும். 18-20 மைக்குரோன் அளவுள்ள அரிசிமாவை பயன்படுத்தி பேக்கரி உணவு வகைகளைத் தயாரிக்க முடியும் என மத்திய வங்கியின் உதவி ஆளுநர் தெரிவித்தார்

இவ்வாறு குறைவான மைக்குரோன் அளவுள்ள அரிசிமாவுடன் கோதுமை மாவையும் கலந்து பாண் தயாரிக்க முடியும். கோதுமை மா 25 சதவீதம் இருப்பின் போதும். இதனால் அரிசிக்கான கேள்வி அதிகரித்து நாட்டின் நெற்செய்கைக்கு ஊக்குவிக்கப்படும். (சி)

## மகிழ்வு......



ஒன்றுகூடல்: கியூடெக்- கரித்தாஸ் நிறுவனம் புங்குடுதீவுக் கிராம சிறார்களுக்கு ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்றை நடத்தியது. ஒன்றுகூடலில் கலந்துகொண்ட சிறுவர்கள் . (160)

## முனிவரின் வைராக்கியம்



ஒரு மரத்தடியில் முனிவரொருவர் அமர்ந்திருந்தார். அவர் ஒரு ஊசியில் நூலைக் கோர்த்துத் தன் வேட்டியில் இருந்த கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தார். அவர் கைதான் அந்தக் கடமையைச் செய்து கொண்டிருந்தது. ஆனால் அவர் மனமோ கடவுளை நினைத்துக் கொண்டிருந்தது.

அச்சமயத்தில் பார்வதியும் பரமசிவனும் ஆகாய வீதியில் வலம் வந்து கொண்டிருந்தார்கள். மரத்தடியில் ஒளிப்பிழம் பாக அமர்ந்திருந்த முனிவரை ஜகன்மாதா வாகிய பார்வதி நோக்கினாள். பரமசிவனிடம் ''அங்கே பார்த்தீர்களா?'' என்று கேட்டாள். ''பார்த்தேன்'' என்றார் அவர்.

''பிறகென்ன? நாம் அவரைப் பார்த்த பின்பும் சும்மா போனால் எப்படி? வாருங்கள்! அங்கே சென்று அவருக்கு வரம் ஏதாவது கொடுக்கலாம்'' என்றார் அன்னை. பரமசிவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

''அந்த முனிவரைப் பற்றி எளிதாக நினைத்து விடாதே! அவர் அந்த நிலைகளையெல்லாம் கடந்தவர். இப்போது நாம் அவரிடம் செல்வது வீண் வேலை. எனவே அவரிடம் போக வேண்டாம் வா! நம் வழியில் நாம் போகலாம்!'' என்றார் சிவபெருமான்.

ஜகன்பிதா இவ்வாறு கூறினாலும் ஜகன்மாதா அவரை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்துச் சென்றார். முனிவர் அவர்களை நிமிர்ந்து பார்த்து, ''அடடே! அம்மையும் அப்பனுமா!'' என்று சொல்லி அன்புடன் வரவேற்றார். இருவரும் குடிப்பதற்கு மோர் கொடுத்தார் முனிவர். அவ்வளவுதான். அதைக் கொடுத்து விட்டு அவர் தன்பாட்டுக்கு முன்பு போலவே தைக்கத்தொடங்கினார்.

பரமசிவனும் பார்வதியும் சிறிது நேரம் பொறுமையுடன் அவருக்காகக் காத்திருந்து பார்த்தார்கள். அவர்களை முனிவர் நிமிர்ந்து பார்க்கும் வழியைக் காணோம். அவர்கள் இருப்பதை அவர் கண்டுகொள்ளவேயில்லை. ''சரி நாங்கள் புறப்படுகிறோம்'' என்று அம்மையும் அப்பனும் குரல் கொடுத்தார்கள்.

அதற்கு, ''ரொம்ப சந்தோசம், போய் வாருங்கள். வணக்கம்'' என்றார் முனிவர். அப்படிச் சொல்லிவிட்டு மீண்டும் துணியைத் தைக்கத் தொடங்கினார். பார்வதி, பரமசிவனிடம் ஏதாவது கேளுங்கள் என்பது போல் சைகை செய்தாள்.

அவரும் அதைப் புரிந்துகொண்டு முனிவரைப் பார்த்து [illegible]ரே நாங்கள் ஒருவருக்குத் தரிசனம் கொடுத்தால் அவருக்கு ஏதாவது வரம் கொடுத்துவிட்டுப் போவதுதான் வழக்கம். ஆகவே உங்களுக்கு ஏதாவது வரம்....!'' என்று சொல்லி இழுத்தார். முனிவர் லேசாகச் சிரித்தார். ''வரமா? உங்கள் தரிசனத்தை விடவா? அதெல்லாம் இந்தக் கட்டைக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்'' என்று கூறி மறுபடியும் தன் வேலையைத் தொடர்ந்தார்.

இருந்தாலும் பார்வதியும் பரமசிவனும் வரம் கொடுக்காமல் செல்வதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள். முனிவர் பார்த்தார்; 'சரி அப்படிக் கட்டாயம் ஏதாவது வரம் கொடுத்துவிட்டுத்தான் போக வேண்டும் என நீங்கள் நினைத்தால் ஒன்று செய்யுங்கள், இந்த ஊசிக்குப் பின்னாலேயே இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள்'' என்றார். இதைக் கேட்டதும் பார்வதி பரமேசுவரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. எனவே அவர்கள், ''ஏற்கனவே இந்த ஊசிக்குப் பின்னால் நூல் போய்க் கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் ஏன் வரம் கொடுக்க வேண்டும்?'' என வினவினார்கள்.

''அதையேதான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்துகொண்டு வந்தால், வரவேண்டிய பலன் நியதிப்படி தானாகவே பின்னால் வரும். நடுவில் நீங்கள் ஏன் எனக்கு வரம் கொடுக்கவேண்டும்'' என்று கேட்டார் முனிவர்.

இதைக் கேட்டதும் பரமசிவனும், பார்வதியும் சிரித்துக் கொண்டே தங்கள் வழியே சென்றார்கள். இந்த முனிவர் எய்திய காட்சிக்குத்தான் ''மருள் நீங்கிய மாசறு காட்சி'' என்கிறார், நினைவுக்கலை ஏந்தல் தசாவதானி- திருக்குறள் இராமையா அவர்கள்- முப்பது வயதில் பார்வையை இழந்த அவர், திருக்குறள் ஒளியைத் துணையாகக் கொண்டவர் நம் காலத்தில் வாழ்ந்தவர்.

''இருள் நீங்கி இன்பம் பயக்கும்
மருள் நீங்கிய மாசறு காட்சி யவர்க்கு''

என்ற குறளில் வரும் ''மருள் நீங்கிய மாசறு காட்சி'' என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக அவர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்.

''மனதைத் தூய்மைப்படுத்தத் தவறியவன் இறைவனை நம்பியும் பயனில்லை. இறைவனை நம்பாமலிருந்தும் பயனில்லை'' என்றார் அவர்.


மேலே சொல்லப்பட்ட கதையில் வரும் முனிவர் வேண்டுதல், வேண்டாமை என்ற நிலைகளைக் கடந்தவர், எதையும் எவரிடமிருந்தும் எதிர்பார்க்காதவர். இப்படிப்பட்டவர்கள் முன்வினை எனப்படும் பிரார்ரப்த கர்மம் காரணமாக உலகில் தங்களுக்கு வாய்த்த கடமைகளைச் செய்து கொண்டிருப்பார்கள்; ஆனால் அவர்கள் மனம் மட்டும் எப்போதும் பரமாத்மாவிடம் லயித்து ஒன்றியிருக்கும். ஆகவே எந்த ஆசையும் இல்லாதவர்களுக்கு எந்தத் தேவையும் இல்லை என்பதை முனிவரின் இந்தக் கதை மூலம் அறிய முடிகிறது.

கோ.ச.[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய கீதம் நல்லிணக்கம் உரிமைகள் நல்லாட்சி ?



> **போருக்குப் பின்னான இன்றைய நிலைமையை முரண்பாட்டுக்குப் பின்னானதொரு நிலைமையாக மாற்றுவதுதான் பிரதான சவாலாக விளங்கும் நிலையில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் சிங்கள மொழியில் மாத்திரம்தான் தேசியகீதம் இசைக்கப்படவேண்டும் என்ற தீர்மானமானது பெரும்பான்மை வாதத்தினைக் காட்டும் ஒரு செயலாகவே அமைகிறது.**

கடந்த டிசெம்பர் 12ஆம் நாளன்று கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் வார இதழின் தலையங்கம் குழப்பத்தினைத் தருவதாக அமைந்தது.

இலங்கையின் தேசியகீதமானது சிங்கள மொழியில் மாத்திரம் பாடப்பட வேண்டும் என இலங்கை அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கை அமைச்சரவையில் இந்த விடயம் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றதாகவும் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் தொடர்ந்து குறிப்பிடப்பட்டிருக்கிறது.

போருக்குப் பின்னான இன்றைய நிலைமையினை முரண்பாட்டுக்குப் பின்னானதொரு நிலைமையாக மாற்றுவதுதான் பிரதான சவாலாக விளங்கும் நிலையில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இந்தக் காலப் பகுதியில் சிங்கள மொழியில் மாத்திரம்தான் தேசியகீதம் இசைக்கப்படவேண்டும் என்ற தீர்மானமானது பெரும்பான்மை வாதத்தினைக் காட்டும் ஒரு செயலாகவே அமைகிறது.

நாட்டினது வடக்குப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வுகளின்போது தேசிய கீதத்தினைச் சிங்களத்திலேயே இசைக்குமாறு படையினர் பணித்திருக்கிறார்கள்.

அரசின் இந்த நகர்வானது பொருத்தமானதொன்றல்ல என்று முன்னாள் இடதுசாரிக் கட்சியின் தலைசிறந்த அரசியலாளரும் சமூக இணக்கம் மற்றும் உத்தியோகபூர்வ மொழிகளுக்கான அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவும் அமைச்சர் ராஜித சேனாரத்தினவும் கூறியிருப்பதை 'சண்டே ரைம்ஸ்' தனது செய்திக் குறிப்பில் குறிப்பிடவில்லை.

உலகில் வேறெந்த நாட்டிலும் தேசிய கீதம் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் பாடப்படுவதில்லை என ஜனாதிபதி கூறியதாக 'சண்டே ரைம்ஸ்' கூறியிருக்கிறது.

மஹிந்தவின் இந்தக் கூற்றினை வலுப்படுத்தும் வகையில், பல மொழிகள் பேசப்படும் இந்தியாவில்கூட ஹிந்தி மொழியிலேயே தேசியகீதம் பாடப்படுவதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறுகிறார்.

பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வீரவன்ஸ, தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவது நகைப்புக்கிடமான விடயம் என்றார்.

கனடாவில் அந்த நாட்டினது தேசிய கீதம் ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் பயன்படுத்தப்படுவது தொடர்பிலோ அன்றி தென்னாபிரிக்காவில் பயன் பாட்டிலுள்ள ஐந்து மொழிகளில் அந்த நாட்டினது தேசியகீதம் இசைக்கப்படுவது தொடர்பாக எவருமே கருத்துத் தெரிவிக்காதது ஆச்சரியத்துக்குரியது.

சுவிஸ் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளிலும் இதுபோல அந்த நாடுகளில் பயன்பாட்டிலுள்ள மொழிகள் பயன்பாட்டிலுள்ளது. அதுபோல இந்தியாவின் தேசிய கீதம் பெங்காலி மொழியிலும் இசைக்கப்படுகிறது.

இதுபோல் குறிப்பிட்ட இந்த நாடுகளில் பலமொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படும் நிலையில் அமைச்சர் வீரவன்ஸ இந்த நாடுகளை 'நோகடிக்கும்' வகையில் கருத்துக்களைக் கூறுகிறார் என்றும் அவர் இந்தியா, தென்னாபிரிக்கா, கனடா, சுவிஸ் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய கூறுகிறார்.

இதுபோன்ற சம்பவங்கள் ஆட்சியாளர்களின் இரண்டாவது பதவிக் காலத்தின் முதல் மாதத்திலேயே பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 18ஆவது திருத்தம் என்பவற்றுடன் அவர்களது சிந்தனைகள் தொடர்பில் மேலும் பலவற்றை எமக்குச் சொல்ல விளைகிறதா?

போரில் கொல்லப்பட்ட படைவீரர்களின் குடும்பத்தில் மூன்றாவது குழந்தை பிறக்கும்போது ஒரு லட்சம் வழங்குவது என்ற அறிவிப்பை எடுத்துக்கொள்ளுங்கள்.

இந்த வகையில் ஒரு படைவீரன் மாவீரன் ஆகும்போது அவர்களில் எத்தனைபேர் முஸ்லிமாக அல்லது தமிழராக இருப்பர்?

இதனை நல்லிணக்கம் ஏற்படுத்தும் விடயத்தில் முரண்பாடு என்பதா அல்லது கொடூர பெரும்பான்மைவாதத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாடு என்பதா?

உதாரண[illegible] பொதுவி[illegible] தொடர்பாடல் அமைச்சராக நியமித்தமை ஆட்சியாளரின் ஆட்சி முறைமை தொடர்பான எத்தகைய மனநிலையைப் பிரதிபலிக்கிறது?

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின விமான நிலையத்தில் வைத்து மோசமாக நடத்தப்பட்டமை மற்றும் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவினர் விமான நிலையத்தின் வரிவிலக்கு விற்பனை நிலையங்களில் பணம்கொடுக்காமல் கொள்வனவு செய்தமை என்பன இலங்கையில் நிலவுகின்ற சட்டம் ஒழுங்கு முறையின் தன்மையினை எடுத்துக் காட்டுகிறதா?

கசினோ விடுதிகள் தொடர்பான சட்டமூலம் பற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடுதான் என்ன? ஹெல உறுமய தேர்தல் அரசியலில் நுழைந்த காரணம்தான் என்ன? இன்றைய அரசின் சொல்லாட்சி தொடர்பில் இந்தச் சட்ட மூலம் உணர்த்துவதுதான் என்ன?

இதுபோன்றே வர்த்தக ரீதியிலான பாலியல் செயற்பாட்டுக்கு எதிரான சட்ட மூலம் எத்தகையது? மஹிந்த சிந்தனை எவ்வாறுள்ளது? கசினோ விடுதிகளில் மதுப்பாவனையினை இல்லாது செய்யும் திட்டமே தங்களிடமிருப்பதாக மஹிந்த அரசு கூறுகிறது.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வொன்று தொடர்பாக குழப்பகரமான செய்திகள் அண்மையில் வெளிவந்திருந்தன.

ஐ.நாவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சனத்தொகைசார் செயற்பாடுகளுக்கான ஐ.நா நிதியம் ஆகியவற்றின் துணையுடன் மனித உரிமை மையம் மற்றும் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டபீடம் ஆகியன இந்த நிகழ்வினை ஒழுங்குசெய்திருக்கின்றன.

பெண்களின் மனித உரிமைப் பாதுகாவலர்கள் என்ற கருப்பொருளில் அமைந்த இந்த நிகழ்வு அனைத்துலக மனித உரிமை தினத்தன்று டிசம்பர் 10ம் நாள் இடம்பெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

அனைத்துலகப் புகழ்பெற்ற இலங்கை மனித உரிமைப் பாதுகாவலர் ஒருவர் குறிப்பிட்ட இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவதற்கான அனுமதியினை கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வழங்க மறுத்தமையினால் ஐ.நா அமைப்புக்கள் இந்த நிகழ்விலிருந்து வெளியேறியதோடு அதே நிகழ்வினை பிறிதொரு இடத்தில் நடத்தியிருந்தார்கள்.

மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலக பிரகடனம் கொண்டுவரப்பட்டு 15ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வின் போது 1998ஆம் ஆண்டு மனித உரிமைகள் விருது இந்த மனித உரிமைப் பாதுகாவலருக்கு வழங்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த கல்விமான்கள் பங்குகொள்ளும் வடக்கினது அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருந்தது.

இதற்கான இடத்துக்கான முற்பதிவு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டபோதும், நிகழ்வு இடம்பெறவிருந்த மண்டபம் தொடர் பயன்பாட்டிலுள்ளது எனக் கூறி இந்த நிகழ்வு இறுதிநேரத்தில் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறக்கூடாது என்ற மனநிலை அதிகாரத்திலுள்ளவர்கள் மத்தியிலிருப்பதையே இது காட்டுகிறது.

கருத்துச்சுதந்திரம், மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதற்கான களத்தினை இன்று எங்களது பல்கலைக் கழகங்கள் அமைத்துக்கொடுப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.

தாம்சார்ந்த சமூகம் மற்றும் உலகம் தொடர்பான அறிவினைப் பல்கலைக் கழக மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கும் அல்லது இதுதொடர்பான தங்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கான களம் அமைத்துக் கொடுப்பதை அதிகாரிகள் விரும்பவில்லை என்ற முடிவுக்கு நாம் வரமுடிகிறது.

லண்டனிலுள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் தனக்கு நடந்தது எதுவோ அந்த நிலையினை நாட்டிலுள்ள பல்கலைக்கழங்களிலும் ஏற்படுத்துவதற்கு மஹிந்த விரும்புகிறாரா என்ற கேள்வியினையே இது எழுப்புகிறது? இருக்கலாம், மஹிந்த இதுபோல சிந்தித்துச் செயலாற்றுகிறார் போலும்.

நாட்டுப்பற்றாளர்கள் மற்றும் துரோகிகள் என்ற சொல்லாடல்கள் மக்கள் மத்தியில் அதிகளவில் ஊடறுத்துப் பரவியிருப்பதுதான் அதிக கவலையினைத் தருகிறது.

**'Groundviews' இணையத்தளத்தில் கலாநிதி சரவணமுத்து எழுதிய கட்டுரையை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.**

தங்களது அரசியல் இலாபங்களை நோக்காகக் கொண்டு இதுபோல துரோகிகள் என்றும் நாட்டுப்பற்றாளர்கள் என்றும் முத்திரை குத்தப்படுகிறார்கள்.

'கப்பிற்றல் ட்ரஸ்ட் சிசேர்ச்' என்ற நிறுவனம் பொருளாதார, அரசியல் கண்ணோட்டம் தொடர்பான ஆய்வினை கடந்த ஒக்ரோபரில் மேற்கொண்டிருந்தது.

சமூகத்தின் மத்தியிலுள்ள குழப்பகரமான சக்திகளை இனங்கண்டு அவர்களை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும் என இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்துவிட்டபோதும் துரோகிகள் மற்றும் நாசகார வேலைகளில் ஈடுபடுபவர்களுக்கான போர் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமானது என அந்த அறிக்கையில் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவைதான் எங்களது நாட்டினது இன்றைய நிலைமை. ஒன்றுபட்ட கருத்துடையவர்கள் ஒன்றாக இணைந்து எதிர்க்குரல் எழுப்பவேண்டும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இவையும் பாடும்



ஜப்பானில் உள்ள ஒசாகா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் எலிகளிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வரும் திட்டத்தில் ஈடுபட்டனர். அதற்காக அவர்கள் மரபணு மாற்றம் செய்யப்பட்ட எலியை உருவாக்கினார்கள். அந்த எலியில் டி.என்.ஏ. மூலக்கூறு மாற்றப்பட்டிருந்தது.


இந்த எலியில் சில பரிணாம மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் இந்த எலியில் கலப்பின சேர்க்கை நடத்தப்பட்டது. இதன் மூலம் தோன்றிய எலிகளை விஞ்ஞானிகள் பரிசோதித்தனர். அவற்றில் ஒரு எலி பறவைகளின் சத்தமான 'கிரீச்' என்று ஒலி எழுப்பியது. அந்த ஒலி பாடல் போன்று ஒலித்தது.

இந்த எலி மூலம் தோன்றும் மற்ற எலிகளும் இது போன்று பாடும் தன்மையுடன் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தகவலை ஜப்பான் விஞ்ஞானி அரிகுனி உசிமுரா தெரிவித்துள்ளார். மேலும் மனிதனின் குரலில் எலியைப் பாட வைப்பது எப்படி? என வும் ஆராய்ச்சி செய்து வருவதாக அவர் கூறினார்.

# எடையைக் குறைக்கும் படிகங்கள்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு வகைப் படிகங்கள், எடையைக் குறைக்க உதவும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். இந்தச் சிறுபடிகங்கள், சுவை கூட்டப் பயன்படுபவையாக உணவினுள் தூவப்படும். உள்ளுக்குள் செல்லும் இந்தப் படிகங்கள் மூளையைத் தூண்டி, ஏற்கனவே நிறைய சாப்பிட்டு விட்டதாக உணர வைக்கும்.

எனவே இந்தப் படிகங்களைச் சேர்த்துச் சாப்பிடும் ஒருவர், இயல்பாகவே உணவு உட்கொள்ளும் அளவைக் குறைக்க, உடம்பு அளவும் குறைந்து விடும். அமெரிக்காவில் ஏற்கனவே இந்தப் படிகங்கள் வெற்றி கரமாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளன. விரைவில் இவை இங்கிலாந்து சந்தையை எட்ட இருக்கின்றன.



அமெரிக்காவில் ஆயிரத்து 400 பேருக்கு உணவுடன் இந்த சிறுபடிகங்களைத் தூவிக் கொடுத்த போது அவர்களுக்கு அது பசியுணர்வைத் தணிப்பது உறுதி செய்யப்பட்டது. இந்தப் படிகங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்றதகவல் இதுவரைவெளியிடப்படவில்லை. ஆனால் இதில் சேர்க்கப் படுபவற்றில் ஒன்று, 'மால்டோடெக்ஸ்டரின்' என்று தெரிய வந்துள்ளது. இந்த கார்போஹைட்ரேட், கார்ன் ஸ்டார்ச், சிலிக்கா, டிரைகால்சியம் பொஸ் பேட், சோயா மற்றும் பால் பொருள்களால் தயாரிக்கப்படுகிறது.

இந்தப் படிகங்களைத் தயாரித்திருப்போர் கூறுகையில், 'இதில் சோடியம், சர்க்கரை, கலோரி, குளுட்டேன் இல்லை. வேறு எந்த ஊக்க வேதிப்பொருள்களும் இதில் அடங் கியிருக்கவில்லை என்கின்றனர். சோதனையில், குண்டானவர்கள் இதைப் பயன்படுத்தும்போது, 6 மாத காலத்தில் 12 கிலோ எடையைக் குறைப்பது தெரியவந்தது. மற்ற வழிமுறைகளைப் பின் பற்றுபவர்களால் அதே காலத்தில் 1 கிலோ எடையை மட்டுமே குறைக்க முடிந்தது.

இதுதொடர்பான ஆய்வில் ஈடுபட்டவர் சிகாகோ மணம் மற்றும் சுவை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நரம்பியல் நிபுணர் ஆலன் ஹிர்ஷ். அவர் கூறும்போது, உடம்புக்கு எதிராகப் போகாமல் அதன் இயற்கையான தூண்டுதலுடன் இணைந்து செயல்படுவதுதான் இந்தப் படிகங்களின் சிறப்பு என்று புகழ்ந்து உரைக்கிறார்.

## முதல் 'எலெக்ரிக்' விமானம்



முதல் 'எலெக்ரிக்' விமானத்தை 'சொனெக்ஸ்' நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்விமானமானது 'எலெரிக் கார்' அல்லது 'எலெக்ரிக் பைக்' களை போன்று பாதுகாப்பானது அல்ல.


பொதுவாக ஆகாயத்தில் பறக்கும் போது சில விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன. அதற்காக இவ்வகை விமானங்களில் பறக்க கூடாது என்றோ பாதுகாப்பானது இல்லை என்றோ எண்ணக் கூடாது.

இவ் விமானத்தின் முதல் பரீட்சார்த்த ஓட்டத்தை 'சொனெக்ஸ்' நிறுவனம் அண்மையில் நடத்தியது. அதன் போது அவ்விமானம் பாதுகாப்பானது என நிறுவனத் தலைவர் தெரிவித்தோடு முதல் முதலாக அவ்விமானத்தில் பறந்தார்.

இதற்கு பறக்கும் கால அளவை வழங்குவதே தற்போதுள்ள பிரச்சினையாக உள்ளதாகவும், அதனையும் மிக விரைவில் செய்வதாகவும் மேலும் பல பரிசோதனைகளையும் நடத்தி வருவதாகவும் 'சொனெக்ஸ்' நிறுவனம் தெரிவிக்கின்றது.




## பைசா கோபுரமா சாய்ந்து கிடக்கு...



உலக அதிசயங்களுள் ஒன்றான இத்தாலியின் பைசா நகரத்து சாய்ந்த கோபுரம், சுமார் 14,500 மெட்ரிக் தொன் எடையும் 183 அடி உயரமும் கொண்டதுடன் இந்த கோபுரத்தின் வயது 838 ஆண்டுகள். ஆண்டுதோறும் உலகெங்கிலுமிருந்தும் 10 லட்சம் சுற்றுலாப் பயணிகளைக கவர்ந்து வரும் இந்த கோபுரம் தன்னிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாய்ந்து வருகிறது என்பதுதான் பல நூற்றாண்டுகளாக உலக மக்களை கவலை அடையச் செய்வதாக உள்ளது. ஏழு அடுக்குகளைக் கொண்ட இந்தக் கோபுரம், வெறும் 10 அடி அஸ்திவாரத்தில் மட்டுமே அமைந்துள்ளது மட்டுமல்லாமல், இவ்வளவு எடையைத் தாங்கும் அளவிற்கு அந்த இடத்தின் மண் வலுவானதல்ல என்பதும்தான் இந்தக் கோபுரம் சாய்வதற்கான காரணங்களென்று கூறப்படுகிறது.

மேலும் மத்திய தரைக் கடலிலிருந்து வரும் உப்புக்காற்றும் மழைகாலங்களில் ஏற்படும் மண் அரிப்பும் விளைவினை அதிகப்படுத்தி வருகின்றன. கோபுரம் சரிவதிலிருந்து காப்பாற்றுவதற்கு அந்நாட்டு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. யுனெஸ்கோ அமைப்பும் இந்த கோபுரத்தைப் பாதுகாக்கும் பணியை கடந்த 1989 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. சுமார் 6 மில்லியன் பவுண்ஸ் செலவில் கோபுரம் சாய்விலிருந்து மீட்கப்படுகிறது. கோபுரத்திற்கு அடியில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுப்பொருள்களை லேசர், உளி மற்றும் சிறிய வகை ஊசிகளைப் பயன்படுத்தி நீக்கி வருகின்றனர்.

இதன் மூலம் கிட்டத்தட்ட 5.5 டிகிரி சாய்ந்திருந்த கோபுரம் மீட்கப்பட்டு தற்போது 3.9 டிகிரி சாய்வு நிலைக்கு நேர் செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சி இன்னும் 200 வருடங்களுக்கு போதுமானது என்று இதன் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள பொறியியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ரமணன், வட்டுக்கோட்டை

## டுவல் - கோர் புரசெஸர் போன்

உலகின் முதலாவது டுவல்-கோர் புரசெஸரைக் (Dual - CoreProceser) கொண்ட அதி வேக கையடக்கத் தொலைபேசியினை எல்.ஜி தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு ஒப்டிமஸ் எக்ஸ் 2 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சந்தையிலுள்ள மற்றைய ஸ்மார்ட் போன்களை விட இது வேகமானதென எல்.ஜி உத்தரவாதமளித்துள்ளது.

இதில் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.


அண்ட்ரோயிட் புரோயோ 2.2 இயங்கு தளத்தின் மூலம் இக் கையடக்கத் தொலைபேசிகள் இயங்கவுள்ளன. எனினும் பின்னர் ஜிஞ்ஜர் பரட் 2.3 இற்கு மேம்படுத்திக்கொள்ளவும் முடியும்.

மற்றும் வேகமான இணைய வசதி, 8 மெகா பிக்ஸல் கமெரா, வீடியோ அழைப்புக்களுக்கான 1.3 மெகா பிக்ஸல் முன் கமரா 32 ஜிபி வரை அதிகரிக்கக் கூடிய மெமரி, 8 ஜிபி உள்ளக மெமரி என்பனவற்றையும் இது கொண்டுள்ளது.

இந்த ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியானது அடுத்த மாதம் கொரியாவில் விற்பனைக்கு வரவுள்ளது.




## உலகம் இப்போ எங்கோ போகுது...




உலகின் மிகச் சிறிய மொபைல் போன். இந்த போனின் பெயர் நியோ 808 ஐ (Nijo 808 i) இதில் அதிக எண்ணிக்கையிலான வசதிகள் உள்ளமை இன்னொரு கூடுதலான சிறப்பாகும்.

இதன் நீளம் 72 மிமீ, அகலம் 41மிமீ. மிக அழகாக அடக்கமாக சிறிய எம்பி 3 பிளேயர் போல இருக்கிறது. மற்ற போன்களில் திரையும் 'கீகளும்' ஒரே நேரில் இருக்கும். ஆனால் இதில் பக்க வாக்கில் இருக்கிறது. வொலியூம் 'கீகளுடன்' கமராவிற்கான ஒரு 'கீயும்' அருகே தரப்படுகிறது. எனவே இந்த வகை கீ போட்டிற்கு நம்மை பழக்கப்படுத்திக் கொள்ள ஓரிரு நாள்களாவது ஆகும். (கடுகு சிறுத்தாலும் காரம் போகாது) என்பது போல இதில் எந்த வசதியும் விட்டுவைக்கப்படவில்லை.

மியூசிக் பிளேயர், எப்.எம். ரேடியோ, 1.3 மெகா பிக்ஸெல் கமரா, ஜி.பி.ஆர்.எஸ். வசதி ஆகியன உள்ளன. இதன் ஒலியின் தன்மை தனியே கேட்கும்போதும் ஹெட்செட் மூலம் கேட்கும்போதும் சிறப்பாகவே உள்ளது. எப்.எம்.ரேடியோவில் 30 சேனல்களை மெமரியில் வைக்கலாம். நமக்கு விருப்பமான புரோகிராம்களை பதிவு செய்திடலாம். கமராவுடன் போட்டோ எடிட்டர் வசதியும் தரப்பட்டுள்ளது.

போனுடன் ஒரு யு.எஸ்.பி. சார்ஜரும் தரப்பட்டுள்ளது. 128 எம்பி மெமரி இருந்தாலும் 4 ஜிபி வரை மெமரி கார்டுகளை இந்த போன் ஏற்றுக்கொள்கிறது. ஒரு சிறிய போன் இந்த அளவில் மெமரியை ஏற்றுக் கொள்வது ஆச்சரியமே. போனுடன் 128 எம்பி மெமரி கார்ட் தரப்படுகிறது. ஜி.பி.ஆர்.எஸ். வசதி நன்றாகக் கிடைக்கிறது. இதில் ஒன் லைன் புத்தகங்களை வாசிக்க முடியும். இவை அனைத்திற்கும் ஈடுகொடுக்கும் வகையில் பட்டரி திறன் கொண்டதாக உள்ளது. கூடுதல் பட்டரி ஒன்று இதனுடன் தரப்படுகிறது. இதனோடு ஒப்பிட வேண்டும் என்றால் சோனி டபிள்யூ 610 ஐ மற்றும் நோக்கியா 5310 ஐக் கூறலாம்.

இவற்றில் கேமரா 2 மெகாபிக்ஸெல் ஆகும். இருந்தாலும் உலக அளவில் சிறிய மொபைல் என கைக்குள் எடுத்துச் செல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு மணிகட்டுவது யார்?

வடமராட்சியில் இருந்து மினி பஸ்களில் யாழ்ப்பாணம் செல்வது என்றால் அதற்கு ஒரு டிப்ளோமா 'ஹோஸ்' படிக்க வேண்டும் அந்தளவிற்கு பயணிகளை "உரைப்பைக்குள் கிழங்கு அடுக்கியதைப் போல்" அடுக்குவதும் எவ்வளவு நேரத்திற்கு பஸ்ஸை உருட்ட முடியுமோ அவ்வளவு நேரம் பஸ்ஸை உருட்டுவதும் தற்போது வடமராட்சியிலிருந்து யாழ் நோக்கிப் பயணிக்கும் 750 இலக்க மினிபஸ்களின் வாடிக்கையான செயலாகும்.

"வர வர மாமியார் கழுதைபோல் ஆனார்" என்ற பழமொழியின் உள்ளார்ந்த அர்த்தம் இன்று தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் சாரதிகளின் நடத்துனர்களின் செயல்களுக்கு "அச்சொட்டாக" பொருந்தி வருகின்றது.

சில நடத்துனர்களின் வாய்வீரங்களும் செயல்களும் மக்களை விசனமடையச் செய்து வருகின்றன. "தேவையென்றால் இறங்கிப் போங்கோ அல்லது ஆட்டோ பிடிச்சு போங்கோவன் என்று எடுத்தெடுப்புப் கதைகளும் சில மினிபஸ்களில் அடிக்கடி அரங்கேறி வருகின்றன.

இவ்வாறான இவர்களின் பொறுப்பற்ற செயல்களை மக்கள் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவஸ்தைப்பட்டுவருவதைக் கண்கூடாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பயணிகளை எந்தளவுக்கு அதிகமாக ஏற்ற முடியுமோ அதுவும் போக்குவரத்து பொலிஸைக் கண்டால் எவ்வளவு நெருக்கடி பஸ்ஸில் ஏற்கனவே இருந்தாலும் "மேலே ஏறு" என்று அதட்டுவதையும் எங்குபோய் சொல்லியழ என விம்முகிறார்கள் மக்கள்.

இவ்வாறெல்லாம் தமது வழமையான திருகுதாளங்களைக் காட்டி வந்து இவர்கள் தற்போது புதுவிதமான துன்பச் சிலுவையை மக்கள் மீது சுமத்தி வருகின்றனர் என பஸ்களில் காலை, மாலை நேரங்களில் பயணம் செய்யும் பயணிகள் எம்மிடம் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். அரச உத்தியோகத்தர் ஒருவர் இது தொடர்பாக எம்மிடம் முறைப்பாடு தெரிவிக்கையில்:

யாழிலிருக்கும் எனது அலுவலக மான கச்சேரிக்கு வருகை தர காலை 7 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து வருகின்ற 750 இலக்க மினிபஸ்ஸில் வருவது எனது வழமையான நாளாந்தச் செயற்பாடாகும். இவர்கள் பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி, ஆவரங்கால் வரவே 45 நிமிடம் எடுத்து விடுகின்றது. குறிப்பாக பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வர ஒரு மணித்தியாலம் 30 நிமிடம் எடுத்து விடுகின்றது. சில நேரங்களில் பயணிகளின் எண்ணிக்கையை பஸ்ஸில் அதிகரிக்க ஏதுவாக பஸ்ஸை மெதுவாக செலுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

போதாக்குறைக்கு ஆவரங்காலில் 5-10 நிமிடம் வரை பஸ் தரித்து நிற்கின்றது. அவ்வாறு நிற்பது ஏன்? என்று எமக்குப் புரியாமலே உள்ளது. இதனால் நான் அலுவலகத்துக்குத் தாமதமாகச் செல்லும் நிலை ஏற்படுகின்றது.



யாழிலிருந்து பருத்தித்துறை திரும்பும்போது யாழ் சிற்றூர்தித் தரிப்பிடத்தில் இருந்து ஆரிய குளம் வரை பஸ்ஸை உருட்டு வதுமட்டுமல்ல சில இடங்களில் பஸ் காத் திருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பி.ப 4.30 மணிக்கு பஸ் ஏறினால் பருத்தித்துறையை அடைய மாலை 6.30 மணியைத் தாண்டி விடுகின்றது. சாரதிகளைக் கேட்டால் 1½மணி நேரம் யாழிலிருந்து பருத்தித்துறை வரையான போக்குவரத்திற்கு தனியார் சிற்றூர்திச் சங்கம் நிர்ணயம் செய்துள்ளது.



அதற்கு ஏற்றபடி நான் பஸ்ஸை செலுத்துகிறேன் என பதில் சொல்லுகின்றனர்.

இந்த ஒன்றரை மணி நேரத்தை ஒரு மணித்தியாலம் 10 நிமிடம் அல்லது ஒரு மணித்தியாலமாகக் குறைந்தால் என்ன? அவ்வாறான நேர அட்டவணைகளினை வடமராட்சி சிற்றூர்திச் சங்கமோ அல்லது கச்சேரியோ பத்திரிகைகளில் பிரசுரித்தால் பொது மக்களாகிய நாம் நேரங்களை அறிந்து அதற்கேற்றால்போல் பயணங்களை மேற்கொள்ளலாம் அல்லவா என எம்மிடம் முறையிட்டார் அந்த அரச ஊழியர்.

இந்த முறைப்பாடு தொடர்பாக நாம் வடமராட்சி தனியார் சிற்றூர்திச் சங்கத்துடன் தொடர்புகொண்டு கேட்டோம். "தற்போது வீதி அபிவிருத்தி வேலைகள் நடப்பதால் நாம் மந்திகையிலிருந்து சில தூரம் சுற்றி வருகின்றோம்.

தற்போது மாலு சந்தியில் வேலை நடப்பதால் வதிரிச் சந்தி ஊடாக வருவதனால் சில மீற்றர் தூரம் சுற்றி வருகின்றோம்.

அது மட்டுமல்ல வீதி சீரின்மை காரணமாக பஸ்ஸை வேகமாகச் செலுத்த முடியாதுள்ளது. பஸ் நாம் நிர்ணயித்த நேரத்திற்கு முதல் வந்தாலோ, தாமதமாக வந்தாலோ நிமிடத்திற்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்படும்என்றசட்டம்நடைமுறையில் உள்ளது.

இந்த நிலையில் பொது மக்களின் பிரச்சினை தொடர்பாக ஜனவரி 8 ஆம் திகதி கச்சேரியில் கூட்டம் இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் அரச உத்தியோகத்தர் மற்றும் பல்வேறு அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்க பருத்தித்துறையிலிருந்து அவசரமாக யாழ்ப்பாணம் வர பஸ் ஒன்றை ஏற்பாடு செய்வது குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது. மக்கள் கேட்பதைப் போல நேர அட்டவணையை ;பத்திரி கையில் பிரசுரிப்பது குறித்தும் எமது சங்கம் ஆலோசிக்கும் என தனியார் சிற்றூர்திச் சேவைச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. தற்போது வீதி அபிவிருத்தி வேலைகள் முடிவடையும் நிலை யில் உள்ளது. மந்திகையில் சிறிது தூரமும் வதிரிச் சந்தி ஊடாக வருவதனால் சிறிது தூரமும் சுற்றி வரும் நிலையுள்ளது. அது மாத்திரமல்லாது தற்போது வீதி அபிவிருத்தி வேலைகள் முடிந்து பல வீதிகள் இரு வழிப் பாதை பயணங்களுக்கு ஏற்ற வீதிகளாக மாறியுள்ளது.


எனவே சிற்றூர்திச் சங்கம் 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை" என அறிக்கைகளிலும் வாய்ச்சவடால்களிலும் தமது வீரத்தை காட்டுவதை விடுத்து தமது சிறப்பான சேவை பொது மக்களைச் சென்றடைய ஆவன செய்யவேண்டும். அதற்காகப் பாடுபடவேண்டும். சிற்றூர்தி நடத்துனர்களும் சாரதிகளும் தமது வீரா வேஷங்களை பயணிகள் மீது திணிப்பதை விடுத்து ஒழுங்கான சேவையை வழங்கமுன்வர வேண்டும். இதுவே இன்றைய சூழ்நிலையில் பொது மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பு நிறைவேறுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ★

தொகுப்பு - ஹரிஸ்

# வல்லிபுர ஆழ்வார் கோயில்




பச்சை மா மலை போல் மேனி பவள வாய் கமலச் செங்கண் அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே" என்று ஆழ்வார்களால் பாசுரங்களில் மெச்சப்பட்ட பகவானாகிய மாயவன் சங்கும்சக்கரத்தோடும் பக்தர்களுக்கு சமுத்திரத் தீர்த்தக் கரையிலே அமர்ந்திருந்து அருள் பாலிக்கும் தலம் தான் வல்லி புர ஆழ்வார் கோயில் ஆகும். பகவானின் தெய்வீ கச் சிறப்பும் இந்த ஆலயத்தின் தொன்மையான வரலாறும் புனிதம் பொருந்தியது. "முன்னொரு காலத்திலே லவல்லி என்னும் பெண் ஒருத்தி வைசிய குலத்தில் பிறந்து வாழ்ந்து வந்தாள். இவள் நீண்ட காலம் பிள்ளைப்பேறு இல்லாமல் வருந்தினாள். அதனால் அவள் பிருகு முனிவரை தேடிச் சென்று தனது மனக்குறையை அவரிடம் கூறியபோது முனிவர் அதற்கு "பெண்ணே நீ முற்பிறப்பில் ஒரு பாம்பைக் கொன்றாய் அந்தப் பாம்பின் சாபத்தினால் உனக்கு இம்மையில் மலட்டுத் தன்மை வந்தது. அந்த நாக சாபத்தினால் நீ எப்பிறப்பிலும் மலடாகவே இருப்பாய். அந்த நாக சாப தோஷம் நீங்க பரமசிவனை நினைத்து தவம் செய்யக் கடவாய். உன் தவ வலிமையால் அவர் உனக்குத்தோன்றிஅருள்புரிவார்" என்றுகூறினார். இதனை அடுத்து அவள் தவச்சாலை சென்று தவம் செய்யத் தொடங்கினாள். இறைவன் அவள் முன் தோன்றி பெண்ணே உனக்கு விருப்பமான வரம் யாது? என வினவியபோது அதற்கு அவள் பேருவகை அடைந்து "சுவாமி! நாகசாபத் தினால் நான் புத்திரப் பேறல்லாதவள் ஆனேன். அச்சாபம் நீங்கும் படி அருள்புரிய வேண்டுகின்றேன்" என்று பிரார்த்தித்தாள். அதற்கு சிவபெருமான் "வருந்தவேண்டாம் லவல்லி என்னும் பெயர் உடையவளாய் வல்லிபுரம் பகுதியிலே பிறந்திருக்கக் கடவாய். அப்போது அங்கு மகாவிஷ்ணு மச்ச அவதாரத்தை தாங்குவார். அவர் மச்ச அவதாரமாகத் தோன்றி அவள் மடியிலே தவழ்ந்திடுவார். அப்போது நீ சாபம் நீங்குவாய்" என வரமருளினார். இவ்வாறு தெய்வீகச் சிறப்பு பொருந்திய தலம்தான் வல்லிபுர ஆழ்வார் கோயில். இந்த ஆலயத்தின் உற்சவம் புரட்டாதி மாதத்தில் கொடியேறி ஆஞ்சநேயர் மடையுடன் நிறைவுபெறும். 9ஆம் திருவிழாவாக [illegible] வெண்ணெய் திருடலும், 10ஆம் திருவிழாவாக துகில் திருவிழாவும், 11ஆம் திருவிழாவான பாம்புத் திருவிழாவும், 12ஆம் திருவிழாவாக கம்சன் போரும், 13ஆம் திருவிழாவாக வேட்டைத் திருவிழாவும், 14ஆம் திருவிழாவாக சப்பறத் திருவிழாவும், 15ஆம் திருவிழாவாக இரதோற்சவமும் இடம்பெறும். இரதோற் சவத்திலே யாழ். மாவட்ட மக்கள் மட்டுமல்ல வெளிமாவட்ட மக்கள் என பெரும் திரளானோர் கலந்து கொள்வது சிறப்புக்குரியதாகும்.




அடுத்த நாள் சமுத்திரத் தீர்த்தம் கடலிற்கு சங்கு சங்கரம் சகிதமாக மாயவன் கொண்டு சொல்லப்படுவர். இந்த நிகழ்வில் பல லட்சணக்கணக்கான மக்கள் கலந்து கொள்வர். மறுநாள் கேணித்தீர்த்தம் இடம்பெறும்.பங்குனி மாதம் அல்லது சித்திரை மாதங்களில் ஸ்ரீராமநவமி தினம் கொண்டாடப் படுகின்றது. அன்று பகல் 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.

ஆவணிமாத ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி அன்று நள்ளிரவு 12 மணிக்கு தரிசனம் விஷேஷ படிக் கட்டி அபிஷேகம் 1008 சங்காபிஷேகம் உள்வீதி வெளிவீதி உற்சவம் உறியடி உற்சவம் என்பன இடம்பெறும்.



ஆலயத்தின் உள் வீதியில் கண்ணனின் பெருமைகளை பொறிக்கும் காளிங்க நர்த்தன நடனம் பகவான் நாகத்தின்மீது படுத்திருக்கும் சிற்பம், சப்தர்ஷி கன்னியரின் உருவம் நாயன் மார்களின் உருவங்கள் என் பன பொறிக்கப்பட்டுள்ளன. தன்னை நாடி வருவோ ருக்கு அருள் பாலித்து அவர்களின் துன்பங் களையும் பாவங்களையும் போக்கி அருள் பாலிக்கும் கண்ணன் அமர்ந்திருக்கும் வல்லிபுரப் பதி தெய்வீகமும் பக்தி கனிவும் உடையது என்பதை யாவரும் அறிந்ததே. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 132 வருட அசைக்க முடியாத...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி........)

கே: விவசாயிகள் வங்கியுடன் மேற்கொள்ளும் நுண் கடன் திட்டத்தின் தாற்பரியம் என்ன?

ப: விவசாயிகளுடன் நாம் ஒரு சாதாரண ஒப்பந்தத்தில் ஈடுபடுவோம். நாங்கள் வழங்கிய கடன் அதனை மீளச் செலுத்தும் காலம் போன்றவை உள்ளீட்ட ஓர் ஒப்பந்தம் எங்களுக்கும் விவசாயிகளுக்கும் இடை யில் ஏற்படுத்தப்படும். இந்த ஒப்பந்தத்தின் பிரதியொன்றை வங்கிக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தற்போது ஹற்றன் நஷனல் வங்கி இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

கே: ஸ்ரான்லி வீதியின் 'வேர்ல்ட் ஒப் ஹேலீஸ்'' என்ற சர்வதேச மட்டத்தில் நீங்கள் திறந்துள்ள காட்சியறை எதிர்பார்த்த பெறுபேறுகளைத் தந்துள்ளதா?

ப: நிச்சயமாகத் தந்துள்ளது. ''ஹேலீஸ்'' என்ற நாமம் இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தொன்று. எந்தத் துறையில் கால் பதித்தாலும் எமது காலடியை சரியாகப் பதிப்பதில் நாம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றோம். அதே ரீதியில் வடக்கில் நாம் பதித்துள்ள காலடி உறுதியானது. ஆக்க பூர்வ மானது. எதிர்பார்க்கும் விளைவுகளைத் தரக் கூடியது என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

கே: உயர் கல்வி அமைச்சு பல்கலைக் கழகங்களின் இறுதியாண்டு மாணவர்களை ஆறு மாத காலத் தொழிற் பயிற்சிக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. 'கார்கில்ஸ்' நிறுவனம் ஏற்கனவே அத்தகைய 300 மாணவர்களை மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா கொடுப் பனவுகளுடன் பயிற்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. உங்களது நிறுவனத்துக்கும் இத்தகைய யோசனைகள் உள்ளனவா?

ப: உண்டு. ஏற்கனவே 20 பேர் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

ஹேலீஸ் நிறுவனத்தில் முற்று முழுதான விடுமுறை தினமான இன்று உதயனுக்கான பிரத்தியேக நேர்காணலை ஏற்பாடு செய்து தந்த உங்களுக்கு எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற ஹேலீஸ் நிறுவனம் பிரபஞ்சம் ரீதியில் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகிறோம்.

---

**கிளி/முருகானந்த ம.வி (இசுறு பாடசாலை)**
**முரசுமோட்டை, பரந்தன்**

**தரம்-6 மாணவர் அனுமதி - 2011**

தமிழ் மொழி, ஆங்கிலமொழி மூலமான தரம் 6 வகுப்புக்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பப் படிவங்களை 03.01.2011 இற்கு முன்னர் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி 05.01.2011 இற்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(108074) அதிபர்.

---

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**தம்பு செல்லமுத்து**
(தம்பு ரீச்சர்)
(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் ம.வி)
திதி: 28.12.2010

மலர்வு: 29.04.1940
உதிர்வு: 26.12.2002

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த
உங்கள் நினைவுகளும்
இல்லத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய
உங்கள் வாழ்வும்
எட்டாண்டுகள் அல்ல எத்தனை ஆண்டானாலும்
அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'திருவேரகம்', அல்லாரை, மீசாலை. (108080) அன்பின் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவகாமசுந்தரி கந்தையா**
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: மார்கழிமாத அபரபக்க அட்டமி (28.12.2010)

பிறப்பு: 14.07.1936
இறப்பு: 23.12.2005

எங்கள் குடும்ப விளக்கு மறைந்து ஐந்து ஆண்டுகள் நிறைவையொட்டி எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குருக்கள் கிணற்றடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

கணேஸ்வரம், அளவெட்டி. (107836) குடும்பத்தினர்.

---


இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரைமீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா**
**அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அருகில்).
(C/573408)


---


**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும், மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது.

1Kg 450 ரூபா மட்டும். கூடுதலாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.



**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No. 1 பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் 30.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6944



**அருள்முருகன் திருமணப் பணியகம்**

**மணமகள் தேவை:** நவம்பர் 1980, புனர்பூசம்-4ஆம் பாதம், தனு இராசியில் 12இல் செவ்வாய், கிரகபாவம் 28, உயரம் 5'8", Fair, அழகானவர், உயர் கௌரவ குடும்பம், MBBS வைத்தியருக்கு மணமகள் தேவை. (Doctor மணமகள் முன்னுரிமை )

**திருமணச் சேவை:** Doctors, Engineers உட்பட இங்கிருக்கும் தகுதிகள்மிக்க மணமக்களில் விரும்பும் மணமக்களைத் தெரிவு செய்யலாம். மணமக்களது ஜாதகம், விவரங்கள், போட்டோவுடன் சமூகமளிக்கலாம். இந்து,கிறிஸ்தவ சகல சமூக மணமக்களுக்குமான சேவை இது. 03, யாழ்.வீதி, சிறாம்பியடி ஒழுங்கை (ஸ்ரான்லி வீதியில் ரயில்பாதை கடவைக்கு மிக கிட்ட வுள்ள ஒழுங்கை) யாழ்ப்பாணம் (மு.ப.11-பி.ப.4 மணி வரை)

தொ.பே: 2229334 சந்திப்பு: முன்னேற்பாட்டின் படியாகும்.



**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRAHA No.1 புறொயிலர் குஞ்சுகள் 29.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

றாஜீன், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
T.P. 0776090926, 021 222 2867


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**பிலோமினா பாக்கியநாதர்**

தோற்றம்: 03.06.1928
மறைவு: 28.11.2010

எமது அன்னை நோயுற்றபோது வைத்திய உதவி புரிந்த மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்களுக்கும், வருகைதந்து ஊக்கமூட்டித் தேற்றியவர்களுக்கும், உயிர் நீத்த வேளையில் உடன் வந்துதவிய உறவினர்களுக்கும், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் அஞ்சலி வெளி யிட்டோருக்கும் இறுதி நிகழ்வின் போது பல்வேறு உதவிகளைப் புரிந்த சகலருக்கும் இந்நாளில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு. (108077) குடும்பத்தினர்.

---

## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் கடமையாற்றும்
திருமதி தயாழினி கணேசன்
அவர்களின் அன்புத் தந்தை
**முதலித்தம்பி சிவபாதம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி.

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராஜேந்திரம் மேரிமலர்**

தோற்றம் 02.07.1942
மறைவு 28.12.2005

" குடும்பத்தின் தலைவியாய் நீ
குன்றாத ஒளிவிளக்காய்
நடமாடும் தெய்வமென
நம்மிடையே மிளிர்ந்தவளே!
வடமிழந்த தேர் போல
வையகத்தே ஆகிவிட்டோம்
திடமான எம்மனது
தினம் உனையே நாடுதம்மா''

" பூபாளம்", பிடாரி கோயில் வீதி, ஆனைக்கோட்டை. (108071) கணவரும், குடும்பத்தினரும்.

---

## மரண அறிவித்தல்

**திருமதி சறோஜினிதேவி குபேந்திரராஜா**



(இளைப்பாறிய ஆசிரியை, யா/சைவப் பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை)

தெல்லிப்பழை கிழக்கு, மதவடி லேனைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி தேவி குபேந்திரராஜா (23.12.2010) வியாழக் கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - விசாலாட்சி தம்பதியரின் பாசமுள்ள மகளும், சித்தன் கேணியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சச்சிதானந்தன், மகேந்திரன்,தெய்வேந்திரன், ஜெயசீலன், ஜெயக்குமாரி, காலஞ்சென்றவர்களான இந்திராணி, விசாகமலர் ஆகியோரின் அன்புக்குரிய அக்காவும், சித்தன்கேணியைச் சேர்ந்த மகேந்திரராஜா, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும்,ரஜிதா (சுவிஸ்), சுஜிதா(லண்டன்),விஜிதா (லண்டன்), நதீபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், நகுலன் (சுவிஸ்), மதியழகன் (லண்டன்), லிங்கராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், துஷாரா, அர்ஜீன் (சுவிஸ்), சிந்துகன், ரம்மியா (லண்டன்), ஜவனிஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2010 வியாழக் கிழமை இந்தியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
தொடர்புக்கு: 0719011762
தகவல்: பொ.ஜெயசீலன் (கண்ணன்)
108075

---


"தரம் 4, 5 மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு நற்செய்தி" 03.01.2011 முதல் வெளிவருகின்றது...

**புலமைச் சுடர் 2011-2012**



"ஒரு வாரகாலம் கற்பதற்குப் போதுமான ஆக்கங்களைத் தாங்கி..."

இக்கையேட்டை அலங்கரிப்பவை...

- தரம் 4, 5 படிமுறைப் பரீட்சை வினாத்தாள்
- சுற்றாடல் கல்விக்கான கற்றல் குறிப்புக்கள்
- தமிழ்மொழிக் கற்றல் குறிப்புக்கள்
- கணிதபாட கற்றல் குறிப்புக்கள்
- ஆங்கில, சிங்கள பாட கற்றல் குறிப்புக்கள்
- வாரம் ஐந்து வினா-விடை விளக்கம்
- கட்டுரைக்களம்
- மூளைக்கு வேலை
- சங்கமம்

இவையனைத்தும் 10 ரூபா விலையில்...

கடந்த வருடம் மாவட்ட ரீதியில் முதன்னிலை பெற்ற மாணவர்களின் வாழ்த்தும் அனுபவப் பகிர்வும்

நாடளாவிய ரீதியில் புகழ்பெற்ற 20 ஆசிரியர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது

உங்கள் பிரதியை உறுதிப்படுத்த அருகிலுள்ள உதயன் முகவரிடம் உடன் பதிவு செய்யுங்கள்.

விநியோகப்பிரிவு இலக்கங்கள்: கொழும்பு-011 5738866, யாழ்- 021 5677222, ஆசிரியர் பீடம் -011 576 8855, 071 427 3035.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒட்டோச் சாரதிகளுக்கான ஓய்வூதியம் முதற்கட்டம் இரத்தினபுரியில் ஆரம்பம்

இரத்தினபுரி, டிசெ.28

ஒட்டோச் சாரதிகளுக்கு ஓய்வூதியம் பெற்றுத்தரும் வேலைத் திட்டம் இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை சமூகப் பாதுகாப்புத் திணைக்களத் தின் மூலம் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அனைவருக்கும் ஓய்வூதியம் என்ற அரசின் கொள்கைக்கு இணங்க ஒட்டோச்சாரதிகள் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனத் தேசிய சமூகப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் ஜே.எம்.ஜே. குரே தெரிவித்தார்.

ஒட்டோச்சாரதிகள் மாதாந்தம் தம்மால் இயன்ற தொகையைச் செலுத்தி இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம் - என அவர் கூறினார்.

இரத்தினபுரி நகர மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய இரத்தினபுரி மாவட்ட ஒட்டோச்சாரதிகள் சங்கத் தலைவர் ஜயசிறி கருத்துத் தெரிவிக்கையில்,

அரச நிறுவனமொன்றால் இத் திட்டம் முன்னெடுக்கப்படுவதால் ஒட்டோச் சாரதிகள் இதில் நம்பிக்கை கொள்ளமுடியும் எனத் தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ் ஒட்டோச் சாரதிகள் 60 வயதை அடைந்த பின்னர் ஆயுள் முழுவதும் ஓய்வூதியம் பெறுவதோடு பல்வேறு நன்மைகளையும் பெற வாய்ப்புகள் உள்ளன எனத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் குரே சுட்டிக் காட்டினார். (ளி)

# வெல்லவாய தொழிற்சந்தையில் அதிகமான தொழில் வாய்ப்புகள்

நுவரெலியா, டிசெ.28

வெல்லவாயப் பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற தொழிற்சந்தை மூலம் தொழிலின்றி இருந்த அதிக இளைஞர் - யுவதிகள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றனர் - என இலங்கை முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச்சபையும் தொழில் உறவு மற்றும் கமத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சும் இணைந்து இந்தத் தொழிற்சந்தையை அண்மையில் வெல்லவாய ராஜபக்ஷ கருத்தரங்கு மண்டபத்தில் நடத்தியிருந்தன.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் மொனராகலையில் நடைபெறவுள்ள "தேசத்துக்கு மகுடம்" தேசியக் கண்காட்சியையொட்டி நடைபெற்ற இந்தத் தொழிற்சந்தை மூலம், வெல்லவாய, புத்தல, மொனராகலை பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் நன்மை பெறுவர் என முதலீட்டுச்சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டச் செலாளர் மிஹிந்த குலசூரியாவின் தலைமையில் நடைபெற்ற இத் தொழிற்சந்தையில் இலங்கை முதலீட்டுச்சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.சீ. குலசேகர, தொழிலுறவு கமத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சின் பணிப்பாளர் ஹேமா பெரேரா, உதவிப் பணிப்பாளர் டபிள்யூ. எலபாத்த உட்பட பலர் கலந்துகொண்டனர். (ளி)

# சப்ரகமுவ ஆசிரியர்களுக்கு ரூ. 41 கோடி சம்பள நிலுவை

## முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவிப்பு

சப்ரகமுவ, டிசெ.28

சப்ரகமுவ மாகாண ஆசிரியர்களுக்கு சுமார் 41 கோடி ரூபா சம்பள நிலுவையாக உள்ளது - என முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்தார். பல வருடங்களாகச் சேர்ந்துள்ள இந்த சம்பள நிலுவை பற்றிய விவரங்கள் தற்போது திரட்டப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

திரட்டப்பட்ட விவரங்களை திறைசேரிக்கு அனுப்பி சம்பள நிலுவைப் பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அடுத்தவருடம் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (ளி)




# மாத்தளை நகரசபையின் பட்ஜெட் நிறைவேற்றம்

மாத்தளை, டிசெ.28

மாத்தளை மாநகரசபையின் 2011ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஐந்து பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மாநகர முதல்வர் ஹில்மி கரீம் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக எட்டு வாக்குகளும், எதிராக மூன்று வாக்குகளும் அளிக்கப்பட்டன

ஆளும்கட்சியின் அங்கத்தவர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரொஹான் டீ சில்வா, முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் கே. சப்ருல்லா ஆதரவாகவும், எதிர்க்கட்சித் தலைவர் டல்ஜித் அலுவிகார மற்றும் அக்கட்சியின் உறுப்பினரான ரிசால் அனாஸ், ஜே.வி.பி. உறுப்பினர் பீ.எம்.கே. பண்டாரநாயக்க ஆகிய மூவரும் எதிராகவும் வாக்களித்தனர். ஆளும் கட்சி உறுப்பினர் ரோஹண குமார எட்டிபொல வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (ளி)

# கிழக்கு மாகாண சபையிடமிருந்து விற்பனை வரி உரிமையைப் பறிக்காதீர்

## சபையின் உறுப்பினர் கோரிக்கை

மட்டக்களப்பு, டிசெ.28

2008ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்த வியாபார மொத்த விற்பனை வரி அறவிடும் உரிமையை முழுமையாகக் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்துக்கு வழங்க ஆவன செய்யுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:-

1987ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஊடாக இலங்கையில் 13ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு, இதனூடாக வடகிழக்கு மாகாண சபைக்கென அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இவ் அதிகாரங்களில் பொலிஸ், காணி, வரி அறவீடு போன்ற மூன்று அதிகாரங்கள் உட்படப் பலவகையானவை மத்திய அரசால் வழங்காமல் மறுக்கப்பட்டன.

இத்தோடு சகலவிதமான வரி அறவீட்டையும் மத்திய அரசே செய்து வந்தது. குறிப்பாக வருமானவரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, பொருள்கள் சேவைகள் கட்டணம், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி, வியாபார மொத்த விற்பனை வரி ஆகியவை இதிலடங்கும்.

இந்த வரிகளில் வியாபார மொத்த விற்பனை வரிகளை அறவிட மட்டும் கிழக்கு மாகாண சபைக்கு 2008ஆம் ஆண்டு தொடக்கம் மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதற்கு முன்பு 1987ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையும் மத்திய அரசே அறவிட்டு வந்தது.

இவ்வரி அறவிடுவதற்கு பிரதம செயலாளர் செயலகத்தின் கீழ் மாகாண இறைவரித் திணைக்களம் செயல்பட ஆரம்பமாகி 2009ஆம் ஆண்டு ஆரம்பம் தொடக்கம் 2010ஆம் ஆண்டு முடியும் வரை அண்ணளவாக இரண்டு வருடகாலம் ரூ.80 கோடிக்கு மேல் வருமானமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் கிடைத்தது.

கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால் 2011ஆம் ஆண்டிற்கான வரி அறவீடு தொடர்பாகத் திட்டமிடும் கால கட்டத்தில், மத்திய அரசினால் கிழக்கு மாகாணத்திற்கென வழங்கப்பட்ட அதிகாரங்களில் வரி அறவிடும் அதிகாரத்தில் வியாபார மொத்த விற்பனை வரியில் காலாண்டிற்கு அதாவது மூன்று மாதங்களுக்கு ரூ.5 லட்சத்திற்கு மேற்பட்ட வரி அறவிடப்பட்டிருந்த வரிகளை மீண்டும் மத்தியரசு பொறுப்பெடுத்துள்ளது என கிழக்கு மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்த நடைமுறையை சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபையால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இலங்கையில் ஒரே நாட்டில் அதிகாரங்களுடன் வாழ விரும்புகின்றவர்கள் சிறுபான்மையினர். மத்திய அரசால் கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட வரி அறவீட்டு அதிகாரத்தை வழங்கிவிட்டு மீண்டும் பறிப்பது கிழக்கு மாகாண சிறுபான்மையினரையும், எமது சபையையும் பலவீனப்படுத்துவதும் முடமாக்கப்படுவதுமாகவே அமையும்.

எனவே மீண்டும் இவ்வதிகாரத்தைக் கிழக்கு மாகாண சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

இதன்பிரதிகள் சுகாதார அமைச்சர், விவசாயத்துறை அமைச்சர், கல்வி அமைச்சர், வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ளி)

# அம்பாறை மாவட்டத்தின் கரையோர குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

அம்பாறை, டிசெ.28

வடகீழ் பருவப்பெயர்ச்சி மழையால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. தாழ்ந்த பிரதேசங்களில் குடியிருந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

குறிப்பாக ஆழிப்பேரலை, யுத்தம் ஆகியவை காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த குடும்பங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டு மீண்டும் உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளன.

மழையோடு கடற்கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த சில தினங்களாக ஆழ்கடல் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இந்த வெள்ளத்தால் நன்னீர் நிலைகளில் எல்லாம் 'சல்பீரியா பூண்டுகள்'படர்ந்துள்ளமையால் நன்னீர் மீனவர்களும் மீன் பிடிக்கச் செல்லவில்லை. இதனால் மீன் வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேவேளை, கருவாடு வகைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அடைமழை காரணமாக மாவட்டத்திலுள்ள தேவாலயங்களில் நத்தார் நள்ளிரவு திருப்பலி ஆராதனைகளிலும் அதிகமானவர்கள் கலந்து கொள்ளவில்லை. இந்துக்களின் திருவெம்பாவை ஊர்வலம், நத்தார் 'கரோல் கீதம்' ஆகிய நிகழ்வுகள் கூட பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு கடன் வழங்கும் திட்டம் ஆரம்பம்

திருகோணமலை, டிசெ.28

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கடன் வழங்கும் முதலாவது வேலைத் திட்டம் கடந்த சனிக்கிழமை மூதூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இத்திட்டத்தில் முதலாவது கட்டமாக கடன் கோரி விண்ணப்பம் செய்தவர்களில் இருந்து 359 பேருக்கு தொழில்துறையை மேம்படுத்தவும் மற்றும் வீடமைப்புக்குமான கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (204)

# கொங்கிறீட் பால வேலை நிறுத்தம்

அம்பாறை, டிசெ.28

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நெய்னாகாடு கிராமத்தையும் றகுமானியாபுரப் பிரதேசத்தையும் இணைக்கும் கொங்கிறீட் பால வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டதனால் கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகப் பொது மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலத்தை அமைப்பதற்கான கொங்கிறீட் தூண்கள் ஆற்றுக்கு குறுக்காக இடப்பட்டு சுமார் மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் பாலத்திற்கான கொங்கிறீற்றினை இடும் வேலைகள் எதுவும் நடைபெறாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. இதன்காரணமாகப் பொது மக்கள் தற்காலிக பாலத்தை அமைத்து ஆபத்தான நிலையில் பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றனர். தினம்தோறும் இந்த தற்காலிக பாலத்தினூடாக நூற்றுக்கணக்கான மக்களும் மாணவர்களும் ஆபத்துக்களுக் கூடாகப் பயணம் செய்கின்றனர்.

நோயாளிகளையோ பொருள்களையோ இப்பாலம் ஊடாகக் கொண்டுசெல்ல முடியாத நிலையில் மக்கள் அவர்களை தலையில் வைத்து சுமந்து செல்கின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை முறைப்பாடு தெரிவித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்ட இப்பால வேலைகளை தாமதமின்றி முடித்து மக்களது பிரயாண வசதியினை ஏற்படுத்தித் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204)

# சுனாமி நினைவையொட்டி திருமலையில் இரத்ததானம்

திருகோணமலை, டிசெ.28

சுனாமிப் பேரலையினால் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் நினைவையொட்டி இரத்ததான முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 9 மணி தொடக்கம் மாலை 4மணி வரை கிறீன் வீதியில் அமைந்துள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோண மலைக் கிளையில் நடைபெற்றது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகத்தில் பரமார்த்தர்




அப்போது ''அதோ பாருங்கள், நரகலோகம்!'' என்று கத்தினான் மடையன்.

நரகத்திற்கு வந்து சேர்ந்து விட்டதை உணர்ந்த சீடர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

''வாருங்கள், நம் குருவைத் தேடிப் பார்ப்போம்!'' என்று ஒவ்வொரு இடமாகப் பரமார்த்தரைத் தேடிக் கொண்டே சென்றார்கள்.

ஓரிடத்தில் பெரிய பெரிய செக்குகள் சுழன்று கொண்டு இருந்தன. பாவம் செய்த சிலரை அதனுள் போட்டு நசுக்கிக் கொண்டு இருந்தனர்.

அதைப் பார்த்த மட்டியும் மடையனும், ''நம் குரு, இதன் உள்ளே இருந்தாலும் இருப்பார்!'' என்று சொன்னபடி செக்குக்குள் தலையை விட்டார்கள்.

அவ்வளவுதான்! ''ஐயோ! ஐயையோ!'' என்று தலை நசுங்கி, ரத்தம் ஒழுகக் கீழே விழுந்தனர்.

இன்னொரு இடத்தில், உயரமான கொப்பரைகளில் எண்ணெய் கொதித்துக் கொண்டு இருந்தது. அதைப் பார்த்த முட்டாள், ''நம் குருவை இந்தக் கொப்பரையில்தான் போட்டிருப்பார்கள்!'' என்று கூறிக்கொண்டே, கொப்பரைக்குள் எகிறிக் குதித்தான்!

முட்டாள் விழுவதைக் கண்ட மூடன், தானும் ஓடிப் போய் ஒரு கொப்பரையில் குதித்தான்!

கொதிக்கும் எண்ணெய் உடல் முழுவதும் பட்டதும், லபோ திபோ என அலறியவாறு இருவரும் சுருண்டு விழுந்தனர்.

மண்டு மட்டும் பல இடங்களில் பரமார்த்தரைத் தேடிக் கொண்டே சென்றுன்.

நரக லோகத்தின் சனி மூலையில் ஏராளமான விறகுக் கட்டைகளை வைத்துத் திகு திகு என்று எரியும் அடுப்பைக் கண்டான்.

நம் குரு இந்த நெருப்புக்கு உள்ளே ஒளிந்து கொண்டு இருந்தாலும் இருப்பார் என்றபடி அதற்குள் நுழைந்தான்.

அடுத்த கணம், ''ஆ, நெருப்பு! அம்மாடி நெருப்பு!'' என்று கதறியவாறு விழுந்து புரண்டான்.

இதே சமயத்தில், நரகலோகத்தில் கட்டப்பட்டு இருந்த விஷ மண்டலத்தில் பரமார்த்தர் அலறிக் கொண்டு இருந்தார்.

அவரைச் சுற்றிலும் இராட்சதத் தேள்களும், பாம்புகளும், நண்டுகளும் படையெடுத்து வந்தன.

''ஐயோ, தேளே! நீ வாழ்க! உன் கொடுக்கு வாழ்க! என்னை மட்டும் கொட்டாதே!'' என்று கும்பிட்டார்.

அதற்குள் ஐந்து சீடர்களும் அவர் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

''ஐயோ! பாம்பு, பாம்பு!'' என்று அலறியபடி திண்ணை மேலிருந்து தடால் என்று கீழே விழுந்தார், பரமார்த்தர்.

சீடர்கள் அனைவரும் ஓடி வந்து பார்த்தார்கள்.

அப்பொழுதுதான் பரமார்த்தர் சுற்றும் முற்றும் பார்த்தார். ''நல்ல காலம்! மடத்தில் தான் இருக்கிறேன்.

நரக லோகத்தில் மாட்டிக் கொண்டது போல வெறும் கனவுதான் கண்டிருக்கிறேன்!'' என்று மகிழ்வுடன் தொப்பையைத் தடவிக் கொண்டார். சீடர்களும் மகிழ்ச்சியுடன் குதித்தார்கள்.

(முற்றும்).

## சிரிக்க வைத்த ஒரு நாள்

அன்றைய நாளை நினைத்தால் சிரிப்புச்சிரிப்பாக வருகின்றது.
பாடசாலை வாழ்வின் முதல் மேடைப்பேச்சு
அதிகாலையில் எழுந்து கடமைகள் முடித்து விட்டு தாயாரின் அன்பு வார்த்தையுடன் பாடசாலைக்குச் சென்றேன்.
அப்போது அப்பாவும் என் மேடைப்பேச்சை பார்த்து இரசிப்பதற்கு என்னுடன் வந்தார்.
நான் மேடையில் பேசுவது வெட்கமாக இருந்தது.
அந்த வேளையில் என்மனதில் புதிய சிந்தனை உதித்தது.
அதன்பின் அந்த யோசனையின்படி சத்தம் போடாமல் ஒரு பெட்டகத்தினுள் புகுந்து கொண்டேன்.
அனைவரும் என்னைத் தேடித் திரிவதை உணர்ந்தேன்.
அப்போது அப்பா ''குதிரை வந்திருக்கின்றது'' என உரத்துக் கூறினார்.
நான் என்னை மறந்து ''எங்கே அப்பா'' என்று உள்ளிருந்து வினாவினேன். அங்கிருந்த அனைவரும் சிரிப்பு வெள்ளத்தில் மூழ்கினர்.

சி.திருவரங்கன்,
தரம்-4F,
யா/இந்து ஆரம்ப பாடசாலை.

## விடுகதைகளும் விடைகளும்

1. வெட்ட வெட்டத் தொலையாத வீரமணிக் கட்டை அது என்ன?
   நிழல்
2. கண்ணுண்டு பார்வையில்லை அது என்ன?
   ஊசி
3. சுமையும் தாங்கும் உதையும் கொடுக்கும் அது என்ன?
   கழுதை
4. கை, கால் இல்லை காடுமலையும் தாங்குவான் அவன் யார்?
   மேகம்
5. இடி இடிக்கும் மின்னல் மின்னும் மழை பெய்யாது அது என்ன?
   பட்டாசு
6. ஈர்க்குப் போன்ற தம்பிக்குப் பந்து போன்ற தலை அது என்ன?
   தீக்குச்சி
7. அள்ள அள்ளப் பெரிதாகும் அது என்ன?
   பள்ளம்
8. பழுத்த பின் காயாகும் அது என்ன காய்?
   ஊறுகாய்
9. முல்லைத் தோட்டத்தில் கறுப்பு முத்து அது என்ன?
   கண்
10. தண்ணீரிலே துள்ளோட்டம் தரையிலே தள்ளாட்டம் அது என்ன? மீன்

ச.சாத்வீகசர்மா,
தரம்-7,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## நூல்களும் நூலாசிரியர்களும்

- அகத்தியம்- அகத்தியர்
- இராமாயணம்- வால்மீகி
- கம்பராமாயணம்- கம்பர்
- கந்தபுராணம்-கச்சியப்பர்
- மகாபாரதம்- வியாசர்
- காஞ்சிபுராணம்- சிவஞானமுனிவர்
- பெரியபுராணம்- சேக்கிழார்
- திருமந்திரம்- திருமூலர்
- திருக்குறள்- திருவள்ளுவர்
- அர்த்தசாஸ்திரம்- கௌடில்யர்

## நல்ல நட்பு

நட்பு என்ற ஓர் உணர்வு மிகவும் புனிதமான மகத்தான உறவு. வாழ்வில் எமக்கு கைகொடுக்கும் உறவு ஒன்று இருக்குமாயின் உண்மையில் அது நட்பு ஒன்றுதான். மேலும் ஒரு சமுதாயம் நோயுற்று, ஆரோக்கியமாக வாழ நட்பு இன்றியமையாததாகின்றது. வாழ்க்கையை ரசிக்கக் கற்றுக்கொள்ளும் போதுதான் துயரங்கள் மறைகின்றன. அவ்வாறு ரசிப்பதற்கு நட்பு உறுதுணையாகிறது. மேலும் கெட்ட நண்பர்களுடன் கூடி இருப்பது மிகச் சிறந்ததாகும். நட்பு கொள்வதென்பது வெறுமனே ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் ஒன் றல்ல. நண்பன் கெட்டுச் செல்லும்போது முன்சென்று இடித்துரைத்து அவனை நல்வழிக்குக் கொண்டு செல்வதே சிறந்த நட்பாகும்.

புனிதமான நட்பு எல்லாச் சுயநலங்களையும் விட்டு துரிதமானதாகவும் விடுபட்டதாகவும் இருத்தல் வேண்டும். அன்பு ஒரு பூங்காவனம் போன்றது. தாங்கமுடியாத துன்ப துயரத்தில் நம்பிக்கை பலவீனமடையும் போது வறுமையிலும் துக்கத்திலும் வளம் பெற நல்ல நட்பு அவசியமாகிறது.

வி.கீர்த்தனா,
தரம்-9A,
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

## அம்மா

அன்று நம் தொப்புள் கொடியை
அறுத்தது நம் உறவைப் பிரிக்க-
அல்ல
அது நம் பாசத்தின் தொடர்ச்சிக்கு
வெட்டப்பட்ட ரிப்பன்.

சா.துஸ்யா, தரம் - 8,
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.



## சுவாசத் தாய்

அன்னை என்பவள் அற்புதமானவள்- என்றும் புண்ணிய பூமியில் புன்னகை புரிந்தவள்- இன்று காலனின் கைப்பிடிக்குள் விண்ணில் நிரந்தரமாகினாள்.

தூங்கிய போது விழித்திருந்து என் முகம் பார்த்தவள்- இன்று தான் தூங்குகிறாள்- ஆனால் விழிக்க முடியவில்லை. தன் வ்யிறு கீதம் இசைக்க இறுகக்கட்டி என் வயிறு வளர்த்தவள்- இன்று தான் வளரும் விதம் அறியாமல் - ஏனோ இவளின் ஆன்மா அழுது தோற்று விடுகிறது பாரா முகம் காட்டுகிறாள் அவள்.

மௌனியாகிறாள் மண்ணுக்குள்ளே.... கொடிய நோயைக் கொடுத்தவன் மீள முடியாமல் குலையச் செய்திட்டான். பாவி மகள் பரிதவித்து பயந்தோடிய வேளை சேயின் உடல் பழஞ்சோற்றுப் பதம் போலானது.

உன் இடம் நிரவ எவரும் வரப்போவதில்லை. உன் வழி அறிய எனக்கு வழி தெரியவில்லை. எங்கிருந்த போதும் எனை நினைப்பாய். உயிருள்ள வரைக்கும் உன்னோடு கலக்கும் ஓர் ஜீவன் நான்....

பி.நினுஜா, தரம் 05,
யா/கொழும்புத்துறை இந்து ம.வி.

## மாணவர்களின் திறமை...



ஆனந்தம்:சாவகச்சேரி கல்வயல் டேனிவா முன்பள்ளி சிறார்களின் கலைவிழா அண்மையில் நடை பெற்றது. [illegible] சிறார்களின் திருவிளையாடல் நாடகத்தின் ஒரு பகுதி. வெற்றி பெற்ற [illegible]னந்தா வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரன் பரிசில் வழங்குகிறார்.

(ற-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அமெரிக்காவில் கடும் பனிப் பொழிவு மாகாணங்களில் அவசர நிலை பிரகடனம்

## விமான, ரயில் பயணங்கள் ரத்து



நியூயோர்க், டிசெ.28

அமெரிக்காவின் வடபகுதியில் கடுமையான பனிப்பொழிவுடன் கூடிய புயல் வீசத் தொடங்கியுள்ளது.

மேரிலாந்து, வட கரோலினா மற்றும் வேர்ஜினியா மாகாணங்களில் அவசர கால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கண்ணை மறைக்கும் கடும் பனிப் பொழிவுடன் கூடிய புயலின் காரணமாக வட மாநிலங்களில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டு விட்டன. ரயில் மற்றும் வீதி பயணங்களும் முடக்கப்பட்டுவிட்டன.

குளிர்காலப் புயலின் காரணமாக நியூயோர்க் விமான நிலையம் மூடப்பட்டுவிட்டது. கிறிஸ்மஸ்கால பயணம்மேற்கொண்டுள்ள ஆயிரக்கணக்கான மக் கள் ஆங்காங்கே காத்துக் கிடக்கிறார்கள்.

நியூயோர்க்குக்கும் போஸ்ரனுக்கும் இடையில் 30 சென்ரிமீற்றர் பனிப்பொழிவு ஏற்பட்டிருப்பதால் பிரயாணிகளுக்கான ரயில் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேரிலாந்து, நியூஜேர்ஸி, வட கரோலினா மற்றும் வேர்ஜினியாவில் மாகாணங்களில் அவசரகாலம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* ஜோர்ஜியா, தென் கரோலினா ஆகிய தென் மாகாணங்களில் பெரும்பாலும் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு வெண்ணிற கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்பட்டது.

ஆனால் வோஷிங்ரன் டி.சியைப் பொறுத்தவரை குறைந்தளவு பனிப் பொழிவே இருக்கும் என்று கருதப்படுகிறது. அதனால் பனிப் புயலில் இருந்தும் அது தப்பிவிடும் என்று கருதப்படுகின்றது.

வட கரோலினாக் கரைக்கு அப்பால் ஏற்பட்டுள்ள தாழ் அமுக்க நிலை காரணமாகவே இந்த இராட்சதப் பனிப் பொழிவுப் புயல் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக தேசிய காலநிலை சேவை அதிகாரிகள் கூறியுள்ளனர். இது வட கிழக்கு நோக்கி நகர்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிழக்குக் கனேடிய அதிகாரிகளும் கடும் பனிப் புயல் ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளனர்.

பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படி மக்களை அதிகாரிகள் கேட்டு வருகின்றனர்.

அமெரிக்காவின் வட கிழக்குப் பகுதிகளில் உள்ள விமான நிலையங்களும் மூடப்பட்டுவிட்டன. வாஷிங்ரன், பால்டிமோர் மற்றும் சிக்காக்கோ நகரங்களிலுள்ள விமான நிலையங்களும் இதில் அடங்கும்.

நியூயோர்க் நகரில் ஞாயிறு காலையில் 18 அங்குலம் வரை பனிப்பொழிவு ஏற்பட்டது. இது நியூஜேர்ஸி கரையோரத்தில் கடும் சூறைக் காற்றுடன் இருக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதுபற்றி நியூயோர்க் மேயர் மைக்கல் புலூம் பேர்க் கருத்துத் தெரிவிக்கையில்:

துரதிஷ்டவசமாக எமது நகரம் புயல் வரும் பாதையில் இருக்கின்றது. 55 மைல் வேகத்தில் வீசும் காற்றை எதிர்கொண்டு நிற்பது கஷ்டமாக காரியம். இது ஓர் பயங்கர மான நிலைமை என்றார்.

நகரில் பனிக்கட்டியை உடைத்து அகற்றுவதற்கு 1,700 இயந்திரங்களும் 2,400 சுத்திகரிப்பாளர்களும் வரவழைக்கப்பட்டுள்ளார்கள். (ப)

# அணு உலைக் கழிவு சேமிப்பு கிடங்கு; தென்கொரிய மக்கள் கடும் எதிர்ப்பு

சியோல், டிசெ.28

தென்கொரியாவில் முதன் முறையாக அணு உலைக் கழிவுகள் சேமிப்பு கிடங்கு செயல்படத் தொடங்கியுள்ளது. ஆனால் அந்தக் கிடங்கு செயல்பட உள்ளூர் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தென்கொரியாவில் தற்போது மின்சார உற்பத்திக்காக 20 அணு உலைகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டின் மொத்த மின் தேவையில் 40 சதவீதத்தை இந்த அணு உலைகள் நிறைவு செய்கின்றன. தென்கொரிய தலைநகர் சியோலில் இருந்து தென்கிழக்கில் 371 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கியோங்ஜூ என்ற இடத்தில் அணு உலைக் கழிவுக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

உல்ஜின் என்ற இடத்தில் செயல்பட்டு வரும் அணு உலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் இங்கு சேமிக்கப்படும். உல்ஜின் மட்டுமல்லாமல் கோரி வோல்சாங் மற்றும் இயான்வாங் ஆகிய அணு உலைகளில் இருந்து வரும் அணுக் கழிவுகளும் இங்கு சேமிக்கப்படும்.

உல்ஜிவில் இருந்து அணு உலைக் கழிவுகள் கியோங்ஜூவுக்குள் கொண்டு வரப்படுவதை எதிர்த்து சமீபத்தில் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்குள்ள கிடங்கு முழு வசதி பெறுவதற்கு முன்பே கழிவுகளைக் கொண்டு வருவதன் மூலம் அப்பகுதிக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என்றும் அவர்கள் கூறினர். (த)

# அசேஞ்ச் சுயசரிதைக்கு 21 கோடி ரூபா

தான் எழுதிய வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை பதிப்பித்து வெளியிட, பதிப்பகங்களுடன் 21 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துள்ளார் ''விக்கிலீக்ஸ்' நிறுவனர் ஜூலியன் அசேஞ்ச்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் இருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்' நாளிதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டி:

வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் மூலம் கிடைக்கும் பணத்தை என் மீது சுவீடன் பெண்கள் தொடுத்துள்ள வழக்கிலிருந்து விடுபட செலவிடுவேன். இந்தப் புத்தகத்தை எழுத நான் விரும்பவில்லை. ஆனாலும், செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஏற்கனவே சுவீடன் பெண்கள் தொடர்ந்த வழக்குக்கு, நான் ஒன்றரை கோடி ரூபா செலவழித்து விட்டேன். என்னை காப்பாற்றிக் கொள்வதற்காகவும் ''விக்கிலீக்ஸ்' நிறுவனத்தை தொடர்ந்து நடத்தவும் பணம் தேவைப்படுகிறது.நான் எழுதிய புத்தகத்திற்காக அமெரிக்க பதிப்பாளர் அல்ப்ரட் நாப் என்பவரிடம் இருந்து 11கோடி 50 லட்சம் ரூபாவும் பிரிட்டன் பதிப்பகமான கனோன்கேட்டிடம் இருந்து 7 கோடி 20 லட்சம் ரூபாவும் எனக்கு கிடைக்கும். பிற சந்தைகளில் இருந்து 2 கோடி 40 லட்சம் ரூபா கிடைக்கும்.

- இவ்வாறு அசேஞ்ச் தெரிவித்துள்ளார். (த)

## ஹப்பி கிறிஸ்மஸ்....



வாழ்த்து : அமெரிக்க அதிபர் ஒபாமா, ஹவாய் தீவில் உள்ள அமெரிக்க இராணுவப் படைத் தளத்தில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்களுடன் கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாடினார். ஒரு இராணுவ வீரரின் மனைவியுடன் ஒபாமா கைகுலுக்கிறார். அவரது மனைவி மிச்சேல், குழந்தைகளுடன் விளையாடுகிறார்.

# அமெரிக்காவில் இந்திய இளைஞர் கொள்ளையரால் சுட்டுக் கொலை

ஹூஸ்டன், டிசெ.28

அமெரிக்காவில் கடை ஒன்றில் பகுதி நேர ஊழியராக வேலை பார்த்த இந்திய இளைஞர், கிறிஸ்மஸ் தினத்தன்று அதிகாலையில் கொள்ளையர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்கா கலிபோர்னியா மாகாணத்தில், பசடெனா பகுதியில் உள்ள கடை ஒன்றில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஜெயச்சந்திர எலப்ரோலு (வயது - 22) என்ற வாலிபர் கடந்த மூன்று வாரங்களுக்கு முன் பகுதி நேர ஊழியராக வேலைக்குச் சேர்ந்தார். இவர் அருகிலுள்ள ஒரு கல்லூரியில் படித்து வந்தார். கிறிஸ்மஸ் தினத்தன்று அதிகாலையில் முகமூடி அணிந்த கொள்ளையன் ஒருவன் கண்ணிமைக்கும் நேரத்தில் கடைக்குள் நுழைந்து எலப்ரோலுவைச் சுட ஆரம்பித்தான். உயிர் பிழைப்பதற்காக எலப்ரோலு தன் இருக்கைக்குப் பின்னுள்ள கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முயன்றார். ஆனாலும் கொள்ளையன் ஐந்து முறை சுட்டதால் குண்டுகள் கதவையும் துளைத்து எலப்ரோலு மீது பாய்ந்தன. சம்பவ இடத்திலேயே அவர் இறந்தார். அவரைக் கொன்ற பின் பணப் பெட்டியை எடுத்துக் கொண்டு கொள்ளையன் பறந்து விட்டான். சம்பவம் நடந்த சில நிமிடங்களுக்குப் பின் ஒரு பெண் கடைக்குள் நுழைந்த பிறகுதான் எலப்ரோலுவுக்கு நேர்ந்த கதி தெரிந்தது. இதுகுறித்து விசாரித்து வரும் பெசடெனா பொலிஸார் கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ள காட்சிகளை உள்ளூர் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ளனர். கொலை தொடர்பாக இரண்டு நபர்களைத் தேடி வருகின்றனர். (த)

# பனிமழையால் மொஸ்கோவில் மின்தடை

மொஸ்கோ, டிசெ.28

ஐரோப்பா முழுவதும் பனிமழையால் விமான சேவை ரயில் சேவை மற்றும் சாலை போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் ரஷ்யாவும் மிகுந்த பாதிப்புக்குள்ளானது.தலைநகர் மொஸ்கோ நகரில் நேற்றுமுன்தினம் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மின்சாரம் இல்லாமல் அவதியுற்றனர். இது தவிர மத்திய ரஷ்யாவில் மற்ற பகுதியிலும் மக்கள் அவதிக்குள்ளாயினர். ரஷ்ய விமான நிலையங்களிலே மிகவும் பரபரப்பான விமான நிலையம் டிமோதிடோவோ. இங்கேயே எல்லா விமானங்களும் நிறுத்தி வைக்கப்பட்டன. இது தவிர ரயில்களும் நிறுத்தி வைக்கப்பட்டன.

வீதி எங்கும் பனிக்கட்டி நிறைந்ததால் போக்குவரத்து மிகவும் பாதித்தது. மேலும் வீதியில் சாய்ந்த மரங்களினால் பலர் கை, கால், எலும்பு முறிவால் பலர் அவதியுற்றனர். ஒருவர் பலியானார். தகவல் அறிந்த ரஷ்ய தலைமை சுகாதார ஆய்வாளர் கென்னடி விரைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தார். (த)

# அரச தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற மாடியில் இருந்து குதித்த நபர்

வலது குறைந்த குழந்தைகளுக்கான கொடுப்பனவை இரத்துச் செய்தல் தொடர்பில் ருமேனியாவின் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டுப் பிரஜை ஒருவர் நாடாளுமன்றத்தின் மேல் மாடியிலிருந்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

இச்சம்பவம் ருமேனிய மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் எமில் பொக் உரையாற்ற ஆரம்பித்துள்ளார். அதன்போது ''பொக் நீங்கள் எங்களுடைய குழந்தைகளின் உரிமைகளைப் பிரித்துவிட்டீர்கள்'' எனக் கூறியவாறு மேலிருந்து கீழே பாய்ந்துள்ளார். அவருடைய [illegible] நீங்கள் எங்களது எதிர்காலத்தைக் [illegible] பட்டிருந்தது. (த)

# சிக்காக்கோவில் பிரசாரத்தை ஒபாமா தொடங்குவாரா?

அமெரிக்க அதிபராக இருக்கும் ஒபாமா 2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு தனது பிரசாரத்தை சிக்காக்கோ நகரில் தொடங்குவார் என தகவல் வெளியாகி உள்ளது.இது குறித்து ஒபாமா உறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லை எனவும் சிக்காக்கோவில் இருக்கும் அரசியல் நோக்கர்கள் ஒபாமா தனது பிரசாரத்தை சிக்காக்கோ நகரில் தொடக்குவார் என தெரிவித்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் அதிபராக இருந்த ஜோர்ஜ் புஷ், கிளிண்ரன் ரொனால்ட் ரீகன் ஆகியோர் தங்களது பிரசாரத்தை வெள்ளை மாளிகையில் அருகிலோ அல்லது வேர்ஜினியாவில் தொடங்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் Eurostar இலத்திரனியல் பொருள்கள் அனைத்தும் Ukaaye நிறுவனம் மூலம் விநியோகம்



பிராந்திய முகாமையாளர் B. முத்துக்கிருஷ்ணன்

மத்திய கிழக்கு நாடுகளில் முன்னணி அடையாளமான Eurostar நுகர்வோர் இலத்திரனியல் மற்றும் வீட்டு உபகரணங்கள் பரந்த அளவில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதற்காக இலங்கைக்கான விநியோகஸ்தராக UKAAYE (PVT) LTD நிறுவனம் Eurostar இனால் நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நன்கு அறியப்பட்ட வர்த்தக நிறுவனம் 1996 முதல் Eurostar satellite systems இலங்கையின் அனைத்து பாகங்களிலும் விநியோகிக்கும் நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது.

அடுத்த கட்டமாகத் தற்போது நுகர்வோர் இலத்திரனியல் மற்றும் வீட்டு, சமயலறை உபகரணங்களை விநியோகிக்க ஆரம்பித்துள்ளது.

Eurostar LED தொலைக்காட்சி, LCD தொலைக்காட்சி, Plasma தொலைக் காட்சி, மற்றும் - Super Flat தொலைக்காட்சி, Pure Flat சலவை இயந்திரம் (Fully Automatic - Front & Top Loading & Semi Automatic), Air Conditioner (Split & Window), நுண்ணலை அடுப்பு (Microwave Oven), வெற்றிட தூய்மிப்பு (Vacuum Cleaner) DVD Player, Home Theater System & Roon Heater முதலான இலத்திரனியல் வீட்டு உபகரணங்கள் உள்ளன.

இவை அனைத்தையும் இலங்கையில் அறிமுகம் செய்வது தொடர்பான நிகழ்வு கடந்த 20ஆம் திகதி 'தாஜ் சமுத்திர' ஹோட்டலில் நடந்தது.

தேசிய கீதத்துடன் ஆரம்பமான நிகழ்வில் மகாவலி அமைச்சுக்கு பொறுப்பான பிரதி அமைச்சரின் இணைப்பு செயலாளர் ராஜீவ் சூரியராய்ச்சி உரையாற்றும்போது Eurostar நிறுவனம் தனது இலத்திரனியல் பொருட்களை இங்கே விற்பனை செய்வதற்கு வியாபாரத் துறையில் பல வருட அனுபவமுள்ள UKAAYE நிறுவனத்தை நியமித்துள்ளதைப் பெரிதும் வரவேற்றுப் பாராட்டினார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் டுபாயில் அமைந்திருக்கும் Eurostar நிறுவனம் உயர்தரமான இலத்திரனியல் பொருட்களைக் குடும்பங்களில் உள்ள அனைவரும் இலகுவாகக் கையளக் கூடிய விதத்தில் உற்பத்திசெய்து குறைந்த விலைக்கு வழங்கி வருகிறது என்று நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் B.முத்துக்கிருஷ்ணன் தமது உரையில் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு, ஆபிரிக்க நாடுகள், இந்தியத் துணைக்கண்டம் மற்றும் முன்னாள் ரஷ்ய குடியரசு முதலான 30 நாடுகளில் தமது நிறுவனம் காட்சியறைகளை அமைத்து நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்துவருகிறது என்றும் அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கையின் மஞ்சி றிட்ஸ்பரி வர்த்தக குறியீட்டு நாமங்கள் மும்பையில் தங்க விருதுகளை வென்றன




உலக வர்த்தக குறியீட்டு சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறந்த வர்த்தக குறியீடுகளுக்கான விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த பிரபல வர்த்தக நாமங்களான மஞ்சி மற்றும் றிட்ஸ்பரி ஆகியன தங்க விருதுகளை வென்றன.

இந்த விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இந்தியாவில் மும்பாய் நகரில் இடம் பெற்றது.

இந்த விருதுகளுக்காக பல்வேறு நாடுகளிலிருந்து உலகப்புகழ் வாய்ந்த FMCG துறை நிறுவனங்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுகள் குறித்து ஊடகங்களுக்கு அறிவிக்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிபிஎல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பிரிவின் தலைமை அதிகாரியும், குழுமப் பணிப்பாளருமான நந்தன விக்ரமகே உரையாற்றினார். விருதுகள் வழங்கும் நிகழ்வில் நந்தன விக்ரமகேக்கு, தனி நபர் விருதுகள் வழங்கும் பிரிவில் சிறந்த வர்த்தக முன்னிலையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.




# உலக வர்த்தகநாம மாநாட்டில் DSI பாதணிகளுக்கு விருது



வர்த்தகத் தலைமைத்துவப் பிரிவிலே DSI Supersport இற்கான விருதை D.Samson & Sons (Pvt) Ltd.இன் தலைவரான நந்தாச ராஜபக்ஷ பெற்றுக் கொள்கின்றார். CMO கவுன்சிலின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டொனோவன் நீல் மே மற்றும் Plaman Consulting நிறுவனத்தின் தீபக் கைஸ்தா ஆகியோர் விருதை வழங்குகின்றனர்.

நாடெங்கிலும் பாடசாலைச் சிறுவர்களினால் மிகவும் விரும்பப்படுகின்ற சப்பாத்து வர்த்தக நாமமான DSI Supersport இற்கு அண்மையிலே இந்தியாவின் மும்பை நகரிலே இடம்பெற்ற உலக வர்த்தகநாம மாநாட்டிலே 'பாதணிகளுக்கான வர்த்தக நாம தலைமைத்துவ விருது' வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு கடுமையான போட்டியாளர்களின் மத் தியிலே DSI Supersport வெற் றிவாகை சூடிக்கொண்டது.

முன்னணி வர்த்தகநாமமான DSI Supers port ஆனது நாடெங்கிலும் சிறுவர் பாதணிகளைப் பொறுத்தவரையிலே நம்பிக்கைமிக்க வர்த்தக நாமமாகத் திகழ்ந்து வருகின்றது.

"இது எமது முதலாவது சர்வதேச மட்டத்திலான விருது என்ற வகையிலே DSI Super sport வர்த்தகநாமத்திற்கு மட்டுமல்லாது D.Samson and Sons (Pvt) Ltd. நிறுவனத்துக்கும் மிகவும் பெருமையளிக்கின்ற ஒரு தருணமாகும். இந்த சர்வதேச ஒன்றுகூடலிலே பெரு மதிப்புமிக்க இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை DSI Supers port வர்த்தகநாமம் உலகமய இனங்காணல் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பாரியதொரு படியாக அமையப்பெற்றுள்ளது" என்று D.Samson and Sons (Pvt) Ltd.இனது மூலோபாய மற்றும் வர்த்தக நாமத் திட்டமிடல் முகாமையாளராகத் சாலிய அமரதுங்க கூறினார்.

# பிளாஸ்டிக்கினால் ஆண்மைக்கு அச்சுறுத்தல் என்று கண்டுபிடிப்பு

பிளாஸ்டிக் ஆண்மையைப் பாதிக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். பிளாஸ்டிக்கில் பிதாலேட் என்னும் இரசாயனம் உள்ளது. இதுதான் ஆண்மைக்கு எமனாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிதாலேட் எளிதில் ஆவியாகும் தன்மை கொண்டது என்பது தான் ஆபத்துக்கு காரணமாக இருக்கிறது.

இதனால் சுவரில் உள்ள பெயிண்ட் மற்றும் பொருள்களில் இருந்து சாதாரண சூரிய வெப்பத்தில்கூட பெதாலேட் மூலக்கூறுகள் உடைந்து ஆவியாகி காற்றில் கலக்கும். அது மட்டுல்ல சாப்பிடுவது, தண்ணீர் குடிப்பது போன்ற சாதாரண நேரங்களில் கூட பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்தினால் தண்ணீருடன் வினைபட்டு பிதாலேட் உணவுடன் கலந்து உடலுக்குள் செல்லுமாம்.

பிளாஸ்டிக் குழாய் வழியாக வரும் நீரை உபயோகப்படுத்திச் சமைப்பதும் ஆபத்தானது என்று கூறுகிறார்கள். இப்படிப் பல்வேறு வழிகளில் மனிதர்களின் உடலுக்குள் புகுந்துவிடும் பிதாலேட், பிறகுதான் தன் அசுரத் தன்மையைக் காட்டத் தொடங்குகிறது.

பிதாலேட் மூலக்கூறுகள் சிறுநீரகத்தை எளிதில் பாதிக்கின்றன. அதேபோல் டெஸ்டிரோஜென் எனப்படும் ஆண் ஹார்மோன்களை அழிக்கும் தன்மையும் உடையவை. எனவே காலப்போக்கில் ஆண்மையை இழக்க வைக்கும் ஆபத்தும் இருப்பதாகப் பல்வேறு ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

குறிப்பாக, கருவில் இருக்கும் ஆண் குழந்தைகளைத் தான் இந்த இரசாயனம் எளிதாகப் பாதிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. வருடத் திற்கு 60 லட்சம் தொன் பிதாலேட் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுவதாக ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. பல நிறுவனத்தினர் பிதாலேட் அளவை வெளியிடாததால் இந்த மதிப்பு, உண்மை மதிப்பை விடக் குறைவானது என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பிளாஸ்டிக் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், கடந்த 2005ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய்வில்தான் முதன்முதலாகப் பிளாஸ்டிக்கில் உள்ள பிதாலேட் இரசாயனம் ஆபத்துக்குரியது என்று தெரியவந்தது.

கர்ப்பமாக இருந்த எலிகளை ஆராய்ச்சி செய்தனர். அப்போது பிதாலேட் இரசாயனம் கருவில் உள்ள ஆண் எலிக் குட்டிகளில் டெஸ்டிரோஜென் ஹார்மோனைத் தடுப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆண்குறி வளர்ச்சியும் விதைகளின் செயற்பாடும் பாதிப்பு அடைவதும், இந்த நிலைமை அடுத்த சந்ததிகளுக்கு தொடரும் வகையில் நிலைபெறுவதும் தெரிய வந்தன.

நியோர்க்கில் உள்ள ரோசெஸ்டர் பல்கலைக்கழகம் பிறந்த ஆண் குழந்தைகளிடம் ஒரு ஆய்வை மேற்கொண்டது. 134 குழந்தைகளை ஆய்வு செய்த போது தாயின் வழியாக ஆண் குழந்தைக்கு பிதாலேட் பாதிப்பு தொற்றுவதாகத் தெரிய வந்தது. அது ஆணுக்குரிய பாலின ஹார்மோன் சுரப்பதையும், மறு உற்பத்தி ஆவதையும் தடுப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதே ஆய்வை அதிகம் பேரிடம் விரிவாக நடத்த அந்த ஆய்வுக்குழு முடிவு செய்திருக்கிறது.

இயந்திரங்கள் மூலம் உணவைப் பதப்படுத்தும் போதும், பிளாஸ்டிக் பாத்திரம் பொலிதின் பை ஆகியவற்றைப் பயன்படுத்துவதாலும் பிதாலேட் உணவுடன் கலக்கிறது.

பிளாஸ்டிக் கேன்களில் கிடைக்கும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைக் குடிப்பதன் மூலமும் இந்த இரசாயனம் மனித உடலுக்குள் நேரடியாகச் செல்கிறது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

# PC ஹவுஸ் புதிதாக மொபைல் போன் உபகரண வியாபாரத்தில் பிரவேசம்



இடமிருந்து வலமாக - PCH மொபையின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி பைலான் சலீம், PC House இன் எஸ்.எச்.எம். றிஷான் ஆகியோர் புதிய மொபைல் தொலைபேசிகளைக் காட்டுகிறார்கள்.

வலிமைமிக்கமொபைல் தொலைபேசிச் சந்தையிலே கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிடாது சிறப்பாக உபயோகிக்கும் வகையிலே இந்தியாவிலே மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற மொபைல் தொலைபேசி வர்த்தக நாமங்களுக்குள் ஒன்றான Karbonn உடன் PC ஹவுஸ் PC House PLC (PCH) மிக விரை விலே பங்காளராக இணைந்து செயற்படவுள்ளது.

PC ஹவுஸின் தலைவரான எஸ்.எச்.எம். றிஷான் கூறுகையிலே, "உள்ளூர் மொபைல் தொலைபேசிச் சந்தையிலே மிகவும் வெற்றிகரமாக நுழைந்துகொள்ளும் வகையிலே கவர்ச்சியான விலைகளிலே பன்முக அம்சங்களுடனான தொலைபேசி உபகரணங்களைச் சாத்தியமான விநியோக வலையமைப்பினூடாக அறிமுகப்படுத்தும் செயற்பாடுகளுக்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

சந்தையில் ஏற்கனவே பெரும் தொழிற்பாட்டாளர்களாகத் திகழ்கின்ற வர்த்தநாமங்களுக்கு இணையாகப் போட்டித்திறனுடன் செயற்படுவதற்காக உறுதியான சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக நாமமிடல் முன்னெடுப்புக்களும், சேவை வலையமைப்பும் திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றை நிறைவேற்றும் முகமாக PCH மற்றும் Karbonn ஆகியன நடப்பு நிதியாண்டிலே கணிசமான அளவு முதலீட்டை ஒதுக்கியுள்ளன என்றார்.

புதுடில்லியைத் தளமாகக் கொண்டுள்ள Jaina குழுமம் மற்றும் பெங்களூரைத் தளமாகக் கொண்டுள்ள UTL குழுமம் ஆகியவற்றின் கூட்டு வியாபாரமே Karbonn Mobile ஆகும். Jaina குழுமமானது சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் மொபைல் தொலைபேசி உபகரணங்களின் விநியோகத்தராகத் தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சி மேலிடத்தை இளங்கோவன் மிரட்டுகிறாரா?

## வீரபாண்டி ஆறுமுகம் கேள்வி

சென்னை,டிசெ.28

காங்கிரஸ் மேலிடத்தை ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மிரட்டுகிறாரா - என்று வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ். ஆறுமுகம்கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டணி அமைத்தால் தமிழகத்தில் காங்கிரஸ் தோற்றுவிடும் என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறியிருக்கிறார். இந்தக் கருத்து தி.மு.கவை பலவீனப்படுத்தும் என அவர் கருதினால், அது அவரது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுவதாகத்தான் எண்ண வேண்டியுள்ளது.

அதுமட்டுமல்லாமல் சோனியா காந்தியும், ராகுலும், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் போன்றவர்களுடைய கருத்தை மதித்து நல்ல முடிவெடுப்பார்கள் என நம்புகிறேன் என்று இளங்கோவன் சொல்லி இருப்பது, இவருடைய, இவரைப் போன்ற ஒரு சிலரின் கருத்தையும் கேட்காவிட்டால் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிப்போம் என்று தலைமையை மிரட்டுவதாகத்தான் அர்த்தம்.

காங்கிரஸின் தலைமை, ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் தடுமாற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிவார்கள் என நம்புகிறேன். 2004 இல் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி அமைந்து, இவர் கோபி செட்டிப்பாளையம் மக்களவைத் தொகுதியில் வெற்றி பெற்று மத்திய அமைச்சராக இருந்த போது இந்தக் கூட்டணி இவருக்கு இனித்ததா?

தி.மு.க. மற்றும் கட்சித் தலைமையையும், தொண்டர்களையும் களங்கப்படுத்தலாம் என்று கருதிக்கொண்டு பேட்டி கொடுப்பதை ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போன்றவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில், நாங்கள் தகுந்த பதிலடி கொடுப்போம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெஞ்சம் மறப்பதில்லை...



அழியா ஓவியம்: தமிழகத்தில் ஆழிப்பேரலை தாக்கிய தன் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் சென்னை மெரீனா கடற்கரையில் மணல் சிற்பம் உருவாக்கப்பட்டது.

# புலிகளிடம் ரூபா 2000 கோடி பெற்றிருந்தால் இந்நேரம் ஈழத்தை எழுதி வாங்கியிருப்போம்

## குற்றச்சாட்டை மறுக்கிறார் அக்கினிப்புயல்

சென்னை,டிசெ.28

விடுதலைப் புலிகளைப் பற்றி நான் பேசினால் சீமான் கோடி, கோடியாக பணம் வாங்கி விட்டார் என்று கூறுகிறார்கள். விடுதலைப் புலிகளிடம் இருந்து நான் 2 ஆயிரம் கோடி ரூபா வாங்கியிருக்கிறேன் எனவும், அந்தப் பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறேன் எனவும் பொய்யான தகவலைப் பரப்பி வருகிறார்கள். இவ்வளவு பணம் என்னிடம் இருந்தால் அதை மஹிந்தராஜபக்ஷவிடம் கொடுத்து எங்கள் பகுதியை எழுதி வாங்கி இருக்கமாட்டோமா?

- இவ்வாறு ஈழத் தமிழர் ஆதரவாளரும், நாம் தமிழர் கட்சித் தலைவருமான சீமான் கேள்வியெழுப்பினார்.

பெரியார் - எம்.ஜி.ஆர். நினைவு நாள் பொதுக்கூட்டம் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நாம் தமிழர் கட்சி சார்பில் நடந்தது.

இதில் கலந்துகொண்டு பேசிய அவர், மேலும் கூறியவை வருமாறு -

ஒரு லட்சம் துப்பாக்கிகளுக்கு மத்தியில் இலங்கைக்கு சென்று பிரபாகரனைச் சந்தித்து வந்தவன் நான். சிறையில் இருந்து எனது தம்பிமார்கள் முருகன், பேரறிவாளன், சாந்தன், தங்கை நளினி ஆகியோர் என்னைச் சந்தித்து விடக் கூடாது என்பதில் சிறைத்துறை அதிகாரிகள் கவனத்துடன் இருந்தனர். ஓடும் தண்ணீரை 5 மாதங்கள் தேக்கி வைத்து விட்டு பின்னர் திறந்து விட்டால் அது காட்டாற்று வெள்ளமாக ஓடும்.

அதைப் போல நானும் வேகத்துடன் செயற்படுவேன். தற்போது எனது தோளில் இரண்டு சுமைகள் உள்ளன. ஒன்று ஈழ விடுதலை, இன்னொன்று சிறையில் இருக்கும் எனது தம்பிமார்களின் விடுதலை.

இந்த இரண்டும் நடக்கும் வரை நான் ஓயமாட்டேன். தனி ஈழத்தை வென்றே தீருவோம்.

பிரபாகரனின் தம்பி என்ற உரிமையில் உங்களிடம் இதனைக் கேட்கிறேன். இந்தியாவுக்கு என்று இறையாண்மை, பண்பாடு எதுவும் இல்லை. தமிழ், மலையாளம், தெலுங்கு என பலமொழிகளின் பண்பாடே இந்தியப் பண்பாடு. தமிழுக்காக உயிரை இழக்கவும் தயாராக உள்ளேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# 2 ஜி ஊழலுக்கு தார்மிகப் பொறுப்பேற்று பிரதமர் ராஜினாமாச் செய்யவேண்டும்

## பா.ஜ.க. மீண்டும் வலியுறுத்து



லக்னோ,டிசெ.28

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நிகழ்ந்த முறைகேட்டுக்குத் தார்மிகப் பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன் சிங் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். பா.ஜ.க. தலைவர் அத்வானி மீது காங்கிரஸ் கட்சி கூறிய அபாண்டமான குற்றச்சாட்டுக்கு அக்கட்சி மன்னிப்புக் கோர வேண்டும் - என்று பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது.

2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் நிகழ்ந்த முறைகேடு தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்று பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. அமுலாக்கப் பிரிவு உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் விசாரணை நடத்தி வருகின்றன.

அரசியல் தரகர் நீரா ராடியாவுக்குச் சொந்தமான அறக் கட்டளை நிகழ்ச்சியில் பா.ஜ.க. தலைவர் எல்.கே.அத்வானி, நிதின் கட்கரி ஆகியோர் பங்கேற்றனர் எனவும் காங்கிரஸ் தரப்பில் குற்றம்சாட்டப்பட்டது. இந்த அறக்கட்டளைக்கான இடம் பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது என்றும் கூறப்பட்டது.

இதுதொடர்பாக பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறியவை வருமாறு -

முக்கியமான பிரச்சினையைத் திசை திருப்பும் முயற்சியை காங்கிரஸ் வெகு காலமாகவே செய்துவருகிறது. இதைப் போலத்தான் இப்போதும் ஹரியானாவைச் சேர்ந்த காங்கிரஸ் அனுதாபி தீரஜ் ராவ் மூலம் இத்தகைய அவதூறு பிரசாரத்தை காங்கிரஸ் மேற்கொண்டுள்ளது.

நீரா ராடியாவுக்குச் சொந்தமான அறக்கட்டளை விழாவில் அத்வானி பங்கேற்றார் எனக் கூறப்படுவது தவறான செய்தியாகும். அத்வானி, நிதின் கட்கரி ஆகியோர் பங்கேற்ற நிகழ்ச்சி பெஜாவர் மடம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியாகும்.

இந்த மடத்துக்குத் தேவையான இடம் நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது வழங்கப்பட்டது.

பின்னர் குஜராத் மாநில அரசு இதை வழங்கியது. இத்தகைய குற்றச்சாட்டு கூறிய தற்காக காங்கிரஸ் கட்சி மன்னிப்புக் கேட்க வேண்டும். - இப்படி அவர் தெரிவித்தார்.

# 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ரூ. 2 லட்சம் கோடிக்கு மேல் ஊழல்

## கம்யூ. பாண்டியன் குற்றச்சாட்டு

தஞ்சாவூர், டிசெ 28

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ரூபா 2 லட்சம் கோடிக்கு மேல் ஊழல் நடந்திருக்கும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் தெரிவித்தவை வருமாறு -

பா.ஜ.க. ஆட்சியில் 2001 இல் முதல் தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீட்டில் ரூபா ஒரு லட்சத்து 43 ஆயிரம் கோடி ஊழல் நடந்துள்ளது என மத்திய அமைச்சர் கபில்சிபில் கூறியுள்ளார். 2001 ஆம் ஆண்டிலேயே ரூபா ஒரு லட்சத்து 43 ஆயிரம் கோடி ஊழல் நடந்திருந்தால் 2008இல் ரூபா 2 லட்சம் கோடிக்கு மேல்தான் ஊழல் நடந்திருக்கும்.

ஆனால், 2008 இல் ரூபா 16 ஆயிரம் கோடிக்கு மட்டுமே 2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு நடைபெற்றிருக்கிறது என காங்கிரஸார் கூறுகின்றனர். இது ஏற்கத்தக்கதல்ல.

இதுவரை 5 முறை நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணையை அமைத்துள்ள காங்கிரஸார், அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் பிரச்சினையில் மட்டும் கூட்டுக் குழு விசாரணை அமைக்க மறுத்து வருகின்றனர். இந்தச் செயல், கூட்டுக் குழு விசாரணையில் இருந்து அவர்கள் நழுவ முயல்வதையும், ஊழல் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது.

அலைக்கற்றை ஊழல் பிரச்சினை தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் ராசாவை கைதுசெய்து உரிய தண்டனை கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது மட்டும் எங்கள் நோக்கமல்ல. இந்த ஊழலில் தொடர்புடைய அனைவரையும் விசாரித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடு. இந்தப் பிரச்சினையில் பாரபட்சமின்றி விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஜனநாயக நடைமுறை சீரழிவுகள் தி.மு.க. ஆட்சியில் தொடர்கதையாகிவிட்டன. எனவே, ஜனநாய மீட்புப் போராட்டம் என்ற கருத்தை மையப்படுத்தி வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள இந்திய கம்யூனிஸ்ட் முடிவு செய்துள்ளது. எங்களுடைய கருத்துகளுடன் ஒத்துவரும் கட்சிகளைக் கூட்டணியில் இணைப்போம். சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# 1,400 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமணர் கால குகை கண்டுபிடிப்பு

பழனி,டிசெ.28

பழனியை அடுத்த ஐவர்மலையில் சுமார் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சமணத் துறவிகள் வாழ்ந்த குகை மற்றும் வாழ்வியல் தடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் இருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது ஐவர்மலை.

அயிரை மலை என்றும் அழைக்கப்படும் இந்தப் பகுதியில் முற்காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் தங்கிச் சென்றனர் என செவி வழியாக அறியப்படுகிறது. மேலும், இங்கு சமணர்கள் வாழ்ந்த குகைகளும் உள்ளன.

சுமார் 1,400 ஆண்டுகளுக்கு முந்தைய ஐவர்மலை குறித்து பதிற்றுப்பத்து, குறுந்தொகை, சிலப்பதிகாரம் உள்ளிட்ட சங்க கால இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐவர்மலையில் தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி, தொல்லியல் ஆர்வலர்கள் தண்டபாணி, வாழிய நற்பணிமன்றத் தலைவர் ஞானசேகரன் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, தற்போதுள்ள குகையின் பின்புறம் அடர்ந்த புதர் பகுதியில் புதிய குகை இருப்பது தெரியவந்தது.

சுமார் 35 மீற்றர் நீளமுள்ள, இந்தக் குகையின் சுற்றுப் பகுதியில் புதர் மண்டிக் கிடப்பதாலும், ஆள் நடமாட்டமில்லாததாலும், சமூக விரோதிகளால் சமணர் படுகை போன்ற தடங்கள் அழிக்கப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

# றோவின் புதிய தலைவராக சஞ்சீவ் திரிபாதி

டில்லி,டிசெ.28

இந்திய உளவு அமைப்பான 'றோ' வின் தலைவராக சஞ்சீவ் திரி பாதி நியமிக்கப்படுகிறார் எனத் தெரிய வருகிறது.

தற்போது அவர் றோ அமைப்பின் துணைப் பிரிவான விமானப் போக்குவரத்து ஆய்வு மையத்தின் தலைவராக இருக்கிறார். டிசம்பர் 30 ஆம் திகதி முதல் அவர் 2 ஆண்டுகளுக்கு இப்பொறுப்பில் இருப்பார்.

தற்போது றோவின் தலைவராக இருப்பவர் கே.சி.வர்மா. இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி தான் முடிவடைகிறது. ஆனால் அதற்கு முன்பே பதவி விலக வர்மா முடிவெடுத்துள்ளார்.

இதையடுத்து அவரது இடத்திற்கு திரிபாதி கொண்டு வரப்படுகிறார். திரிபாதி வரும் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவிருந்தார். இந்த நிலையில் தற்போது அவருக்கு 'றோ' தலைவர் பதவி தேடி வந்துள்ளது.

'றோ' அமைப்பின் துணைப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் றோ அமைப்பின் தலைவர் பதவிக்கு வருவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர வரிசையில் யாழ். பல்கலை அணி முதலிடம்



யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்தில் நடத்திய சிறந்த கிரிக்கெட் அணிகளைத் தெரிவு செய்யும் தரப்படுத்தலில் யாழ். பல்கலைக் கழக அணி 44 புள்ளிகளைப் பெற்றுத் தர வரிசையில் முதலிடம் பிடித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக அணி 13 போட்டிகளில் பங்குபற்றி, ஐந்து 30 ஓவர்கள் போட்டிகளிலும், ஒரு 40 ஓவர்கள் போட்டியிலும் ஐந்து 50 ஓவர்கள் போட்டிகளிலும் வெற்றி பெற்று முதலாமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளது.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 37 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தது. ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 16 போட்டிகளில் பங்கு பற்றி மூன்று 20 ஓவர்கள் போட்டிகளிலும், ஏழு 30 ஓவர்கள் போட்டிகளிலும், இரண்டு 50 ஓவர்கள் போட்டிகளிலும் வெற்றி பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மூன்றாமிடத்தை யாழ். சென்றல் அணி பெற்றுள்ளது.

யாழ்.சென்றல் அணி 11 போட்டிகளில் பங்கு பற்றி இரண்டு 20 ஓவர்கள் போட்டிகளிலும் மூன்று 30 ஓவர்கள் போட்டிகளிலும், மூன்று 50 ஓவர்கள் போட்டிகளிலும் வென்று 28 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.

வெற்றி பெற்ற அணியினருக்கான பரிசளிப்பு வைபவம் ஜனவரி மாதம் இடம் பெறவுள்ளது. வீ.டி. ஜெயரட்ணசிங்க வெற்றிக் கிண்ணப் பரிசளிப்பின் போது தர வரிசையில் முதலிடம் வென்ற யாழ். பல்கலைக்கழக அணிக்கு வெற்றிக் கிணணமும் பணப் பரிசிலும் வழங்கப்படும்.(த-23)

# கிராமங்களை ஊடறுத்து ஓடும் போட்டி ஜனவரி 6 ஆம் திகதி முல்லைத்தீவில்

முல்லைத்தீவு,டிசெ.28

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழக வீரர், வீராங்கனைகளுக்கு இடையேயான கிராமங்களை குறுக்கறுத்து ஓடும் போட்டி அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியேறிவரும் நிலையில் இந்த விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அலுவலர் தனு மேற்கொண்டுள்ளார்.

கடந்த ஐந்து வருட கால இடைவெளியின் பின்னர் இப்போட்டிக்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு அலுவலர் முன்னெடுத்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட பாண்டியன்குளம் (மாந்தை கிழக்கு), துணுக்காய், ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் இளைஞர், யுவதிகள் இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் இடம்பெறும் இப்போட்டியில் ஆண்களுக்கு 12 கிலோ மீற்றர் தூரமும், பெண்களுக்கு 08 கிலோ மீற்றர் தூரமும் கிராமங்களை குறுக்கறுத்தோடும் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்,யுவதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-86)




# வடக்கு , கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான மாகாண மட்ட மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

இதில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கு கொள்கின்றனர் எனப் போட்டி ஏற்பாட்டளர் தெரிவித்துள்ளார். போட்டி தொடர்பாக மேலும் அவர் கூறுகையில், இந்தப் போட்டிக்கு அபான்ஸ் நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது. இலங்கை மேசைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் சந்தன பெரேரா, இலங்கை கிங் பொங் மேசைப் பந்தாட்ட அக்கடமி ஆகியவற்றின் ஆதரவுடன் இந்தப் போட்டி இடம்பெறவுள்ளது என்றார். (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு,டிசெ.28

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் ஆண்கள், பெண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

✱யாழ்ப்பாணம் காகேர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகம்.

✱கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம். (த-86)

# லலித் மோடி மீதான விசாரணைக்குத் தடை

மும்பை, டிசெ.28

லலித்மோடி மீதான ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் விசாரணைக்கு உயர்நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

ஐ.பி.எல். நிதிமுறைகேடு தொடர்பாகப் பதவி பறிக்கப்பட்ட ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித்மோடி மீது, இந்தியக் கிரிக்கெட் சபையால் அமைக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

இன்றும், நாளையும் ஒழுங்கு நடவடிக்கைக் குழு கூடி முக்கிய முடிவுகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே தன் மீதான ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் விசாரணைக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும், அக்குழுவை மாற்றியமைக்க வேண்டும் என்றும் லலித்மோடி மும்பை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.ஜே.கதவாலா, லலித்மோடி மீதான ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்தார். அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை தடை நீடிக்கும் என்றும் அவர் தீர்ப்பளித்தார்.

## சாதிக்கப் பிறந்தவர்கள்...



தொடரும் வெற்றி: யாழ். மாவட்டப்பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் முதல் தடவையாக யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவினருக்கான ஹொக்கிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள். (த-86)

# கிராமப் புறங்களிலும் செஸ்



செஸ் போட்டியை கிராமப் புறங்க ளில் பிரபலப்படுத்த வேண்டும் என இந்தியாவின் நட்சத்திர வீரர் விஸ்வநாதன் ஆனந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து உலக செஸ் சம்பியன் ஆனந்த் கூறுகையில், ''சமீப காலமாக இந்திய விளையாட்டு அரங்கில் கிராமப்புறங்களில் இருந்து நிறைய நட்சத்திரங்கள் வந்துள்ளனர். இவர்கள், கொமன்வெல்த், ஆசிய விளையாட்டில் பதக்கங்களை வென்று, நாட்டுக்கு பெருமை சேர்த்தனர். என்னைப் பொறுத்தவரை கிராம அளவில் விளையாடக் கூடிய போட்டியாக செஸ் உருவெடுக்க வேண்டும் என விரும்புகிறேன். இதற்கான முயற்சியில் இறங்க உள்ளேன்'' என்றார்.

# மெல்போர்னில் வோர்னுக்குச் சிலை



மெல்போர்ன், டிசெ.28

அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னுவுக்கு மெல்போர்ன் மைதானத்தின் வெளிப்புறத்தில் சிலை அமைக்க மெல்போர்ன் கிரிக்கெட் கழகம் முடிவு செய்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்காக அவர் அளித்துள்ள சிறப்பான பங்களிப்பைப் பாராட்டி அவரை கௌரவிக்கும் வகையில் சிலை அமைக்கப்படவுள்ளதாக அவுஸ்திரேலியாவின் 'ஹெரால்டு' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மைதானத்தின் வெளிப்புறத்தில் கிரிக்கெட் பிதாமகன் டான் பிராட்மேன் உள்ளிட்ட 10 விளையாட்டுப் பிரபலங்களுக்கு ஏற்கெனவே சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அங்கு வோர்னுவின் சிலை அமைக்க முடிவு செய்து அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது மெல்போர்ன் கிரிக்கெட் கழகம். அடுத்த ஆண்டின் கடைசிக்குள் சிலை திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மெல்போர்னில் பிறந்தவரான ஷேன் வோர்ன், அங்கு நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து மெல்போர்ன் கிரிக்கெட் கிளப் தலைவர் டேவிட் மெக்லிஜான் கூறுகையில், ''ஈடு இணையற்ற சாதனைகளைப் படைத்துள்ள வோர்னுக்கு ஏற்கெனவே 10 விளையாட்டு பிரபலங்களுக்கு சிலைகள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் சிலை அமைக்கப்படும்'' என்றார்.

2007ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரோடு வோர்ன் ஓய்வுபெற்றார். அவர் 145 டெஸ்ட் போட்டியில் 708 விக்கெட்டுகளையும், 194 ஒருநாள் போட்டியில் 293 விக்கெட்டுகளையும் எடுத்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டத்திலும் இங்கிலாந்து அபாரம்; 444 ஓட்டங்களைப் பொழிந்து தள்ளியது!

## ஆஸ்திரேலியாவின் பாடு திண்டாட்டம்



மெல்போர்ண், டிசெ. 27
ஆஸ்திரேலியாவை 98 ஓட்டங்களுக்குள் ம ட க் கி பந்துவீச்சில் அசத்திய இங்கிலாந்து அணி, துடுப்பாட்டத்திலும் ஓட்டங்களைப் பொழிந்து தள்ளியது. நேற்று ஆட்ட நேரம் முடியும்போது இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 444 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த 3 போட்டிகளின் அடிப்படையில் 1-1 என்ற கணக்கில் தொடர் சமனிலையில் உள்ளது.

இந்நிலையில், தொடரில் முன்னிலை வகிப்பது யார் என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக நான்காவது மோதல் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 42.5 ஓவர்களில் 98 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தனது இனிங்ஸை சுருட்டிக்கொண்டது.

பின்னர் தனது இனிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது, விக்கெட் இழப்பின்றி 157 ஓட்டங்களைப் பெற்று 59 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. ஸ்டிரஸ் 64 ஓட்டங்களுடனும், குக் 80 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். நேற்று மீண்டும் தனது இனிங்ஸைத் தொடர்ந்த இங்கிலாந்து அணிக்கு இரண்டாம் நாள் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை.

நேற்றுமுன்தினம் களத்தில் இருந்த ஸ்டிரஸ் (69) மேலதிகமாக 5 ஓட்டங்களைச் சேர்த்த நிலையிலும், குக் (82) இரண்டு ஓட்டங்களைச் சேர்த்த நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

எனினும், பின்னர் வந்த வீரர்கள் ஓட்டக்குவிப்பை ஆரம்பித்தனர்.

பின்னர், இணைந்த டிராட் - பீற்றர்சன் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பீற்றர்சன் அரைச்சதம் (51) கடந்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த கொலிங்வூட் (8), பெல் (1) ஆகியோர் ஏமாற்றிச் சென்றனர். எனினும், அடுத்து வந்த பிரையர், மறுமுனையில் நின்ற டிராட்டுடன் இணைந்து சிறப்பாக ஆடினார்.

இறுதியில் நேற்று ஆட்ட நேரம் முடியும்போது இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 444 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

டிராட் சதம் கடந்து 141 ஓட்டங்களுடனும், பிரையர் அரைச்சதம் கடந்து 75 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் சிடில் 3 விக்கெட்டுகளையும், ஜோன்சன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். நேற்றுவரையான கள நிலைவரப்படி இங்கிலாந்து அணி 346 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. 5 விக்கெட்டுகளையும் கைவசம் வைத்துள்ளது. இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

# நியூஸிலாந்து - பாகிஸ்தான் இரண்டாவது மோதல் இன்று

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது 'ருவென்ரி-20' போட்டி இன்று நடைபெற வுள்ளது. நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட 'ருவென்ரி-20' தொடர் நடைபெற்றுவருகிறது.

இத்தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, பல தோல்விகளைத் தொடராகக்கண்டு வந்த நியூஸிலாந்து அணி, முதலாவது போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தமது தொடர் தோல்விப் பயணத்துத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது.

மறுமுனையில் ஆடும் பாகிஸ்தான் கிரிக்கெட்டில், சர்ச்சைகள் நிறைந்த நிலைகாணப்படுகிறது. அந்தவகையில், முதலாவது போட்டியில் கண்ட தோல்வி அந்த அணிக்குப் பெரும் பின்னடைவாகவே அமைந்திருக்கும்.

இந்நிலையில், இன்று நடைபெறும் இரண்டாவது போட்டி இரு அணிகளுக்கும் மிக முக்கியமானவையாகக் காணப்படுகிறது.

இந்தப் போட்டியிலும் நியூஸிலாந்து வெற்றிபெற்றால் தொடரை பாகிஸ்தான் இழக்கும். மாறாக பாகிஸ்தான் வெற்றிபெற்றால் இரு அணிகளுக்கும் நெருக்கடியான நிலை கடைசிப் போட்டியில் ஏற்படும்.

எனவே, இன்றைய போட்டியில் மோதும் இரு அணிகளும், தம் மீதான சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவேனும் வெற்றிபெறவேண்டிய இக்கட்டான நிலையில் களமிறங்குகின்றமையால் போட்டியில் பரபரப்பு நிலை ஏற்படும் என




# 205 ஓட்டங்களுக்குள் முடிந்தது இந்தியாவின் முதல் இனிங்ஸ்!

## தென்னாபிரிக்காவின் துடுப்பாட்டமும் தடுமாற்றம்

டர்பன், டிசெ. 28
தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி, தனது முதல் இனிங்ஸை 205 ஓட்டங்களுக்குள் முடித்துக்கொண்டது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி அபார வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில், இரண்டாவது போட்டி டர்பனில் நேற்று ஆரம்பமாகியது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தடுமாற்றத்துடன் ஆடிவருகிறது. நேற்றுமுன்தினம் உணவு இடைவேளையின்போது 19 ஓவர்களை எதிர்கொண்டு 74 ஓட்டங்களுக்குள் 2 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

மதிய இடைவேளைக்குப் பிறகும் விக்கெட்டுகள் சிறிய இடைவெளியில் வீழ்ந்த வண்ணமிருந்தன. முதலாவது டெஸ்டில் 2ஆவது இனிங்ஸில் தமது 50ஆவது சதம் கண்ட டெண்டுல்கர் 13 ஓட்டங் களுடன் நடையைக் கட்டினார்.

பின்னர், லக்ஷ்மன், டிராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார். நிதானமாக ஆடிய டிராவிட் 25 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார். அவரைத் தொடர்ந்து லக்ஷ்மன் (38), புஜாரா (19) ஆகியோரும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது, இந்திய அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 183 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அணித்தலைவர் டோனி 20 ஓட்டங்களுடனும், ஹர்பஜன்சிங் 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்ரெய்ன் 4 விக்கெட்டுகளையும், சோட்சோப் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

நேற்றுமுன்தினம் ஆட்டம் மழை காரணமாக சற்றுத் தாமதமாகத் தொடங்கியதுடன், போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முடிய சிறிது நேரம் இருந்தபோதே போட்டி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

பின்னர் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 205 ஓட்டங்களையே சேர்த்தது. டோனி (35), ஹர்பஜன் (21) ஆகியோர் ஆட்டமிழந்த பின்னர் வந்த வீரர்கள் எவரும் ஒற்றை இலக்க ஓட்ட எண்ணிக்கையைக் கடக்க வில்லை.

தனது இனிங்சை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்றுத் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களையே பெற்றது. இதில் பீற்றர்சன் 24, அம்லா 33, பிறின்ஸ் 13, பௌச்சர் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ஹர்பஜன்சிங் 4 விக்கெட்டுக்களையும் ஷகீர்கான் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஷேவாக் 32, விஜய் 9, ராவிட் 2, சச்சின் 6



ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க சோர்ட்சோர்ப் 2 விக்கெட்டுக்களையும், ஸ்ரெய்ன, மோர்க்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். வி.வி.எஸ் லக்ஸ்மன் 23, புஜாரா 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

மூன்றாம்நாள் ஆட்டம் இன்றாகும். (23)



# நாம் நினைத்ததைச் செய்ய தென்னாபிரிக்க வீரர்கள் அனுமதிக்கவில்லை

டர்பன், டிசெ. 28
டிராவிட்டும் நானும் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஓட்டங்களைக் குவிக்கவேண்டும் என நினைத்தோம். ஆனால், தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர்கள் எம்மை விரைவாகவே 'பெவிலியன்' அனுப்பிவிட்டார்கள். அதனால், நாம் நினைத்தது நடக்கவில்லை.

- இவ்வாறு லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

தென்னாபிக்காவுக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாள் ஆட்டம் தொடர்பாகக் கருத்துக் கூறும் போதே இந்திய வீரரான வி.வி. எஸ். லக்ஷ்மன் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் [illegible]
செஞ்சூரியன் [illegible] விட டர்பன் மைதானத்தில் பந்து அதிகமாக மேலெழுந்து வந்தது.

செஞ்சூரியன் ஆடுகளம் 5ஆவது நாள் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாக மாறிவிட்டது. ஆனால், டர்பன் ஆடுகளம் அப்படி மாறுவதற்கான வாய்ப்பு இல்லை.

இதனால், 250 ஓட்டங்களை சிறப்பான ஓட்ட எண்ணிக்கையாகக் கருதுகிறேன்.

நானும், டிராவிட்டும் அதிக நேரம் களத்தில் நின்று ஆட நினைத்தோம். ஆனால் முடியவில்லை.

தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சு அபாரமாக இருந்தது. நான் இதுவரை சந்தித்த பந்து வீச்சாளர்களில் ஸ்ரெய்ன், மார்னே மோர்கல் இருவரும் சிறந்த பந்துவீச்சாளர்களாவர். - இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## HOTEL LUX ETOILES

34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

இந்த நிர்வாகம் தனது விரிவாக்கத்திற்கு, யாழ். குடாநாட்டிலேயே, முதன் முறையாக சுற்றுலா விடுதிக் கூட்டுத்தாபனத்தினால் **3 STAR HOTEL** - மூன்று நட்சத்திர விடுதி அனுமதி பெற்றதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தேவை தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள முன்னணி உல்லாச விடுதி தனது வியாபார விரிவாக்கம் காரணமாக மேலும் சில இளம் வயது கொண்ட ஆண், பெண்களுக்கு ஐரோப்பிய முறையில் பயிற்சியளித்து ஒப்பந்தத்தின் கீழ் வேலை வழங்க வாய்ப்பளிக்கின்றது.

1. அறை பராமரிப்பாளர் (***Room Services***)
2. காவலாளர் (***Security***)
3. ஓட்டோ ரைவர் (***Auto Driver***) டீசல் ஓட்டோ

**18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்ட ஆண், பெண் மட்டுமே சமுகமளிக்கவும்**

நேர்முகத் தேர்வு: நாளை (29.12.2010)
பிற்பகல் 2மணிமுதல் 5மணிவரை

## HOTEL LUX ETOILES

34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(108099)





விராட் விஸ்வப் பிரமனே நம

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட காளி கோயிலடி மல்லாகத்தைச் சேர்ந்த

**திரு. செல்லத்துரை இராசா**

மிருதங்கம் முகர்சிங் கலைஞர்
**(கலாபூஷணம், லயவாருதி, கலைச்சுடர்)**

அவர்கள் காளிகாதேவியின் அருளால் மேலும் பல விருதுகள் பெற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றோம்.

அன்பர்கள், நண்பர்கள்,
காளிகோயிலடி,
மல்லாகம்.

(108086)



சீட்டிழுப்பு இல. **2336**
திகதி **26.12.2010**

# மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: **X** வெற்றி எண்கள்: **8 2 3 7 1 2**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X | 8 | 2 | 3 | 7 | 1 | 2 | ரூபா. | 12,499,025/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 8 | 2 | 3 | 7 | 1 | 2 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 2 | 3 | 7 | 1 | 2 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 06 |
| 3ம் பரிசுகள் | | | | 3 | 7 | 1 | 2 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 71 |
| 4ம் பரிசுகள் | | | | | 7 | 1 | 2 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 691 |
| 5ம் பரிசுகள் | | | | | | 1 | 2 | ரூபா. | 100/= | பரிசுகள் | 6874 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. | 20/= | பரிசுகள் | 68293 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 8 | 2 | 3 | 7 | 1 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 08 |
| 8ம் பரிசுகள் | | 8 | 2 | 3 | 7 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 72 |
| 9ம் பரிசுகள் | | 8 | 2 | 3 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 701 |
| 10ம் பரிசுகள் | | 8 | 2 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 6819 |
| 11ம் பரிசுகள் | X | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 27421 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. **12,671,520.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **7,165,730.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk


வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்

# 2011ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 2011.01.01 தொடக்கம் 2011.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

## அட்டவணை

| தொ. இல | சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | கருவாட்டுக்கடை இல 4 | 750.00 | 7,500.00 | 39,000.00 | 250.00 |
| 2 | கருவாட்டுக்கடை இல 5 | 750.00 | 7,500.00 | 39,000.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 6 | 750.00 | 7,500.00 | 60,500.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 8,00,000.00 | 250.00 |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | இணுவில் பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 28,750.00 | |
| 2 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொள்கலத்தில் மாடுகள் வெட்டப்படல் வேண்டும் | 1,000.00 | 10,000.00 | 75,000.00 | |
| 3 | மல்வம் சந்தை | 500.00 | 5,000.00 | 53,500.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 50,000.00 | |

1. கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 2010.12.30 ந.ப 12.00 மணிவரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 2010.12.30 பி.ப 1.30 மணிவரை
3. கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் : 2010.12.30 பி.ப 2.30 மணிக்கு
4. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 9.11.2010ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும், எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்திலம் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி சு.முருகநேசன்,
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

*வலி.தெற்கு பிரதேச சபை,*
*சுன்னாகம்.*
*24.12.2010*

(வி/573732)




# வாழ்த்துகின்றோம்

திருமதி
**கலாநாயகி சோதிதாசன்** (B.Ed)
(ஆசிரியை, யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்)

அவர்கள் யாழ்.கல்விவலய ஆசிரிய ஆலோசகராக (I.S.A) பதவி உயர்வு பெற்றதையிட்டு பாராட்டி அவர் மேலும் பட்டங்கள் பல பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

டாக்டர் க.நவரத்தினம் தம்பதியினர்,
நடன முருகன் வைத்திய நிலையம்
யாழ்ப்பாணம்.



# மகத்தான சேவை நிறைவுடன் மணிவிழாக்காணும் மதுரத்தை மனமுவந்து வாழ்த்துகின்றோம்



முப்பத்து மூன்று ஆண்டுகள் இசை ஆசிரியையாகக் கடமையாற்றி இன்று (28.12.2010) இல் அறுபதாவது அகவையில் கால்பதித்து மணிவிழாக்காணும்

**திருமதி தெய்வநாயகி கிருஷ்ணசாமி**

அவர்கள் தனது சேவையினின்றும் ஓய்வு பெற்றாலும் 'எல்லோரும் வாழ வேண்டும்' என்ற வாழ்வியல் தத்துவத்துக்கு ஏற்ப தொடர்ந்தும் தனது சமூக சேவையைத் தொடர, பல்லாண்டு, பல்லாண்டு காலம் வாழையடி வாழையாக வாழவேண்டுமென எல்லாம் வல்ல வேம்படி விநாயகனைப் பிரார்த்தித்து அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

(108089)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா கணேசன்

(ஓய்வுபெற்ற, பொறியியலாளர், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்)



பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கணேசன் நேற்று (27.12.2010) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து தம்பையா (பிரசித்த நொத்தாரிசு, நீதிவான்) - தம்பையா இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான துன்னாலை கிழக்கைச் சேர்ந்த வ.சி.வடிவேலு-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், துஷ்யந்தன் (முகாமையாளர், பீப்பிள் லீசிங் Pettah Branch ), கீதாஞ்சலி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தி. திருச்செந்தூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் நல்லூர்), அபர்ணா ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், திருசாங்கன், கிருத்திகா ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும், காலஞ்சென்ற தம்பையா சிறீஸ்கந்தராஜா (பொறியியலாளர், நீர்பாசனத் திணைக்களம்) மற்றும் சிவபாதம், இராஜேஸ்வரியின் அன்புச் சகோதரரும், ரதிதேவி காலஞ்சென்ற சிவபாதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியள வில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் தெற்கு விலங்கன் குடும்ப இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
புன்னாலைக் கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
T.p.: 021 3215726.

(108100)

தகவல்:
குடும்பத்தினர்.

## மார்க்கண்டு சிவலிங்கம்



(பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம்)

பண்டிதர்வீதி, உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவலிங்கம் நேற்றுமுன்தினம் (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தார்.

அன்னார் மார்க்கண்டு - பரிமளம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜநாயகியின் (ஆசிரியை, றோ.க. பா. உரும்பிராய்) அன்புக் கணவரும் குமணன், சஞ்சயன், தாரகி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனேஸ்வரி, நாகேஸ்வரி, விக்னேஸ்வரி, சிவசக்தி, திருக்குமார் (மகப்பேற்று மருத்துவ நிபுணர், ஆதார வைத்தியசாலை கல்முனை), புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விமலபாலச்சந்திரன், பாக்கியராஜா, குகேந்திரன், பற்குணராஜா, ராஜேஸ்வரன், லதா, காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் மனோகரன், சிவனேசன், தர்மராஜா, சிவராஜா, கமலகுமார், விஜயகுமாரி (சிறுவர் வைத்திய நிபுணர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அஞ்சலிக்காக வலிகாமம் கிழக்கு வலயக்கல்விப் பணிமனையில் பிற்பகல் ஒரு மணிக்கு வைக்கப்பட்டு, பின்னர் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டிதர் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(108097)

தகவல்:
குடும்பத்தினர்.

## பத்மநாதன் புஸ்பாகரன்

(சாவகச்சேரி ப.நோ.கூ. எரிபொருள் நிலைய ஊழியர்)



சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த பத்மநாதன் புஸ்பாகரன் நேற்றுமுன்தினம் (26.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

தவிர்க்க முடியாத காரணத்தால் நேற்று நடைபெறாத அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2010) முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, மாலை 4 மணிக்கு பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் றோட்,
சாவகச்சேரி.

(சி-5/3/43)

தகவல் :
குடும்பத்தினர்.

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், டிசெ. 28

நாட்டில் இன்புளுவன்சா காய்ச்சல் பரவியிருக்கின்றமையால் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அதற்கான தடுப்பூசி வழங்க மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்டு இந்த நோய்க்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (204)


### வேலை வாய்ப்பு

D.M.I International Companyயின் இரண்டாவது கிளைக்குப் பின்வருவோர் தேவை. Supervisor, Asst.Manager, Manager 6 மாத காலப்பயிற்சி, பயிற்சியின்போது 15,000/= - 45,000/= வரை பெறமுடியும்.

தங்குமிடவசதி இலவசம்
தகைமை : O/L சாதாரண தரம், ஆங்கில அறிவு
அவசியம் 12 பேர் மட்டும் தேவை.
தொடர்பு : 0777397734,0775566224.

### வாடகைக்கு

K.K.S வீதி, யாழ். சிவன்கோயில் அருகில் நான்கு தளங்களைக் கொண்ட கட்டடம் (5,000 சதுர அடி) பின்பாதை வசதியும் 12,000 சதுர அடி கொண்ட வெறும் நிலமும் உடையது வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 0774836923, 0212225035

### தவறிவிட்டது

முருகமோட்டை, பரந்தன் என்னும் முகவரியைச் சேர்ந்த தம்பையா குகனேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (770075807V) 24.12.2010 அன்று தொட்டியடி, விசுவமடுவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கதிரவன் நகைமாடம், விசுவமடு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.P : 0770538723

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் கோண்டாவில் கிழக்கு சந்திக்கு அண்மையாக உதயன் சேவீஸ் ஸ்ரேசன் ஒழுங்கையில் இரு துண்டுக் காணிகள், மொத்தம் நிலப்பரப்பு 8 1/4, விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு
தொடர்புக்கு : 021 4591180, 0750398900.

வீட்டுக்கும் ஹோட்டலுக்கும்



ஸ்ரோஸ்
புறக்கோட்டை லிபர்டி ப்ளாஸா
2435383

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 புறொயிலர் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும். அத்துடன் சிறந்த Gold Win கோழித் தீவனங்களை யும் பெற்றுக் கொள்ளலாம்.

சிற்றி பாம் ரேடர்ஸ்,
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு. T.P. 0777238573.

மகமாயி ஸ்ரோர்ஸ்,
866, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் தட்டாத்தெரு எனும் வீதியில் (இத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) 4½ பரப்புச் சதுரக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு : 0774071551, 021 4900670

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:
075 045 4185

### தேவை

கொழும்பிலுள்ள தமிழ் குடும்பமொன்றுக்கு வீட்டு வேலை செய்வதற்கு 20 - 35 வயதிற்குட்பட்ட பெண் ஒருவர் தேவை.
தொடர்பு -
[illegible]


## 15th Death Anniversary

In Treasured Memory of

**MR A.R. RAJOO**

Asst. Commissioner of Excise
Northern Division,
President – Recreation Club, Chavakachcheri
Entered GLORY on Dec. 28th 1995.

"YOU WILL EVER REMAIN EVERGREEN IN OUR HEARTS"

Lovingly Remembered by your Children & Wife
at Chavakachcheri & Ottawa (Canada)

Rohan Sanjay Rajoo

*No.51, Kachchai Road,*
*Chavakachcheri.*

*Officer-in-Charge, Excise Department,*
*Vavuniya District.*
*T.P.No. 021 227 0029.*

## துயர் பகிர்வு



எமது விரிவுரையாளர் திருமதி சத்தியா ரஞ்சித் அவர்களின் அன்புத் தந்தையார் **முதலித்தம்பி சிவபாதம்** அவர்களின் மறைவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருடன் எமது துயரைப் பகிர்ந்து கொள்வதோடு, அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(108090)

இணைப்பாளர், விரிவுரையாளர்கள்,
கல்விமாணி மாணவர்கள்
2ம் வருடம் (2010/11) யாழ். மத்திய கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் வலிகாமம் கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளருமாகிய **மார்க்கண்டு சிவலிங்கம்** அவர்கள் அகாலமரணமடைந்ததையிட்டு எமது கண்ணீரஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-573/38)

கலாசாலை சமூகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

## கண்ணீர் அஞ்சலி

யா/ வல்லை மகளிர் வித்தியாலய ஆய்வுகூட உதவியாளர்

**திருமதி பாசமலர் சாந்தகுமார்**

அவர்கள் 24.12.2010 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(105482)

யாழ். வல்லை மகளிர் வித்தியாலயம் (VVT),
அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலைச் சமூகம்.


### வேலை ஆள்கள் தேவை

பிரபல புடவை வர்த்தக நிலையமொன்றிற்கு அனுபவமுள்ளவர்களும் பழகவிரும்புபவர்களும் உடன் தேவை.

1. விற்பனையாளர் (ஆண்/பெண்),
2. சிட்டை எழுதுனர் (வயது 40 - 50 வரை)

தொடர்புகளுக்கு: தொ.பே. 0773321700

Cey Labs Solutions (Pvt) Ltd.

CeyLabs Solutions (Pvt) Ltd.
#204, Brown Road,
Jaffna.

எமது நிறுவனத்தால் சிறப்பான முறையில் வழங்கப்படும் சேவைகள்

- Web System Development (இணையத்துடன் தொடர்புடைய மென்பொருட்கள்)
  - E-Commerce Systems (மின்-வணிகம் தொடர்பான மென்பொருட்கள்)
  - E-Learning Systems (மின்வழிக்கற்றல் தொடர்பான மென்பொருட்கள்)
  - Online Reservation Systems (இணையத்தினூடான முற்பதிவு மென்பொருட்கள்)
- Software Development (மென்பொருள் வடிவமைப்பு)
  - Stock Control Systems
  - ERP Systems
  - Point of Sale Systems
  - Student Management Systems
  - HRM Systems
  - Payroll Systems
- Security System Installations (பாதுகாப்பு கண்காணிப்புக் கருவிகள்)
  - Automated Alarm Systems
  - CCTV Cameras
  - Access Control (Finger Print Systems)
- Network Support Services (வலைப்பின்னல் சேவைகள்)
- Website Development

www.ceylabs.com
021-2221807
contact@ceylabs.com
077-2517223


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்பட்டன. பாதுகாப்புச் செயலர்களின் சந்திப்பின் போது இருவரும் தமக்கிடையில் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக்கொண்டனர். இந்தச் சந்திப்பில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசேரா சமரசிங்க, விமானப் படைத் தளபதி ஏயன் ஷீப் மார்ஷல் றொஷான் குணதிலக ஆகியோரும் உடன் இருந்தனர். இந்தியக் குழுவுக்கும் இலங்கைக் குழுவுக்கும் இடையில் நீண்டநேரப் பேச்சு இடம்பெற்றது.

இந்தப் பயணத்தின் போது நல்லெண்ண அடிப்படையில் ஏவுகணைகள் மற்றும் ராடர்களையும் இந்தியா இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெருகி வரும் சீனச் செல்வாக்குக்கு ஈடுகொடுக்கும் வகையில் இலங்கையின் பாதுகாப்புக்கு இந்தியாவும் அதிகளவில் பங்களிப்புச் செய்ய முனைவதையே இது காட்டுகிறது என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கைக் கடற்படையின் 60ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா வந்து சென்ற சில வாரங்களில் இந்திய பாதுகாப்புச் செயலர் இலங்கை வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தமிழர்கள் பகுதி.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளார். ''பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போன்று அப்பாவி மக்களையும் அரச ஊழியர்களையும் பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர், அதிபர்களையும் பாடசாலை வாத்தியக் குழுவினரையும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொள்ள வற்புறுத்தியமை மனித உரிமைகளை மீறும் ஒரு செயற்பாடு'' என்று அறிக்கையில் அவர் கண்டித்துள்ளார்.

எதிர்வரும் தைப்பொங்கல் விழாவை கலை நிகழ்வாக மாற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் அவசியமானவைதானா என்று கேள்வி எழுப்பி உள்ள சங்கரி, தனது 40 ஆண்டுகால நண்பரான பிரதமர் தனது வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பார் என்று தான் நம்புகிறார் எனவும் கூறி உள்ளார்.

கட்டாயப்படுத்தி தமிழ்ப் பகுதிகளில் சிங்களத்தில் தேசிய கீதம் பாடவைத்தவர்களுக்குப் பிரதமர் நல்லறிவு புகட்டுவார் என்ற தனது எதிர்பார்ப்பையும் அவர் தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளார். ஒட்டுமொத்தத்தில் தேசிய அனர்த்த பாதுகாப்புத் தினம் தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதுடன் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக அமைந்துள்ளது என்று அவரது அறிக்கை மேலும் கூறுகிறது. (உ)

## 3 தமிழ் எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொள்வர் என அரச வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

நுவரெலியா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இலங்கைத் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் பி.திகாம்பரம், பிரஜைகள் முன்னணியின் செயலாளர் ஜே.ஸ்ரீரங்கா, கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன், காலி மாவட்ட ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மனுஷ நாணயக்கார ஆகியோர் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, காலி மாவட்ட ஐ.ம.சு. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சச்சின் வாஸ், கம்பஹா மாவட்ட ஐ.ம.சு. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஆகியோருக்கும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதியமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ள எட்டுப் பேரில் இருவரது பெயர்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த இருவரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்களாகஇருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-சி)

## காணாமற் போனோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் ஆதரவு வழங்கியிருந்தபோதிலும், சில பிணக்குகள் இதுவரை தீர்க்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆள்கடத்தல்கள், காணாமல் போதல் சம்பவங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தப் பிரகடனம் அமுல்படுத்தப்படுகிறது.

கைதுகள், தடுத்து வைத்தல், கடத்தல் மற்றும் அதிகாரத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் நோக்கிலும், காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்தல், குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை வழங்குதல் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களைப் பாதுகாக்கும் வகையில் அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலும் இப்பிரகடனம் அமுல்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் இந்தப் பிரகடனத்தின் ஊடாக கடத்தல், காணாமல் போதல் போன்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு சர்வதேச ரீதியில் நியாயம் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(உ-சி)

## உரும்பிராயில் பிரதிக் கல்விப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கியுடன் வந்த அந்த நபர் சிவலிங்கத்தின் மகளது தோட்டை மட்டும் பறித்துச் சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற வேளை கொலையுண்டவரின் மனைவியான ஆசிரியையும் அவர்களது இரு மகன்மாரும் அருகிலுள்ள பிரதிக்கல்விப் பணிப்பாளரின் தாயாரின் வீட்டில் தங்கி இருந்தனர் என்றும் வீட்டில் அவரும் அவரது 13 வயதான மகளும் மட்டுமே தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

தமது மகளுடன் இருந்த பிரதிக்கல்விப் பணிப்பாளர், நித்திரைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார். அவ்வேளையில்தான் அவரது மகள் வீட்டு விறாந்தையில் துப்பாக்கியுடன் ஒருவர் நிற்பதைக் கண்டார். அந்த நபரைக் கண்டதும் பயத்தில் கத்திக் குளறியவாறு தந்தையை கட்டிப்பிடித்துக்கொண்டார்.

அவ்வேளை துப்பாக்கிதாரி ''தோட்டைக் கழற்றித்தா'' என்று மிரட்டியுள்ளான். பிள்ளை நடுங்கியவாறு தோட்டைக் கழற்றி கொண்டிருந்தது அவ்வேளை அவரது தந்தையை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தான் கொலையாளி.

கழற்றிக்கொடுத்த தோட்டுடன் மட்டுமே கொலையாளி அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டான்.

சூட்டுச் சத்தங்களைக் கேட்டு சில நிமிடங்களில் அயலவர்கள் அங்கு விரைந்தனர். பிரதிக்கல்விப் பணிப்பாளரின் மனைவியும் இரு மகன்மாரும் அங்கு ஓடோடி வந்தனர்.

உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் குற்றுயிருடன் கிடந்த பணிப்பாளரை யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர். எனினும் அவர் இடை வழியிலேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9)

## விடுதலை கோரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பகத் தன்மையும், முன்னேற்றகரமானதாகவும் இருப்பதோடு தடுத்து வைக்கப் பட்டுள்ளோர், சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரின் பிரச்சினைகளை யும் கவனத்துடன் அவதானித்து வருவது எம்மத்தியில் எமக்கோர் முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை தோற்றுவித்துள்ளது.

பிணை இன்றியும், துரித விசாரணை இன்றியும் சிறைச்சாலைகளில் நாம் வாடிக்கொண்டிருக்கின்றோம். எமது குடும்பங்கள் கடந்தகால போர்ச் சூழலினால் இருப்பிடங்களையும், குடும்ப உறுப்பினர்களையும், அவயவங்களையும் இழந்து போர் வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்றன.

விடுதலை ஏக்கத்துடன் எவ்வளவோ சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து மரண வேதனையில் நடைப்பிணங்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவினராகிய தாங்கள் பூஸா தடுப்பு முகாமுக்குச் சென்று தமிழ்க் கைதிகளை சந்திக்க உள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம்.

அந்த வகையில் அநுராதபுரம் சிறைச்சாலை மற்றும் ஏனைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளாகிய எங்களையும் சந்தித்து எமது பிரச்சினைகளையும் கேட்டறிந்து எங்கள் வளமான எதிர்கால வாழ்வுக்கு வழி அமைத்துத் தருமாறு மிகவும் பணிவுடன் அருள்கூர்ந்து வேண்டுகின்றோம்.

- இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நடுக் கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று வட இலங்கை கடற்றொழில் சமாசங்களின் தலைவர் தவரட்ணம் நேற்றிரவு தெரிவித்தார்.

இவர்களை விரைவில் சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

## வெள்ளத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

இந்தக் கன மழை காரணமாக நாட்டின் மிகப் பெரிய நீர்த்தேக்கத்தின் துருசுகள் திறந்து விடப்பட்டன என்று அனர்த்த முகாமைத்துவ துணைப் பணிப்பாளர் ஏ.ஆர்.ஜெயரட்ண தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக இதுவரை 532 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (உ)


THE SCIENCE CORNER CLOCK TOWER LANE - JAFFNA
2013 A/L - TAMIL, ENGLISH Medium
ஆரம்பம் : 01.01.2011 சனி
ENGLISH Medium 2.30 P.m
தமிழ் மூலம் 11.00 A.m
வழமையான ஆசிரியர் குழாம்

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
கே.கே.எஸ். றோட், இணுவில்
(இரு இடத்திலும்)
A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவு
ஜனவரி 2 இல்
காலை 8 மணி
★ உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
DSI, BATA பாடசாலை மாணவர்களுக்கான பாத அணிகளை பெற்றுக்கொள்ளலாம்
கபிலா பாதணியகம் 13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கபிலா காலணியகம் 24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


காணவில்லை
கறுப்பு நிற (கால்கள் மண்நிறம்) டாசென் குறொஸ் இன நாய்க்குட்டி ஒன்றை கன்னாதிட்டி பகுதியில் நேற்று முதல் காணவில்லை. கண்டவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 0776081701, 0770777443

வீடு வாடகைக்கு
தனியார் நிறுவனங்கள், கம்பனிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் பயன்பாட்டுக்கு ஏற்ற 25 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதியுடன் புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. தொ.பே. 0726995175

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
10-01-2011
Batch 9 : 09.00 AM - 01.00 PM
Batch 10 : 01.30 PM - 05.30 PM

கட்டட வேலைகள் செய்துகொடுக்கப்படும்
வீடு கட்டுதல், திருத்துதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், சுற்றுமதில் கட்டுதல், வர்ணம் பூசுதல், Electric வேலைகள், Plumbing வேலைகள் அனைத்தும் தரமாகவும் நியாய விலையிலும் செய்துகொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRTUCTION, JAFFNA.
தொடர்புகளுக்கு : 0776679564, 0213207202, 0213218088

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY
அபன் சாதிலை INORGANIC
ஆரம்பம்: 29.12.2010 ஆரம்பம்: 02.01.2011
Wed., Fri. - 5.15 - 06.15p.m Sat., Sun. - 11.45 - 12.45


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன்·(பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org